கல்கி

KALKI
9.3.2003
ரூ.6.00



வீடு
மனை
மகிழ்ச்சி!

-இலவச
இணைப்பு

புடவைக்கு
குட்பை...?



Visit model flat

Waterford

apartments

72/1-14, East Coast Road, Thiruvanmiyur. (Walkable distance from Thiruvanmiyur bus terminus) Site Phone : 98410 16333

Comfort Good water supply | Optimum utilisation of space | Fitness centre | Indoor games | Two lifts | RWH | Hydro-pneumatic water supply system | Stand-by generator | Backup power supply of 500 watts | Counters in terrace for special occasions

Convenience Very near to schools, offices, super markets, banks, hospitals, places of worship and beach.

Confidence Promoted by Appaswamy Real Estates, whose quality and timely delivery, hundreds of happy families will vouch for.

2 bedroom	3 bedroom
855 sq.ft.	1233 sq.ft.
883 sq.ft.	1245 sq.ft.
900 sq.ft.	1367 sq.ft.
Penthouse	
1099, 1656 & 1802 sq.ft.	

Rate Rs. 1,650 per sq.ft. **Special Inaugural Offer Rs. 1,600 per sq.ft.**

Save Rs. 45,000 to Rs. 90,000/-

Possession By December 2003.

Call with confidence. Comfort will be yours.

Assured Built Up Area.

Appaswamy Real Estates Limited

Mangesh Street, T. Nagar, Chennai - 600 017.


Phone : 2434 9090, 2434 6333 e-mail : areltd@vsnl.com

www.appaswamy.com



பூமியைப் பிளந்து
விதையின் முளைகள்
எட்டிப் பார்த்தன
ஈ, கொசு, பாம்பு,
எலி, தவளை
சுற்றி நின்றன
நானென்ன பெண் சிசுவா -
இத்தனை வில்லன்கள்?
முளை வியந்தது!

- கோவை எஸ். திருமலை



மார்ச் 8


கல்கி
9.3.2003

வட்டமேஜை

✉ 'மதவெறியர்கள் மாநாடு' தலையங்கம் மிகவும் நேர்மையானது. நாட்டில் கலவரங்களும் சீரழிவும் ஏற்படுவது தொகாடியா போன்ற வெறியர்களால்தான். இவர்கள்தான் உடனடியாக பொடாவில் கைது செய்யப்பட வேண்டியவர்கள். இவர்கள் வைகோ. மாதிரி 'ஜெ'வின் விரோதிகள் அல்லவே! பலமாக ஒட்டப் போகும் பி.ஜே.பி.யின் நண்பர்கள். அரசியல், கொள்ளையர், வேடுவர்கள் கையில் மாட்டிக் கொண்டுவிட்டது. தொடர்ந்து போராட கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை, குமார வேல்

உள்நோக்கம் உண்டா?



✉ 'மதவெறி மாநாடு' பற்றி பிரதமரும், உள்துறை அமைச்சரும் கண்டிக்காததை விடுங்கள். பெரியாரின் முதன்மைச் சீடர் என்று தம்மை முன்னிலைப் படுத்திக் கொள்ளும் வீரமணிகூட இதைப் பற்றி மூச்சே விடவில்லையே!

கோயம்புத்தூர், ஆர்.எஸ்.லட்சுமி

✉ 'யானைக்கு மதம் பிடித்தால் கும்பிடுவோமா?' என்றால், யானைக்கு மதம் பிடிக்க வைத்தால் என்ன செய்யும்?... மதம் பிடிக்க வைத்த பாகனையே கொல்லும். மக்களைப் பிச்சையெடுக்க வைக்கும் மதங்களிடையே 'நீ உன் மேல் நம்பிக்கை வை, சத்தியத்தைக் கடைப்பிடி, நன்றாக உழை, பலனுக்குக் காத்திராதே, பலன் தானாக வந்தடையும்'' என்று உயர்ந்த கீதையை போதிக்கும் இந்துக்களின் மாநாட்டை தீவிரவாத மாநாடு என்று கொச்சைப் படுத்துவது சரியா?

சென்னை, கே.சுப்பிரமணியன்

✉ 'மதவெறி மாநாடுகள்' என்று மண்டைப் போடாகப் போட்டுள்ளீர்கள் சந்தோஷம். அதே வேளையில் நம் மதத்திலுள்ள குறைகளையும் குறைவு ஏற்படுத்துகிற மதத் தலைவர்களையும் நாங்கள் எதிர்க்கிறோம். மற்ற மதத்தில் இது உண்டா? எத்தனை முஸ்லிம் இளைஞர்கள், எத்தனை கிறுஸ்துவ இளைஞர்கள் தங்கள் மதத்தைக் குறை கூறி எதிர்க்கிறார்கள்? கிடையாது, நிச்சயம் கிடையாது. அதற்கான பக்குவத்தை அடிப்படையில் கொண்ட ஒரே மதத்தினர் இந்து மதத்தினர் என்று இறுமாப்புடன் கூறிக் கொள்கிறேன்.

மணப்பாறை, து.ஆனந்திராஜா

✉ ஐம்பது ஆண்டுகளாக எம்மதமும் சம்மதம் என்று நமது அரசியல் அமைப்பும், தலைவர்களும் அரவணைத்த சிறுபான்மையினர் நமக்கு அளித்த பரிசு, சமுதாயத்தில் உள்ள பலவீனங்களைப் பயன்படுத்தி கோடிக்கணக்கான மக்களை

✉ எல்லா அரசுகளும் இடைத் தேர்தல்கள்போது அந்தத் தொகுதிகளுக்கு நன்மைகள் செய்வதும் வாக்குறுதிகளை அள்ளி வீசுவதும் வழக்கமான ஒன்றுதான். காங்கிரஸும் தி.மு.க.வும் இக்கலையில் கை தேர்ந்தவை. இந்த இடைத் தேர்தலைச் சாக்கிட்டாவது அந்தத் தொகுதி மக்களுக்கு நல்ல சாலை, குடிநீர் வசதிகள் கிடைப்பதை ''ஐயோ! என்ன அநியாயம்?'' என்று ஒப்பாரி வைப்பது அருவெறுப்பு மட்டுமல்ல, அசிங்கம்கூட.

சென்னை, ஏ.என்.கோமலவள்ளி

காலத்தில் கட்டுப்படுத்த, ஹிந்து இளைஞர் எழுச்சி மாநாடு நடத்துவதை 'கல்கி' உள் நோக்கத்தோடு விமர்சிப்பது வேதனையாக உள்ளது.
சென்னை, சுஜாதா

✉ ஒரு மதச்சார்பற்ற அரசின் முதல்வர் ஜெயலலிதா, இந்து இளைஞர் மாநாட்டுக்கு எப்படி அனுமதி அளித்தார் என, எஸ்.என். நிஜாமுதீன் என்பவர் வினவியுள்ளாரே! இதற்குமுன் எத்தனையோ முஸ்லிம் எழுச்சி மாநாட்டுக்கு இதே அரசு அனுமதி அளிக்க வில்லையா, இது இவருக்குத் தெரிய வில்லையா? அல்லது அது மட்டும் இவருக்கு மதச் சார்பின்மை நடவடிக்கையாகத் தெரிகிறதா? தாங்களும் அந்த மாநாடுகளைப் பற்றி மட்டும் கொஞ்சமும் விமர்சிக்காமல், இந்த மாநாட்டைப் பற்றி ஏதோ நடக்கக் கூடாதது நடந்தது போல் தலையங்கத்தில் எழுதியுள்ளீர்களே, எங்கே போயிற்று நடு நிலைமை?
மதுரை, பாலு

சென்னை வாசகி சுஜாதா எழுதியது போல 'கல்கி'க்கு உள் நோக்கம் இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா? அப்படியானால் அது என்ன? எழுதுங்கள்.

– ஆசிரியர்

புரிந்ததும் புல்லரித்தது!



✉ 'சொட்டு' சிறு கதைக்கு ஷொட்டு கொடுக்கலாம். தண்ணீர் ஓட்டம் எப்படியோ, கதை ஓட்டம் சிறப்பு.
திருநெல்வேலி, பகவதி

✉ மினி ஃபாண்டா விளம்பரத்தில் சிம்ரன் வருகிறார் என்று தெரியும். ஆனால் எதற்கு என்று புரிவதற்குள் அடுத்த விளம்பரம். ரோஷிணியின் பேட்டியின் மூலம்தான் பின்னணி புரிந்து, புல்லரித்தது!
பள்ளிப்பாளையம், ரஞ்சனிப்பிரியன்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited, Kalki Buildings, 47-NP, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

பெண்ணுடல் பற்றி ஏன் எழுதக் கூடாது?

உமா மகேஸ்வரி பேட்டி

தமது 'நெடி' சிறுகதைக்காக 'கதா' விருதை வாங்கி வந்திருக்கிறார் எழுத்தாளர் உமா மகேஸ்வரி.

மனிதக் கழிவுகளை மனிதன் அகற்றும் நிலையைப் பார்க்கும், கிராமத்து மேல்தட்டுப் பெண்ணின் உறுத்தலாக கதைப் பயணப்பட்டாலும், மிகவும் நுட்பமான உணர்வுகளும், சிறந்த மொழியாளுமையுமே 'நெடி'யின் பலம்.

"என்னோட கதைகள் கற்பனையல்ல. சொந்த வாழ்வனுபங்கள்லயிருந்து எனக்கு அல்லது இன்னொருத்தருக்கு ஏற்படற பாதிப்பைத்தான் பிரதிபலிக்கின்றன. அனுபவங்கள்லயிருந்து உருவாறதுதான் உண்மையான படைப்புன்னு நினைக்கிறேன். அதுதான் படைப்பாகவும் இருக்க முடியும். இல்லைன்னா, அது வலிந்து செய்யப்பட்ட ஒரு பிராடக்டாத்தான் இருக்கும். என் கதைகளைப் படிக்கறவங்க தன்னோட பிரதிபலிப்பை அதுல பார்க்க முடிஞ்சா, அது போதும். அதுக்காக கதை, கவிதை எழுதி சமுதாயத்தைப் புரட்டிடலாங்கறதெல்லாம் முடியாத விஷயம். படைப்புங்கறது தகவல் பரிமாற்றத்துக்கான ஒரு வழிதான்!" என்கிற உமா மகேஸ்வரி ஆண்டிப்பட்டியில் வசித்து வருகிறார்.

பெண்மையின் தனிமொழியும், தனிமையின் ரணங்களும் கொண்ட இவரது சிறுகதைகள் 'மரப்பாச்சி' தொகுப்பாக வெளி வந்திருக்கிறது.

"1985ம் ஆண்டிலிருந்தே எழுதிட்டு வர்றேன். சின்ன வயசுல நோய் வாய்ப்பட்டிருந்தேன். தனிமை. அப்ப ஒரு துணை தேவையாயிருந்தது. 'டைரி' எழுத ஆரம்பிச்சேன். எழுத்தின் மீது காதல் வந்தது. பிறகு மொழியை வயப்படுத்த நினைச்சேன். அது மனநிறைவைத் தந்தது. அப்புறம் கவிதை எழுத ஆரம்பிச்சேன். ஆரம்பத்திலேயிருந்தே என் கவிதைகள் கவனிக்கப்பட்டதுல எனக்கு உற்சாகம். அதுதான் என்னை உள்ளுக்குள்ள இருந்து அரிச்சு அரிச்சு எழுதத் தூண்டுது. வரையறைக்கு உட்படாத வசீகரம்தான் கவிதை மீதான ஈடுபாட்டுக்கு, காரணமாயிருக்கு" என்று சொல்லும் இவரது கவிதைத் தொகுப்பு 'வெறும் பொழுது!'



"என்னைப் பெண்ணியவாதின்னு சொல்ல முடியாது. என்னைப் பொறுத்தவரை ஆணும் பெண்ணும் வேறுவேறல்ல; உடல் ரீதியா மாறுபட்டிருந்தா கூட, மனரீதியா இருவரும் ஒண்ணுதான். ஆண்கள்தான் டாமினேஷன் பண்ணணும்னு இல்ல. அம்மா, மகளை அடக்குவது கூட டாமினேஷன்னுதான் சொல்வேன்" என்கிறார்.

இவரது படைப்புகளில் பெண்ணின் வலிகள்தான் அதிகம் பேசப்படுவதாக விமர்சகர்கள் சொல்கிறார்கள்.

"அவங்கதான் அப்படிச் சொல்றாங்க. நான் பொதுவா மனித மனம் படற அவஸ்தையைத்தான் எழுதறேன். நான் ஒரு பெண் என்பதால அப்படிச் சொல்றாங்களோ என்னமோ?"

பெண் என்பதால்தான் இவரது படைப்புகள் முன்



விறுத்தப்படுகிறதா என்றால் அதையும் மறுக்கவில்லை இந்தப் படைப்பாளி.

''கொஞ்சம் நிஜமாத்தான் இருக்கு இது. பெண்கள்ல எழுத வர்றவங்க ரொம்பக் குறைவு. ஒரு தாயா, மகளா, மனைவியா, மாமியாரா, இப்படி எல்லாக் கடமையையும் நிறைவேற்றிட்டுதான் அவங்க படைப்புக்கு வரணும். அவங்களுக்கு எழுதறதுக்கான நேரம் குறைவு. அப்படியே வந்திருக்கற பெண் எழுத்தாளர்களை எடுத்துக்கிட்டீங்கன்னா கூட பத்து விரல்ல அடக்கிடலாம். ஆண்களா இருந்தா யாரும் தொந்தரவு பண்றதில்லை. அவங்களால சுதந்திரமா செயல்பட முடியுது. என்னைப் போல குடும்பச் சூழல்ல கட்டுண்டு கிடக்கறவங்க பாவகாரியம் பண்ற மாதிரிதான் எழுத வேண்டியிருக்கு. அப்படி வர்ற படைப்புகள் முன்னிறுத்தப்படறதில தப்பில்லைன்னும் நினைக்கிறேன். இதுல இன்னொரு விஷயத்தையும் சொல்லணும். பெண்ணுடல் பற்றிப் பெண் எழுதினா, அந்தப் படைப்பாளியையும் படைப்பையும் சேர்த்து விமர்சிக்கிற துரதிர்ஷ்டமான போக்கு தமிழ்ல காணப்படுது. பெண்கள் இதைத்தான் எழுதணும்னு சொல்றது, அவங்களோட அந்தரங்க விஷயங்கள்ல தலையிடற மாதிரி ஆயிடுது. தங்கள் உடலைப் பற்றி பெண்கள் ஏன் எழுதக் கூடாது? ஆன்மா, மனசு எல்லாமே உடம்புதான். உடலைப் பற்றி எழுதுவதில் என்ன தப்பு?

தன்னிறு வேட்கை கிழவன்
முற் கிளத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லைப்
பிற நீர் மாக்களின் அறிய ஆயிடைப்
பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப...''

இந்த நூற்பாவுல தொல்காப்பியர், தனது பாலியல் ஆசையை ஒரு பெண், கணவனிடம் கூட வெளிப்படுத்துவது, பொது இடத்தில் சிறுநீர் கழிப்பது மாதிரின்னு சொல்லியிருக்காரு. இன்னைக்கு எவ்வளவோ மாறிட்டோம். இருந்தாலும் இந்த மரபுச் சிக்கல் இன்னும் மாறலை'' என்று கொதிக்கிறார் உமா.

''யாரும் யாருடனும் இல்லை' என்கிற இவரது நாவல் விரைவில் வெளிவர இருக்கிறது.



• புது தில்லியில் நடைபெற்ற 'writing about the body' மாநாட்டில்

''கூட்டுக் குடும்பம் நிறைந்த வாழ்வில் மனித உறவு செழித்திருந்தது. அறுபது எழுபது பேர் வீட்ல இருப்பாங்க. ஆனா இன்னைக்கு ஒரு குடும்பம், ஒரு குழந்தை சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கோம். சுயநலவாதிகளா ஆகிட்டிருக்கோம். சந்தோஷமான குழந்தைப் பருவங்கறது இன்றைக்கு இல்லை. இந்த ஏக்கங்களை, மனித உறவுகளை மையப்படுத்தியதுதான் இந்த நாவல்.

''எழுதாமல் இருக்க முடியாதுங்கறதாலதான் எழுதிட்டிருக்கேன். அது அங்கீகரிக்கப்படணுங்கறதுக்காக அல்ல'' என்கிற உமா, இரண்டு குழந்தைகளின் தாய்.

செ. ஏக்நாத்

"ஆஸ்கர் நாமினேஷன் கிடைக்காவிட்டால் என்ன? ஃபிலிம்



காசு கொடுத்தால் குழந்தை வாங்கலாம்!

ஃபேர் அவார்டுகளைக் குவித்துவிட்டதே என் படம்!'' என்று மார் தட்டுகிறார் 'தேவதாஸ்' படத்துக்காக பதினொரு அவார்டுகளை வாங்கிக் குவித்திருக்கும் சஞ்சய் லீலா பன்சாலி. சிறந்த இயக்குனர், நடிகர், நடிகை, துணை நடிகை என்று லிஸ்ட் நீண்டு கொண்டே போகிறது. நடிக்க வந்த பதினொன்றாம் ஆண்டில், தாம் பெற்றிருக்கும் இந்தப் பரிசு ஸ்பெஷலானதாகக் குறிப்பிட்டார் ஷாரூக்; இதன் பிறகு நீண்ட ப்ரேக் எடுத்துக் கொள்ளப் போகிறாராம் - முதுகுத் தண்டில் ஆபரேஷன்! 'நன்றி நவிலத் துவங்கினால் இரவு முழுவதும் நீளும்' என்று ஐஸாக உருகினார் ஐஸ்வர்யா. கருவுற்றிருப்பதால் மாதுரி தீக்ஷித் வர முடியவில்லை. பன்சாலி வாய் ஓயாமல் புலம்புவது என்னவென்றால்... ''வாழ்க்கையில் தோல்வியைத் தழுவிய குடிமகனுக்காக ஐம்பது கோடிகளைச் செலவழித்தேன் என்று குற்றம் சாட்டியவர்களே... பாருங்கள்... அதுதான் பெற்றிருக்கிறது இமாலய வெற்றி!''



வெற்றிகரமான பிஸினஸ் இன்று மும்பையில் என்ன தெரியுமா? குழந்தைகள் வாங்குவதும் விற்பதும் தான்! இந்தக் கண்ணராவியான உண்மையை, காவல்துறை தற்செயலாக, ஒரு கிட்நாப்பிங் கொலையைப் புலனாய்ந்து கொண்டிருந்த போது, கண்டுபிடித்திருக்கிறது. பிஜிலானிகள் துவங்கி மூல்சந்தானிகள் வரை இதில் ஈடுபட்டிருக்கும் அத்தனை தம்பதியரும் 'கைனகாலஜிஸ்டுகள்' என்பது மற்றொரு கொடுமை. முறைகேடான வழியில் குழந்தையை வாங்கி, தங்கள் சொந்தக் குழந்தை என்று உலகத்தாருக்குப் பிரகடனப்படுத்த நினைக்கும் தம்பதிகள் ஏராளமாம். இனிமேல், காசு கொடுத்தால் எதையும் வாங்கி விடலாம், அப்பா அம்மாவைத் தவிர... என்ற வார்த்தைகளுக்கே இடமிருக்காது. எல்லாம் பணம் படுத்தும் பாடு.

- ஜெய்ஸ்ரீ ராஜ்

வருடாந்திர தள்ளுபடி விற்பனை

DISCOUNT SALE

9, 10, 10½ Yards also availbale



10% முதல் 20%* வரை

மார்ச் மாதம் முழுவதும்

01-03-2003 முதல் *31-03-2003*

ராணி சாரீஸ் மற்றும் அனைத்து மாநில காட்டன் புடவைகள், ஒரிசா காட்டன், மைசூர் சில்க், ஒரிஜினல் கத்வால், காஞ்சி காட்டன், பாலிகாட், ஸ்பன் காட்டன், சில்க் காட்டன், மெர்ஸ்ரைஸ்டு, ஒரிசா சில்க், மங்களகிரி, பட்டுப் புடவைகள், பாவஞ்சி பாவாடைகள், வேஷ்டிகள், டவல், சுடிதார் மெடிரியல் போன்றவை

எங்களிடம் தரமான நியாயமான விலையில் கிடைக்கும்.

*conditions apply

ரூ.10,000 க்கு மேல் வாங்குபவர்களுக்கு ரூ. 500 மதிப்புள்ள சிறப்பு பரிசு உண்டு.*

வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்ப ஆர்டரின் பேரில் புடவைகள் நெய்து தரப்படும்.

சாந்திமணி சாரீஸ்

கடை எண் : 5, அடித்தளம், கோகுல் ஆர்கெட், எண்:2, சர்தார் பட்டேல் ரோடு, (அடையார், சிக்னல் அருகில்) அடையார், சென்னை - 20 போன்: 24451309

Tailoring undertaken
Starching & Polishing all Sarees.

ஞாயிறு கடை உண்டு

Wholesale & Retail
All Major Credit Cards accepted

*இந்த விளம்பரத்தை நேரில் கொண்டு வருபவர்களுக்கு மேலும் விசேஷ சலுகை உண்டு.

புடைவைக்கு குட் பை?

நிறைய கொசுவம் வைத்து தழைய தழைய புடைவை உடுத்தினால் பெண்ணுக்கு தனி அழகு வந்துவிடுகிறது எப்படியோ! எப்படியோ இல்லை அதற்கும் ஒரு கதை கட்டவிழ்கிறது.

ரசனை மேலிட்ட இளம் வாலிபன் ஒருவன். அவன் கைத்தேர்ந்த நெசவாளியும் கூட. தன்னுடைய கனவுக் கன்னிக்குப் பரிசாகத் தர ஓர் அழகிய ஆடையை வடிவமைக்க ஆரம்பித்தான்.

அவள் மேனியின் மென்மைக்கு, அவள் சிரிப்பின் ஒளிக்கு, அவள் கூந்தலின் நீளத்துக்கு, அவள் கண்களின் மலர்ச்சிக்கு... இப்படி கற்பனையாக நெய்து கொண்டே போக... அந்தக் கனவுப் புடைவையும் கஜம் கஜமாக நீள.... இந்திய பாரம்பரிய சேலை உருவாகிவிட்டது.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் உருவான பெண்ணுக்கான இந்த அழகான உடை தற்போது பாரம்பரியம் இழந்து தவிக்கிறதா? ஓர் அலசு அலசியபோது...

"புடைவை பாரம்பரியமான உடைதான். இல்லைன்னு சொல்லலை. ஆனா மத்தப் பல விஷயங்களைப் போலவே இதிலும் வசதிங்கறது பாரம்பரியத்தை ஓவர்டேக் பண்ணிடுச்சு" என்கிறார் கல்லூரி மாணவியான ஸ்ரீதேவி. அவர் கூறுவது உண்மை, உண்மையைத் தவிர வேறில்லை என்பது போல் அவரது கல்லூரி வளாகத்தில் எங்கெங்கு நோக்கினும் சுரிதார்





• ஸ்ரீதேவி

• நித்யா


மற்றும் சல்வார் கம்மீஸ்தான். போதாக் குறைக்கு சில ஆசிரியைகள் கூட புடைவைக்கு குட்பை சொல்லி விட்டது போல் தோன்றியது.

வெளிநாடுகளைப் பொறுத்தவரை இந்திய உடை என்றாலே அது வேட்டியும் புடைவையும்தான். புடைவை கட்டுவது எப்படி என்பது குறித்த ஆங்கிலப் புத்தகங்கள் மற்றும் கையேடுகள் பல உண்டு. இந்தியப் பெண்கள் அலட்சியமாகப் புடைவை உடுத்தும் அழகு கண்டு 'வாஷிங்டனில் திருமணம்' புதினத்தில் இடம் பெற்ற அமெரிக்கர்களிலிருந்து, இந்தியாவுக்கு வரும்

நிஜமான வெளிநாட்டு சுற்றுப்பயணிகள் வரை அத்தனைபேரும் மூக்கின்மேல் விரல் வைப்பது வழக்கம். அப்படி ஒரு விரல் பயிற்சியே இனி இல்லாது போய்விடுமோ? புடைவை கட்டும் பழக்கம் வேகமாகக் குறைந்து வருவதைப் பார்த்தால் இன்னும் இருபது வருடங்களில் கண்ணகியை மட்டுமல்ல, புடைவையைக் கூட மியூசியத்தில் தான் பார்க்கவேண்டி வருமோ?

"கொஞ்சம் பிராக்டிகலா யோசிச்சுப் பாருங்க. சுரிதார் போட்டுக்கிட்டா தொப்பை தெரியாது. முதுகில் உள்ள குறைகளையெல்லாம் அது மறைச்சிடும். ஆனால் புடைவை இந்தக் குறைபாடுகளையெல்லாம் ஹைலைட் பண்ணிக் காண்பிக்கும். முக்கியமாக பொருத்தமான ரவிக்கை துணியையும், அதைக் கச்சிதமாகத் தைக்கும் தையல்காரரையும் தேடித்தேடிக் களைப் படையவேண்டாம் என்பது சுரிதாரின் மிகப் பெரிய நன்மை. தவிர பொதுவாக புடைவையைவிட சுரிதார்கள் குறைந்தவிலையில் கிடைக்கின்றன'' என்று பட்டியலிட்டார் நித்யா.

ஆக, கைத்தறி நெசவாளிகளுக்கு கடும் சோதனை என்றால் மட்டும்தான் புடைவைப் பக்கம் கல்லூரி மாணவிகளின் பார்வை விழுமோ? சொல்லப்போனால் ''குறைந்தவிலையில் கைத்தறியில் சுரிதார் தைக்கலாமே?'' என்ற ஆலோசனைவேறு வலுத்து வருகிறது.



புடைவையைப் பிடித்துள்ள இந்தக் கிரகணம் தாற்காலிகமானதா அல்லது நிரந்தரமானதா?

"தனலக்ஷ்மி சாரி'ஸின் உரிமையாளரான தனலக்ஷ்மி, "பெரிய மாற்றம் என்பது உண்மைதான். உடம்பு முழுகம் சுரிதார் மறைக்குதுங்கறதை மறுக்க முடியாது. ஆனால் அதே சமயம் உடையை விட, நாம் நடந்து கொள்கிற விதம்தான் நம்முடைய மதிப்பை நிர்ணயிக்குது. புடைவையைக்கூட கண்ணியமான விதத்தில் கட்டிக்கிட்டால் யாருடைய பார்வையையும் உறுத்தாது.



"இருபத்தைந்து வயதாகும் வரைதான் சுரிதார் நல்லாயிருக்கும். ஆனால் நடுத்தர வயதுப் பெண்மணிகள் புடைவை கட்டினாத்தான் நல்லாயிருக்கும். கடந்த ஐந்து வருஷங்களில் எங்க கடையிலே மட்டுமில்லே, பொதுவாகவே கூட புடைவை விற்பனை கொஞ்சம் மந்தமாகவும் சுரிதார் விற்பனை சுறுசுறுப்பாகவும்தான் நடந்து வருது.

"அதே சமயம் புடைவை விற்பனைக் குறைவுக்கு சுரிதாரின் போட்டி மட்டுமே காரணமில்லே. புதிய புதிய கலர்களிலும் டிசைன்களிலும் புடைவைகள் வந்துக்கிட்டே இருந்தாத்தான் வாங்கத் தோணும். புதிய வண்ணங்களை அறிமுகப்படுத்த கெமிஸ்டுகளால் முடியவில்லை. தவிர பட்டுப்



• சாந்திமணி

புடைவை போன்றவற்றை ஒழுங்காகப் பராமரிப்பதும் ஒரு தேவையற்ற சுமையாகப் படுகிறது கால்களில் சக்கரம் அணிந்து கொண்ட இந்தக் காலத்துப் பெண்களுக்கு" என்கிறார்.

'போச்சு, ஒரு பாரம்பரியம்' என்று பெருமூச்சு விட்டபடி நகர்ந்தால், ஒரேயடியாக அஞ்சத் தேவையில்லை என்பது போன்ற கருத்தைக் கூறினார் அடையார் நல்லி சில்க் சென்டரின் உரிமையாளர் என்.ஜி. குப்புசாமி.



• தனலக்ஷ்மி

"கல்லூரி மாணவிகளா இருந்தாக் கூட ஃபேர்வெல் பார்ட்டின்னு வரச்சே புடைவையைத்தான் தேர்ந்தெடுக்கறாங்க. ஜீன்ஸும் சட்டையும் போட்டுக்கிட்டு எந்தப் பெண்ணும் வருங்காலத்தில் கூட தாலி கட்டிக்குவான்னு தோணலே! குடும்பப் பாங்கான தோற்றம்னா புடைவைதான் என்னைக்கும் ஒரே சாய்ஸ். வருடாவருடம் புடைவை தயாரிப்பு ஜாஸ்தியாயிட்டுதான் போகுது. தென்னிந்தியா மட்டுமில்லே. மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் கூட புடைவைத் தயாரிப்பு மிக அதிகம். நிறைய புடைவைத் தயாரிப்பு மையங்கள் சமீபத்திலே உருவாகியிருக்கு. டிமாண்ட் இல்லாமலா இந்த அளவுக்கு உற்பத்தி இருக்கும்? எங்கள் கடையைப் பொருத்த வரை புடைவை விற்பனை ஒவ்வொரு வருடமும் அதிகமாயிட்டுதான் இருக்கு."

சாந்தி மணி சாரீஸ் கடையின் உரிமையாளரான சாந்தி மணியும் தீவிரப் புடைவை ஆதரவாளராக இருக்கிறார். "புடைவைக்குள்ள அழகும் நேர்த்தியும் வேறெந்த உடைக்கு உண்டு? பல வெளிநாட்டுக்காரங்ககூட என் கடையிலே புடைவைகளை வாங்கிக்கிட்டு சந்தோஷமாப் போறாங்க. வயசு நாற்பதும் அறுபதும் ஆகும்போது என்ன இருந்தாலும் புடைவைதானே கட்டிக்க முடியும்? கல்லூரிக்கு சுரிதார் அணிஞ்சாலும் தெரிஞ்சவங்களுக்குப் பிறந்த நாள் விழா, தோழியின் கல்யாணம்னு போகும்போது புடைவையைத்தானே இளம் பெண்களும் தேர்ந்தெடுக்கிறார்கள். தவிர இன்னொரு விஷயத்தையும் நீங்க கவனிக்கணும். சுரிதாரை விட்டா, புடைவையைத் தவிர வேறெந்த உடைக்கும் நம் பெண்கள் சுலபத்தில் மாறுவதில்லை. புடைவை என்பது பரிபூரணமானது. ஒரு நாளும் அழியாதது. நல்ல டிசைனும் வித்தியாசமான கலர் காம்பினேஷனுமாக வந்து கொண்டிருக்கும் வரை புடைவையை அடிச்சுக்க எந்த டிரஸ்ஸாலும் முடியாது" என்றார்.

— குல்லூ


அட்டையில் : திவ்யாதாஸ்

படம் : ஜி. வெங்கட்

இதுவும் அதிசயமே!

உலகிலேயே மிக அதிகமாக புகைப்படம் எடுக்கப்படுகிற உலக அதிசயம் தாஜ்மகால்தானாம்! சொல்கிறார். இருக்கட்டும் அதனால் பார்த்துப் பார்த்து அலுத்துப் போய்விடுமா என்ன? இப்படி சூழ்நிலையையே மாற்றி, ஹெலிகாப்டர் — ஜட்காவையும் இணைத்து... ஹி...ஹி...ஹி...

— விருதை ராஜா





நம்பிக்கையின் பாரம்பரியச் சின்னம்

தஞ்சைத் தரணியில் 1904ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வங்கி.
அன்று போல் இன்றும் மாறாத பாரம்பரியம், குறையாத நம்பிக்கை.

தொன்மையும், தொழில்நுட்பமும் நிறைந்த வங்கி.

குறித்த காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துவோருக்கு சலுகை வட்டி விகிதங்கள்.

உங்கள் தேவைக்கேற்ற பல்வேறு சேமிப்புத் திட்டங்கள்.

இன்முக சேவையில் இந்தியா முழுவதும் 120 கிளைகள்.

MARCHING TOWARDS CENTENARY

1904 – 2004

TRADITIONAL BANKING - ENDURING RELATIONSHIP

CUB

சிட்டி யூனியன் பாங்க் லிட்.,

பதிவு அலுவலகம் : கும்பகோணம் - 612 001.
(அந்நியச் செலாவணி அங்கீகாரம் பெற்ற வங்கி)
Tel : 0435-2432322 Fax : 0435-2431746
E-mail : cubco_kmb@sancharnet.in Website : http://www.cityunionbank.net

உங்கள் வளர்ச்சிக்கு வழிகாட்டும் வங்கி!


CUB/1915/03

அன்னமே பிரம்மா! அன்னமே விஷ்ணு! அன்னமே சிவன்!

திருவருள் பொழியும்

திருவண்ணாமலையில்

பௌர்ணமி தினத்தில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!



பேரன்புடையீர்! நமஸ்காரம்.

பஞ்சபூதத் தலங்களில், அக்னித் தலமாக விளங்கும் திருவண்ணாமலை, நினைத்தாலே முக்தி தரும் புண்ணிய க்ஷேத்திரம். கிரியே சிவமாகவும், சிவமே கிரியாகவும் விளங்குவதால் இங்கு பௌர்ணமி தினத்தில் கிரிவலம் வருவது சிவபெருமான் உறையும் கைலாயத்தையே வலம் வருவதற்கு ஒப்பாகும். ஏராளமான சித்தர்கள், ஞானிகள், முனிவர்கள், ரிஷிகள் வாழ்ந்து, தவமியற்றி, வரம் பெற்று, மோட்சம் அடைந்த புனித புண்ணிய க்ஷேத்திரம் திருவண்ணாமலை. இங்கு பௌர்ணமி காலத்தில் கிரிவலம் வரும் பக்தர்களுக்கும், சாதுக்கள், ஊனமுற்றோர், சன்யாசிகள், ஏழை எளிய மக்கள், பக்தர்கள் ஆகியோருக்கு அன்னம் அளிப்பது மகத்தான புண்ணியத்தை நமக்குத் தருகிறது.

தடுத்தாட் கொள்வது, கிரக நிலைகளை மாற்றுவது, ஊழ்வினைகளை நீக்குவது, முக்தி தருவது, ஆயுளை நீடிப்பது, நோய்களைக் குணப்படுத்துவது போன்ற சிவ லீலைகள் நிகழ்ந்த இவ்விடத்தில், அன்னதானத்தின் மூலம் புண்ணியம் பெறுவதும், மோக்ஷம் அடைய முயல்வதும் உயர்ந்த லட்சியமாகும்.

★ மனச்சாந்தி பெற ★ திருமணம் கைகூட ★ நோய்நொடிகள் தீர ★ எண்ணங்கள் வெற்றி பெற ★ சந்தான பாக்யம் பெற ★ பிரச்சனைகள் எளிதில் தீர ★ கணவன் மனைவி ஒற்றுமை ஏற்பட ★ தொழிலில் மேன்மை பெற ★ பிரிந்தவர்கள் ஒன்று சேர ★ கடன் தொல்லைகளிலிருந்து விடுபட ★ நினைத்த காரியம் நிறைவேற ★ உங்களுக்காக நாங்கள் அன்னதானம் செய்து பிரசாதம் அனுப்பி வைக்கிறோம்.

அன்னதானம் செய்ய அரிசி போன்ற உணவு பொருட்களும் சிறிய தொகையும் ஏற்றுக் கொள்ளப்படும்.
ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.
ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் ஐந்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

ரூ.1000 மற்றும் ரூ. 5,000 அளிக்கும் அன்பர்களுக்கு பகவத்கீதை புத்தகம் அல்லது கந்தபுராணம் புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். அல்லது கவி-ந்யாய-மீமாம்ஸ சிரோமணி ஸ்ரீமான் திருவெண்காடு டி.கே. முத்துஸ்வாமி சாஸ்திரிகளால் தயாரிக்கப்பட்டு பூஜையில் வைத்த அபூர்வ யந்திரம் அன்பர்களின் விருப்பத்திற்கேற்ப எந்த யந்திரம் தேவையோ அந்த யந்திரம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். அன்னதானப் பணிக்காக நன்கொடை வழங்கும் அன்பர்கள் நேரில் வந்து கலந்து கொள்ளலாம். கிரிப்பிரதட்சிணம் செய்து கோரிய பலனையும் பெற்றுக் கொள்ளலாம்.

நன்கொடைகளை **SRI ANNALAKSHMI ANNADHANA SEVA TRUST, CHENNAI-41** என்ற பெயரில் **CHEQUE/D.D./M.O.** மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். என்றென்றும் புனித ஸேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது மேலான ஒத்துழைப்பை என்றென்றும் நாடுகிறோம்.


CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :

ஸ்ரீ அன்னலக்ஷ்மி அன்னதான ஸேவா டிரஸ்ட்

SRI ANNALAKSHMI ANNADHANA SEVA TRUST

M-11/F-4, RAGAM APTS., I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA

☎: 24900303, 24900603 Fax: (044)24916316 (A UNIT OF GOPURA DHARISANAM)



மாயமான் பட்ஜெட்!

வரிகளை உயர்த்தவில்லை என்பதாலேயே ஜஸ்வந்த் சிங்கின் முதல் பட்ஜெட் முதல்தர பட்ஜெட் ஆகிவிடாது.

இதுவரையிலான நிதி அமைச்சர்கள் வழங்காத சில சலுகைகளை உயர் மத்தியதர வகுப்பினருக்கு அவர் வழங்கியுள்ளதைப் பாராட்டலாம். உதாரணமாக, கல்விச் செலவுக்கு ஓரளவு வரி விலக்கு; ஊனமுற்றோருக்கும், ஊனமுற்றோரின் பாதுகாவலர்களுக்கும் வரிச் சலுகை; போன்றவற்றைப் பாராட்டி வரவேற்க வேண்டும்.

ஆனால், தொழில் துறையினர் வரவேற்கும் அளவுக்கு இந்த பட்ஜெட்டை விவசாயத் துறையினரும், சிறுதொழில் பிரிவினரும், நடுத்தர வர்க்கமும் வரவேற்க இயலாது.


யூரியா விலையை உயர்த்தியது – அதுவும் வறட்சி பாதிப்பு நாடெங்கும் தலைவிரித்தாடும் தருணத்தில் உயர்த்தியது விவசாயிகளை மேலும் கொடுமைப்படுத்துவதாக அமையும். (இந்த விலை உயர்வு விவாத முடிவில் ரத்தாகிவிடும் என்று கூட எதிர்பார்க்கலாம்.) கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளைப் பெருக்கும் வகையில், விவசாயம் சார்ந்த தொழில் பெருக்கத்துக்கும் சிறுதொழில் பிரிவுக்கும் இந்த பட்ஜெட்டில் யாதொரு ஊக்கமும் தரப்படாதது ஏமாற்றம் அளிக்கிறது. பி.ஜே.பியின் தேர்தல் வாக்குறுதியில் விவசாயம் சார்ந்த தொழில்களுக்குத் தரப்பட்ட



கல்கி



2003 மார்ச் 9
சித்ரபானு மாசி 25
மலர் : 61
இதழ் : 32



முன்னிலை இன்று எங்கோ காணாமல் போய்விட்டது. இதனால் கிராமப் பகுதிகளின் பொருளாதாரம் முன்னேறாமல் தேக்கமுறும், அல்லது மேலும் நலிவுறும்.

பெட்ரோல் டீசல் விலை உயர்வும், சர்வீஸ் டாக்ஸ் அதிகரிப்பும் நிறுவனங்களின் உற்பத்திச் செலவில் சேர்க்கப்பட்டு, இறுதியில் நுகர்வோர் தலையில்தான் சுமையாக விழும். ஒரு புறம் இந்த விலைவாசி உயர்வைத் தாங்கிக் கொள்ளும் மத்தியதர வர்க்கம் மறுபுறம், தனது சேமிப்புக்கு முன்னைக் காட்டிலும் குறைந்த வட்டியே பெறப் போகிறது. தனி மனித சேமிப்பும் முதலீடும் பெருகுவதற்கு வாய்ப்பளிக்காத இந்த பட்ஜெட்டில் பற்றாக்குறை சென்ற ஆண்டைக் காட்டிலும் அதிகம்!

அடிப்படை வசதிகளைப் பெருக்கும் பிரிவில் தனியாருடன் கூட்டு முயற்சி, அரசு நிறுவனங்களைத் தனியார் மயமாக்கும் திட்டங்கள் என்று பொருளாதார சீர்த்திருத்தங்களைத் தொடர்கிற உறுதி தென்படுவதைப் பாராட்டலாம். ஆனால் நடைமுறை சாத்தியமாகி, இவை பலனைத்தர நீண்ட காலம் ஆகும். அதற்குள் அவசரப்பட்டு, அந்த வருவாயை நம்பி, செலவினங்களில் அகலக் கால் வைத்திருக்கிறார் ஜஸ்வந்த் சிங்.

இப்போது யாரையும் அதிகம் வருத்தாது போல் தோன்றினாலும் இந்த பட்ஜெட்டின் விளைவுகளை ஆறு மாதம் சென்று சுமக்கப் போகிறவர்கள் நடுத்தர வர்க்கத்தினர்தான்.

சாத்தான்குளம் சதி!

சாத்தான்குளம் தேர்தல் முடிந்த கையோடு மணிமுத்தாறு, பாபனாசம் மடைகளை அடைத்து விட்டது பொதுப்பணித் துறை! முப்பத்திரண்டு நாட்களாக அத்தொகுதி மக்கள் பெற்று வந்த



தாராளமான தண்ணீர் வசதிக்கு இரவோடு இரவாக முற்றுப் புள்ளி! 'காரியம் முடிந்ததும் கையைக் கழுவு' என்கிற ரீதியில் செயல்பட்டிருக்கிறது ஜெயலலிதா அரசு. இந்த அரசை நம்பி ஜெயிக்க வைத்துள்ள சாத்தான்குளம் வாக்காளர்கள் முழுமையாக ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள்.

வறுமையும் வறட்சியும் தாண்டவமாடும் பகுதிகளுக்குச் சென்று ஆளுங்கட்சியினர், தற்காலிக நிவாரணங்களையும், 'அன்பளிப்புகளை'யும் வாரி வழங்கி, அந்த மக்களை மயக்கி வோட்டுப் பெற்று ஜெயிப்பது, அப்பட்டமான அழுகுணி ஆட்டம். பிரசார காலத்தில் பிற கட்சிக்காரர்களை அ.தி.மு.க.வினர் மிரட்டி வன்முறை பிரயோகித்த சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. இந்த அதர்ம காரியங்களில் ஈடுபட்ட ஜெயலலிதாதான், விழுப்புரம் பொதுக் கூட்டத்தில் மகாபாரதக் கதை சொல்லி, தம்மை தருமர் என்றும் எதிர்க்கட்சியினரை துரியோதனன் என்றும் வர்ணித்திருக்கிறார்!

அதர்மம் நிகழ்வதைத் தடுக்கவும் தட்டிக்கேட்கவும் அதிகாரம் படைத்த தேர்தல் கமிஷன், கடைசி நிமிடம் வரை தூங்கிவிட்டு, தேர்தலுக்குச் சில தினங்களுக்கு முன்னர் பெயரளவுக்கு முதல்வரைக் கண்டனம் செய்ததோடு திருப்தி அடைந்து விட்டது.

எதிர்க்கட்சிகள் ஒற்றுமையின்றித் தனித்தனியே பிரசாரம் செய்து எதையும் சாதிக்கவில்லை. அ.தி.மு.க.வுக்கு வெற்றியைச் சுலபமாக்கியதுதான் மிச்சம்.

அ.தி.மு.க. செய்தது போல் இவ்வளவு பகிரங்கமாக மக்களுக்கு ஆசை காட்டி இதுவரை பிரசாரம் நடந்ததில்லை. சாத்தான்குளத்தில் ஜெயலலிதா கையாண்ட 'பிரசார முறைகள்' கேள்விக்குட்படுத்தப்படாததால் அவையே இனி நாடெங்கும் நடைமுறையாகிவிடும் அபாயம் இருக்கிறது.

பணபலமும் அதிகார பலமும் பிரயோகித்துத் தேர்தல்களில் போட்டியிடுவது ஒன்றும் புதிதல்ல என்று வாதிடலாம். ஆனால் ஏற்கெனவே நடந்த தவறுகள் சாத்தான்குளம் சதியை நியாயப்படுத்த முடியாது. அவை நிகழ அனுமதித்த தேர்தல் கமிஷனை யார் தட்டிக் கேட்பார்கள்? ○

VISHAK FOODS

Manufacturers of
South Indian Appalams
& Masala pappad

Supplier for
- Industrial Canteen
- Hospitals
- Hotels
- Restaurant

23, Annaji Nagar, II Main I Cross,
K.K. Nagar (W), Chennai - 600 078.
Phone : 2484 7643, 5587 3599

SEA BRREEZE HOME FOR AGED

தூய்மை, பசுமை கொண்ட மேட்டுக் குப்பம் பகுதியில் குறைந்த மாதக் கட்டணத்தில் சைவ உணவு, மருத்துவ உதவியாளர், வாகனப் பொழுதுபோக்கு வசதிகளோடு முதியோர் இல்லம்.

தனிநபர், தம்பதியர், தனி அறை, பொது அறை வசதிகள் உண்டு.

எங்கள் முதியோர் இல்லத்தில் நடமாட முடியாதவர்களையும் சேர்த்துப் பராமரிக்கிறோம்.

ஸீ ப்ரீஸ் முதியோர் இல்லம்

பாத்திமா டிரஸ்டு (பதிவு)
3/251 வி.பி.ஜி. அவென்யூ,
மேட்டுக்குப்பம், துரைப்பாக்கம்,
பழைய மகாபலிபுரம் சாலை,
சென்னை - 96.

Ph : 24963949 Cell : 98412-97887

மானுட சேவைக்குப் பேதமில்லை

உலகத்தரத்தில் வெளிவரும், அரசால் அங்கீகாரம் பெற்று நூலகங்களுக்கும் செல்லும் ஒரே கட்டுமான மாத இதழ்

பில்டர்ஸ் வேர்ல்டு

Exclusive for Real Estate, Construction & Interior

அஸ்திவாரம் முதல் புதுமனை புகுவிழா வரை
கட்டுமானத் துறை சார்ந்த
ஏராளமான செய்திகள் அடங்கிய A to Z தகவல் களஞ்சியம்

உங்கள் ஹெல்த் டுடே
புத்தக வடிவ மருத்துவ தகவல் களஞ்சியம்

தொழில் முன்னேற்றம்
தொழில் துறையின் தகவல் களஞ்சியம்

VIVEK PUBLICATIONS

6/84, Mallan Ponnappan Street, Triplicane, Chennai - 600 005. Phone : 28487533, 28483163
Telefax: 28480610 E-mail : viveksbuildersworld@rediffmail.com Website : www.vivekpublications.com



ஈஸ்வர லீலை!

முன்னொரு தடவை, திருவிதாங்கூர் மகாராஜாவுக்கு, தீராத வயிற்று வலி உண்டானது. எவ்வளவோ வைத்தியம் செய்தும் குணம் தெரியவில்லை. "பிலாமந்தோள் வைத்தியர் வந்தால்தான் சரியாகும்" என்று விஷயம் தெரிந்த பலரும் சொல்லவே, வள்ளுவ நாட்டுக்கு ஆள் அனுப்பினார் மகாராஜா.

அந்த வேளையில் வைத்தியர் குடும்பத்தில் பதினான்கு வயதே ஆன மகன் மட்டுமே இருந்தான். அவனுக்கும் முறையான வைத்தியக் கல்வி கிடையாது. மன்னரின் ஆணையை மீறினால் ராஜ கோபத்துக்கு ஆளாக வேண்டுமே என்று அந்தச் சிறுவன் நடுங்கினான்.

"குழந்தாய்... கவலைப்படாதே... பன்னிரண்டு நாட்கள் சிவனை வழிபடு. ஈஸ்வரன் வழி காட்டுவார்" என்று அவனுடைய தாயார் சமாதானம் கூறினார். பையனும் பக்தி சிரத்தையுடன் விரதம் இருக்க ஆரம்பித்தான்.

பதினோராம் நாள், அவன் கனவில், முதியவர் ஒருவர் வந்து மருந்து குளிகைகளைத் தந்து, "இந்த மருந்தை மகாராஜாவுக்குக் கொடுத்தால் நோய் தீரும், ஆனால் அவர் தட்சணை தந்தால் வாங்காதே. தாமிரபரணி ஆற்றுக்குள் கிடக்கும் தன்வந்திரி சிலையை எடுத்து, சிவன் கோவிலில் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்று சொல்" என்று கூறி மறைந்துவிட்டார்.

அதே போல வயிற்றுவலி தீர்ந்த மகாராஜா, மகிழ்ச்சியுடன் நிறைய தனத்தைக் கொடுத்து அனுப்பி வைத்தார். தாமிரபரணி, தீர்த்தக் கரைக்கு வந்தபோது, அவர்களை சன்னியாசி ஒருவர் வரவேற்று, கருடன் ஒன்று பறந்த இடத்துக்கு அடியில் தேடச் செய்தார். இறைவன் சொன்னபடியே தன்வந்திரி விக்ரகம் கிடைக்கவே, "பிரதிஷ்டைக்கு ஏற்பாடு செய்யுங்கள். நான் முகூர்த்த நேரத்துக்கு வந்து விடுகிறேன்" என்று கூறிச் சென்றார்.

மன்னரின் ஆட்கள் தன்வந்தரி விக்ரகத்தை, பிலாமந்தோளுக்குக் கொண்டு போய், ஆற்று ஜலத்தில் போட்டார்கள். கோவில் கட்டி முடித்ததும் பிரதிஷ்டை சமயத்துக்கு சன்னியாசியும் வந்து சேர்ந்தார். விக்ரகத்தை எடுத்து வர ஆட்கள் போன போது, யாராலும் தூக்க

தேவமருந்து - 31

டாக்டர் எல். மகாதேவன்

முடியாமல் போகவே, அசந்து போய்த் திரும்பினார்கள். உடனே சன்னியாசி ஒரு சொம்பை எடுத்துக் கொண்டு போனார். ஒரு கையில் விக்ரகத்தையும், இன்னொரு கையில் சொம்பில் தீர்த்தமும் கொண்டு வந்து, ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்தார்.

அதைப் பார்த்த ஊர் மக்கள் ஆனந்த பரவசம் அடைந்தார்கள். சன்னியாசி வெகு காலம் அங்கேயே வாழ்ந்து சமாதியடைந்தார். இப்போதும் இந்தக் கோயில் மலபார் மாவட்டத்தில் 'பிலாமந்தோள்' என்ற இடத்தில் பிரபலமாக இருக்கிறது. இந்த ஊர் தன்வந்திரிக்கு வேண்டிக் கொண்டால், தீராத வியாதிகள் தீரும் என்பது நம்பிக்கை.

டி.வியில் நம்முடைய பிரதமர் வாஜ்பாய், மெள்ள அடியெடுத்து வைத்து நடப்பதைக் காண நேரிடும்போது வேதனையாக இருக்கும். எலும்பு மூட்டு தேய்மானத்தால் வரக்கூடிய இந்த வியாதிக்கு, ஆஸ்டியோ ஆர்த்தைரைட்டிஸ் என்று பெயர்.

அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களைக் குறி வைக்கும் இந்த நோய், பெண்களை மிக மிக அதிகமாகத் தாக்குகிறது. முதுகெலும்பு உள்ள சில மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் கூட இந்த நோய் வரும் என்கிறார்கள். முடி நரைத்தல், சருமம் சுருங்குதல் போல, மூட்டுத் தேய்மானமும் வயதாவதன் அறிகுறியே...!

இரண்டு எலும்புகளுக்கிடையே ஜவ்வு போன்ற 'கார்டிலேஜ்' உள்ளது. இதை ஸ்லேஷ்மதரகலை' என்று ஆயுர்வேதத்தில் சொல்கிறோம். இதில் இருக்கக்கூடிய புரதம் (collagen) குறைவதாலோ, ஆஸ்டியோபைடிஸ் என்ற எலும்பு முனைகள் உருவாவதாலோ இந்நோய் ஏற்படலாம். சிலருக்கு மூட்டுக்கள் உராய்ந்து தேய்வதாலும், சில அழற்சி நோய்களினாலும், அடிபடுவதானாலும் வருவது உண்டு.

கடினமான வேலை செய்பவர்களுக்கும், உடல் பருமன் உடையவர்களுக்கும், எலும்புத் தேய்மானம் சற்று அதிகமாக இருக்கிறது. கால் மூட்டுகள் பாதிக்கப்பட்டதும், கை விரல், மூட்டுகள், கழுத்து, முதுகு, இடுப்பு போன்றவையும் பாதிக்கப்படும். சிலருக்கு தூங்கி எழுந்த பிறகு மூட்டுகள் விறைப்பாகி வலியை ஏற்படுத்தும். சில சமயங்களில் நடக்கவே முடியாது. கால் வளைவு ஏற்படும். கழுத்தில் தேய்மானம் ஏற்பட்டால், கை மரத்துப் போதல், வலி, உணர்ச்சிக் குறைவு போன்றவை ஏற்படலாம். மூளைக்கு இரத்தம் செல்லும் நாளத்துக்குத் தடை ஏற்படுவதால், தலை சுற்றல், வாந்தி ஏற்படலாம். இதற்கெல்லாம் தசைகளை வலுப்படுத்த, பிரத்யேக உடற்பயிற்சிகள்





உள்ளன. நிமிர்ந்து அமர்வது, மேடுபள்ளமற்ற மரக்கட்டிலில் படுப்பது, கூன் போடாமல் நடப்பது போன்றவை இன்றியமையாதவை.

மூட்டுக்களில் நீர் இருந்தால் கொட்டன் சுக்காதி லேபம், கோல குலத்தாதி லேபம் போன்றவற்றைப் புளிச் சாறில் கலந்து கொதிக்க வைத்து, பற்றுப் போடலாம். இதற்கு 'உபநாகம்' என்று பெயர். கொட்டான் சுக்காதித் தைலம், கார்பாஸ் யாஸ்தியாதித் தைலம், பிரபஞ்சனம் தைலம் போன்றவற்றைச் சூடாக்கி, வலி உள்ள இடத்தில் தடவி, வெந்நீர் ஒத்தடம் தருவதும் வலியைக் குறைக்கும்.

தசைகளை வலுப்படுத்துவதற்காக, நவரக்கிழி, பிழிச்சல், தாரை போன்றவற்றைச் செய்யலாம். யாபனா வஸ்தி என்று சொல்லக்கூடிய எனிமாக்கள் இதற்குப் பலனளிக்கும். மேலும் உள்ளுக்கு ராஸ்னாதி கஷாயம், தான்வந்திரம் கஷாயம், ஸஹசிராதி தைலம் போன்றவற்றைத் தரும் பழக்கமும் உண்டு.

கழுத்தெலும்பு தேய்மானம் உள்ளவர்களுக்கு, மூக்கில் மருந்து விடும் நஸ்ய சிகிச்சை செய்யலாம். சிரோதாரை, சிரோ வஸ்தி போன்ற சிகிச்சை



களும், 'பிரசாரணி' என்று சொல்லக்கூடிய 'முதியோர் கூந்தல்' என்ற மூலிகைக் கஷாயமும் நல்ல பலனை அளிக்கக்கூடியது. தலைச்சுற்றைக் குறைப்பதற்கு, க்ஷீரபலா, கச்சூரம் போன்றவற்றைத் தலைக்குத் தளம் வைக்கலாம்.

மூட்டு வலி வந்த பின்பு அவஸ்தைப் படுவதை விட, வராமலிருக்க சில முறைகளைக் கையாள்வதே சிறந்தது. காரம், புளி, எண்ணெய்ப் பலகாரங்களைத் தவிர்க்க வேண்டும். கிழங்கு வகைகள், பழைய சோறு, பகல் உறக்கம், இரவில் தயிர் சாப்பிடுவது, அசைவ உணவுகள் போன்றவற்றை குறைக்கவோ, தவிர்க்கவோ செய்தாலே மூட்டுவலி வராமல் காக்கலாம்.

இன்றைக்குத்தான் ஆரம்பித்தது போல இருக்கிறது. அதற்குள் எட்டு மாதங்கள் கடந்து விட்டதை நினைத்து ஆச்சரியமாக இருக்கிறது. முப்பத்து ஒரு வாரங்களாக இந்த ஆயுர்வேதத் தொடரை படித்து வந்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சரகர் கூறியபடி, எவனொருவன் மிதமாக உண்டு, பொய் கூறாமல், நல்ல வார்த்தைகளைப் பேசி, ஒழுக்கத்துடன் சத்புருஷ விரதம் அனுஷ்டித்து, இறையுணர்வோடு வாழ்கிறானோ, அவன் நோயினால் அவதிப்படுவதில்லை. அப்படியே நோய் வந்தாலும், அதைத் தாங்கும் சக்தியும் இறைவன் அருளால் கிடைக்கப் பெறுகிறான்.

மனிதனின் நோயைத் தீர்க்க உதவும் எல்லா மருத்துவ முறைகளுமே சிறந்தவை தாம். சில நோய்களுக்குச் சில மருத்துவ முறைகள் மிக நல்ல முறையில் பலனளிக்கின்றன. சில சமயங்களில் ஆயுர்வேத மருத்துவமுறை பலனளிக்காது. அப்போது ஹோமியோபதி, நவீன மருத்துவம் போன்றவை பலனளிக்கும். இது என்னுடைய அனுபவபூர்வமான அபிப்ராயம். மக்கள் எல்லா மருத்துவ முறைகளைப் பற்றியும் தெரிந்து கொண்டு, எல்லாவற்றிலும் உள்ள நல்லவற்றை எடுத்துக்கொண்டு, பயன்பெற தன்வந்திரியைப் பிரார்த்தித்து விடை பெறுகிறேன்.

*பாலாம்பிகேச வைத்யேச பவ ரோக
ஹரே தீச
ஜபேத் நாம த்ரையம் நித்யம்
மஹாரோக நிவாரணம்''*

(முற்றும்)

தொகுப்பு: **அனுராதா சேகர்**
படங்கள் உதவி: **எஸ்.என்.ஏ. ஆயுர்வேத சாலை (கேரளா)**

ஹரிபாபுவின் காதல்



எனக்கு ஹரிபாபு காதலித்ததில் எந்த விதமான ஆட்சேபமும் கிடையாது. காதலுக்கு யார் ஆட்சேபம் தெரிவித்தாலும், இறுதியில் வெல்லப் போவது காதல்தான்! இதில் ஹரிபாபு மட்டும் எப்படி விதி விலக்கு?

காதலித்ததுதான் காதலித்தானே... தன் உயரத்திற்கு ஒருத்தியைக் காதலித்திருக்கக் கூடாதா? அவன் உயரம் நான்கு அடி. சந்தான லக்ஷ்மியோ ஐந்து அடி உயரம்!

நண்பர்கள் கூடும் அலுவலக மர பங்க் டீக் கடை. ஆசை டீ அடித்து அடித்து, கண்ணாடி தம்ளர்களில் ஊற்றிக் கொண்டேயிருக்க, ஒரு பொடியன் எடுத்து கொடுத்துக் கொண்டிருந்தான்.

"என் விஷயத்துக்கு வா...!" - ஹரிபாபு குரல் ஒலிக்க, நான் கவனத்திற்கு வந்தேன். நான் என்ன கூறப் போகிறேன் என்று மற்ற நண்பர்கள் பார்த்தனரே தவிர, யாரும் உருப்படியான யோசனையைத் தரவில்லை. அவனைப் பரிதாபமாகப் பார்த்தேன்.

ஹரிபாபு, இன்று களையாய் இருந்தான். இந்த 'களை' அவன் காதலிக்க ஆரம்பத்திலிருந்து தோன்றியது என்று சொன்னால் அது மிகைப்படுத்தப்படும் விஷயம். அவனது சராசரிக்கும் குறைவான உயரத்தைத் தவிர, ஒருவித வசீகர அழகு அவனிடம் இருந்தது. மார்கழி மாதத்தின் விடியற்காலை ஐந்து மணிக்கெல்லாம் ஒலிக்கும் எல்.ஆர். ஈஸ்வரியின், "மாரியம்மா... எங்கள் மாரியம்மா...!" குரலோடு இவன் பச்சைத் தண்ணீரில் 'குபுக்... குபுக்...' என்று குளிப்பான்.

அந்த ஓசையைக் கேட்டு நமக்குத்தான் ஜன்னி கண்டுவிடும். ஒருவன் குளிப்பதால் அவனைச் சுத்தமானவன் என்று சொல்லிவிட இயலாது. அந்த மனிதனின் உள்ளம் சுத்தமாக இருந்தால்தானே, உடம்பும் உள்ளமும் சுத்தமானவை என்று ஏற்றுக் கொள்ளலாம்? ஹரிபாபுவுக்கு இளகிய நெஞ்சம். நண்பர்களுக்கு மட்டுமல்ல, அவனைச் சுற்றியுள்ள சக மனிதர்களுக்கும் உதவி செய்தான். அவன் செய்யும் வேலைகளும் சுத்தம். எங்களைப் போல் அங்கு தொட்டும் இங்கு தொட்டும் வேலை செய்ய மாட்டான். ஒன்றை எடுத்தால் அதை முடித்து விட்டுத்தான் மறுவேலை. இதற்கு மத்தியில் எங்கள் மூளை சிதறும் கணக்குகளை ஒரு பார்வையிலேயே பார்த்து, அதிலுள்ள பிரச்னைகளைச் சொல்லி 'டேலி' செய்துவிட வைப்பான். எல்லாவற்றிலும் அன்பானவன். இப்படிப்பட்டவனை ஒருத்தி அடையக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

நியாயம்தான். ஒப்புக் கொள்வோம்! எல்லோரும் எதற்கோ எதையோ நம்பி வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிற ஒன்றும் புரியா நிர்ப்பந்தம். இதில் காதல் உணர்வுகளும்தானே அடக்கம்; எவ்விதமான வேறுபாடு



புதுவை ரா. ரஜனி

கள் இருப்பினும், அங்கு உணர்வுகள்தானே பிரதான விஷயமாய் நிற்கிறது?

சந்தான லக்ஷ்மி சராசரி அழகுடையவள். மாநிறம். எப்பொழுதும் புன்னகை முகம். அனாவசிய 'ஊர்க் கதைகள்' கிடையாது. சொல்ல விரும்புபவர் அனேகர் உண்டு. அப்படியே சொன்னாலும், கேட்டுவிட்டு மறு பேச்சுப் பேசாமல், கருத்துக்களைக் கூறாமல், சிறு புன்னகையோடு வேலையில் கவனமாவாள். வாழ்க்கையை, மனிதர்களை அவள் புரிந்து வைத்திருந்தாள். புரிந்தவர்களுக்குப் பிரச்னைகள் ஏதுமில்லை.

ஹரிபாபு வரையறுத்துக் கொடுக்கும் கணக்கு வழக்குகளை, அவள்தான் தட்டச்சு செய்வாள். அவளுக்கும் அவனுக்குமுள்ள தொடர்பு, நெருக்கம் என்னவென்று யோசித்தால், வெறும் எண்களும் எழுத்துக்களும் தான். ஏதாவது அலுவலகப் புள்ளி விவரங்களைத்தான் பேசுவார்கள். அவள், அவனிடம் ஒரேயொரு பொதுக் கருத்தைத்தான் சொல்லியிருக்கிறாள்!

“ஹரிபாபு சார், உங்களுக்கு மட்டும்தான் ஐந்தையும் எட்டையும் ஒழுங்கா போடத் தெரியுது...!” இதைச் சொல்லிவிட்டு அவள் கொஞ்சம் சிரித்தாள். அவனும் சிரித்தான். அவ்வளவுதான்... அவ்வளவுதான்...!

“எப்பிடிடா திடீர்னு சந்தான லக்ஷ்மி மேலே ஒரு 'இது' வந்தது, உனக்கு...?” - பழனி கேட்டான். ஹரிபாபு கொஞ்சம் யோசித்தான். பிறகு சொன்னான்:

“அந்த அடக்கமும், அக்கப் போர் இல்லாமையும்தாண்டா எனக்கு நேசிக்கத் தோணிச்சு. நான் யோசிச்சும் பார்த்துட்டேன். நான் அதிகமா ஆசைப்படறதை, அதையும் தாண்டி... என்னால தவிர்க்க முடியலை...”

“பார்த்துடா, நிறையக் கவிதை எழுத ஆரம்பிச்சுடப் போறே....!” என்றான் சுந்தர்.

“நானொரு முட்டாளோன்னும் நினைச்சுக்கிறேன். ரொம்ப ரொம்ப குள்ளமானவன், வயசு மட்டும்தான் ஏறும். நிச்சயமா என்னால உணர்ச்சிகளை, நேசிப்பைத் தியாகம் பண்ண முடியலை. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதைதான். ஆனா, முடியலை. ஒரு பெண்ணை நினைச்சப்போ, எனக்குத் தோணிய முதல் பெண், அவள்தான்...!” அவனது கண்கள் மினுமினுத்தன. என்னைப் பார்த்தான்.

“நாளைக்கு லஞ்ச் அவர்ல அவங்களைப் பார்த்து உன் காதலைச் சொல்லிடறேன்...” என்று நான்

உறுதியளித்தேன்.

மறுநாள். அலுவலகம் எட்டியவனுக்குப் பேரிடியான செய்தியொன்று காத்திருந்தது.

அரைமணி நேரத்திற்கு முன், சந்தான லக்ஷ்மி, பாலாஜி தியேட்டருக்கருகில் செங்கல் லோடுடன் வந்த லாரியால் மோதப் பட்டு இறந்து விட்டாளாம்!

ஐயோ, இதென்ன சோதனை? என்னால் நம்பவே முடியவில்லை. அவளது தட்டச்சு இயந்திரம் தோல் போர்வை மூடி ஆளின்றித் தனித்திருந்தது. அதைக் கண்டு நெஞ்சம் அடைத்தது. எல்லோரும் பெரிய மருத்துவ



"அந்தாளு கட்சிமாறி அதிமுகவுல சேர்ந்தது கூட பரவாயில்லே, ஆனா..."

"ஆனா என்ன...?"

"அதுக்காக பிச்சைமுத்துன்ற தன்பேரை பச்சைமுத்துன்னு மாத்திக்கிட்டது தான் ரொம்ப கேவலமா போச்சு!"

— சீர்காழி வி. ரேவதி

மனை சென்றிருந்தனர். ஹரிபாபுவும் போய் விட்டிருக்கிறான்.

மருத்துவமனைக்குள் நுழைவதற்கே வெறுப்பாய் இருந்தது.

வரவேற்பறைக்கருகே பழனியும் சுந்தரும் நின்றிருந்தனர். ஓடி வந்து கைகளைப் பிடித்துக் கொண்டார்கள். கலங்கியிருந்தார்கள். இடித்தவுடன், மொபெட்டோடு தூக்கி யெறியப்பட்டிருக்கிறாள். அதிர்ச்சியிலேயே உயிர் போயிருக்க வேண்டும்!

"ஹரிபாபு எங்கே...?" என்றேன்.

"இங்கேதான் இருந்தான். அப்புறம் காணலை..."

முட்டாள். இழப்பை நினைத்து ஏதாவது செய்து கொண்டு விடப் போகிறான் என்று பயந்தேன். பக்கத்தில் பரந்த கடல் வேறு!

நேராய் கடற்கரையை நோக்கித்தான் வண்டியைச் செலுத்தினேன். நெருங்க நெருங்க, அலைகளின் இரைச்சல் அதிகமாகிக் கொண்டு வந்தது. 'லே கபே' அருகில் பெரிய பாறைக் குவியல்களில் ஹரிபாபு அமர்ந்திருந்தான். வண்டியை ஓரமாய் நிறுத்தி விட்டு, அவனை நெருங்கினேன். தோள்களைத் தொட்டேன். நிமிர்ந்தான். நிறைய அழுது சிவந்த முகம். அருகிலமர்ந்து கையைப் பிடித்தேன். சிறு குழந்தை போலத் தேம்பினான்.

"எல்லாம் நடந்துட்டா, அப்புறம் என்ன தாண்டா வாழ்க்கை...?" என்றேன்.

"அவ என்னோட அன்பை நிராகரிச்சுட்டாவது போயிருக்கலாம். ஒண்ணுமே சொல்லாம போனதுதாண்டா எனக்குத் தாங்க முடியலை...!" என்று தழுதழுத்தான்.

"என்னடா குழந்தை மாதிரி. இதெல்லாம் நாம எதிர்பார்த்தா நடந்துச்சு? அமைதியா இரு.." கடலிலிருந்து சூடான காற்று முகத்தில றைய ஆரம்பித்து விட்டது.

"நான் ரூமுக்குப் போறேன். என்னால அவளை அந்த நிலையில பார்க்க முடியாது..."

"சரி, வண்டில ஏறு..." என்றேன் மறுப் பேதும் கூறாமல்.

எல்லாம் முடிந்து விட்டது. எவ்வளவு வற்புறுத்தியும் அந்த உயிரற்ற தோற்றத்தைப் பார்க்க அவன் வரவேயில்லை.

இரவு ஒன்பது மணியிருக்கும். கார்த்தியும் பழனியும் என் வீட்டுக்கு வந்தார்கள்.

"ஒரு விஷயம்டா...!" என்றார்கள். நீல நிற விளம்பர நோட்டீஸ் ஒன்றைக் கொடுத்தார்கள்.

"இது நம்ம சந்தான லக்ஷ்மி ஹேண்ட் பேக்கில் இருந்ததுடா...!" என்றனர்.

தலைகீழாய் மடக்கப்பட்டிருந்த காகிதத்தை திருப்பிப் பார்த்தேன். பின்புற வெற்றிடம் முழுவதும் ஏழெட்டு முறை 'சந்தான லக்ஷ்மி ஹரிபாபு' என்று தமிழில் எழுதப் பட்டும், அருகிலேயே ஆங்கிலத்தில் 'லக்ஷ்மி பாபு... லக்ஷ்மி பாபு' என்று ஏகப்பட்ட கையெழுத்துகளும், சந்தான லக்ஷ்மி போட்டுப் பார்த்த மாதிரிகள்.

"ஹரிபாபுவுக்கு இது தெரியுமா...?"

"தெரியாது...!"

"தெரியவே வேண்டாம்...!" என்றேன். ○

To Women who want to break the Mealtime Monotony

The Secret of making the everyday Homely Meal more interesting



Now RECIPE-OF-THE-MONTH CLUB Home-delivers Cookery Recipe VCD every month

Annual Subscription (12 VCDs) Rs.450/- * | Half-yearly subscription (6 VCDs) Rs.250/-*

Our key consultant for Recipes : Mrs. Santi Balaraman, Chennai

Recipe items of the First VCD:

1. Keerai Masiyal 2. Bisi Bele Bath 3. Chinese Manchurian
4. Potato Fry 5. Chinese Crispy Vegetables 6. Mulagootal
7. Akkara Vadisal (Sweet Milk-Rice preparation)

Look forward to exciting varieties in our forthcoming monthly editions: Ranging from traditional sambar and rasam to Hyderabad biriyani or Kashmiri Pulav, or Vegetabe Au Gratin, exciting varieties – month after month. And delectable Thai, Mexican, Italian cuisines, too.

To Subscribers the VCD is home-delivered **FREE**- one every month. At as low as Rs.450- for 12 VCDs and Rs.250/- for 6 VCDs. **At around Rs.40/- per VCD.** Single VCD in the market is around Rs250/- and more. The **FREE HOME-DELVERY offer** is applicable only for the Cities of **Chennai, Madurai, Trichy and Coimbatore**. For other Centres Rs.20/- per month extra towards packing and forwarding expenses (additional Rs.240/- for annual and Rs.120/- for half-yearly subscriptions). Offer valid till stocks last. Delivery in about three weeks after payment realisation.

Please fill up the Form below(Xerox can also be used) and forward with your Payment by crossed cheque or DD or by money order to Visesh Digital.

***At present only English version. Low introductory offer for a short period.**

All transactions come under the jurisdiction of Chennai



You can call us on **98410 77500**

VISESH DIGITAL
Post Box No.1490
305-E, T.T.K. Road, Alwarpet, Chennai 600 018
Visit us at : www.cookeasy.org

KAL

I subscribe to ☐ Annual Subscription ☐ Half-yearly Subscription .

My crossed Cheque/DDNo................................for Rs. .... drawn in favour of VISESH DIGITAL enclosed. I have sent Rs. .... By Money Order favouring VISESH DIGITAL.

Signature

Name : .... Date of Birth : ....

Qualification : ....Occupation ....

Address : ....

....

City .... State .... PIN ....

Phone : .... E-mail ....

புகழ் தந்த புழு!



• வகுப்பில்...

இந்த அளவு அங்கிகாரம் கிடைத்துவிடுமென நினைத்துக்கூடப் பார்க்கவில்லை அந்தப் பெண்மணி. ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பாக டான்வா பண்ணை மகளிர் பயிற்சித் திட்டத்தில் உறுப்பினராகச் சேர்ந்தார். கணவருக்குச் சொந்தமான மூன்றரை ஏக்கர் நஞ்சை வயலிலும், தமது அரை ஏக்கர் வீட்டுத் தோட்டத்திலும், சிறந்த வகை சாகுபடிக்கு ஆலோசனை பெற முயன்றவரை, இயற்கை உரம் தயாரிக்கும் புதிய முயற்சியில் ஈடுபடத் தூண்டியது டான்வா.



திருவானைக் காவல் அருகே உள்ள திருவளர்ச்சோலை குக்கிராமத்தில் வசித்து வருபவர் ஆ. அந்தோணியம்மாள். இயற்கை உரம் தயாரித்து வரும் அந்த இல்லத்தரசியை, அவரது வீட்டுத் தோட்டத்தில் சந்தித்தோம்.

மண்புழுக்களின் கழிவுகளே இயற்கை உரம் எனப்படுகின்றது. இவை எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன?

ஒரு தொட்டிக்குள் ஈரப்பதத்துடன் ஆன குப்பைகளைப் போட்டு, அதன் மீது களி மண் கொண்டு பூச வேண்டும். சிறு துவாரங்கள் வழியே ஒரு தொட்டிக்கு ஆயிரம் மண் புழுக்கள் என்று உள்ளே விட வேண்டும். நாற்பத்தைந்து நாட்கள் கழித்து களிமண் ஓட்டைப் பிரித்தெடுத்து, சல்லடையால் சலிக்க மண்புழுக்கள் தனியாகவும், மண் புழுக் கழிவுகள் உரமாகவும் கிடைக்கும்.


காலப் போக்கில் இதில் திருப்தி அடையாத ஆ. அந்தோணியம்மாள், கடந்த நான்காண்டுகளுக்கு முன்பாக தாமே ஒரு புதிய முறையைக் கையாண்டு, அதில் வெற்றியும் பெற்றுவிட்டார். இந்தப் புதிய வழிமுறையை தமிழ்நாட்டில்தான் மட்டுமே முதன்முதலாக செயல்படுத்திப் பார்த்தாகவும், அதன் பின்னரே தற்போது பல இடங்களிலும் அவரது செய்முறை பின்பற்றப்பட்டு வருவதாகவும் நம்மிடம் கூறுகிறார் அவர். தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பெண்கள் இங்கு வந்து, இயற்கை உரம் தயாரிப்பது குறித்து பயிற்சி எடுத்து செல்கின்றனராம்.

வீட்டுத் தோட்டத்தில் மட்டும் மண் புழு உர உற்பத்திக்கென பதிமூன்று தொட்டிகள் இருக்கின்றன. தரை மீது சிமெண்ட் தளமிட்ட மூன்றடி நீளம், மூன்றடி அகலம் கொண்ட சிமெண்ட் தொட்டிகள். அதனுள்ளே நான்கு அங்குல உயரத்துக்கு சாணக் குப்பை. அதன் மீது சாணிப் பால் தெளிப்பு. பிறகு இரண்டு அங்குல உயரத்துக்கு இலை, தழை குப்பை. அதன் மீது சாணிப் பால் தெளிப்பு. இது போல மூன்று அடுக்குகளில் தொட்டியில் நிரப்ப வேண்டும். அதன் மீது மூன்றங்குல உயரத்துக்கு சாணக் குப்பையைப் போட்டு, பச்சை சாணிப் பால் கொண்டு மெழுக வேண்டும். அதன் மேற்பரப்பில் முழுச் செங்கற்களை, இரண்டு அங்குல இடைவெளிகள் விட்டு

பரப்ப வேண்டும்.

அந்த இடைவெளிக்குள் மண்புழுக்களை விட, அவை செங்கற்களின் அடியில் நுழைந்து கொண்டு, சாணக் குப்பைகளை உணவாகக் கொண்டு, கழிவுகளை வெளித் தள்ளிவிட, மணல் கலக்காத செங்குருணை இயற்கை உரம் தயார்!

குறைந்தது ஒரு தொட்டிக்குள் ஆயிரம் மண்புழுக்கள் வீதம் விடலாம். அவற்றின் அதிகபட்ச ஆயுள் ஓர் ஆண்டு. மண்புழுக்கள் இறந்து போனாலும், இனப்பெருக்கத்தின் மூலமாக, எண்ணிக்கையைச் சம அளவில் வைத்திருக்குமாம். ஒரு தொட்டியில் இருந்து பத்துப் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை என, நாற்பத்தைந்து நாட்களில் நான்கு தடவை இயற்கை உரம் பெற்று விடலாமாம். அதிகபட்சமாக ஒரு தொட்டியில் இருந்து மட்டும், நாற்பத்தைந்து நாட்களில் நூற்றைம்பது கிலோ மண்புழு உரம் கிடைக்கும்.



“மண் என்பது பலப் பல நுண்ணுயிர்களின் கலவை, அதன் மீது ரசாயன உரம் தெளித்து, பூச்சிக்கொல்லி மருந்தடித்து, நாம் அவற்றை மடியச் செய்து, மண் வளத்தைத் தரமிழக்கச் செய்து கொண்டே வருகிறோம். எங்கள் வயல் மற்றும் தோட்டங்களில் இயற்கை உரமும், இயற்கை பூச்சிக் கொல்லி மருந்து (நாங்களே தயாரிப்பது) மட்டுமே பயன்படுத்தி வருகிறோம். அதனால் எங்கள் விவசாய நிலத்தின் மண் வளம் மேம்பட்டு இருக்கின்றது. அதனால் அதிக மகசூலும் கண்டு வருகிறோம்” என்கிறார் இயற்கை உரம் தயாரிக்கும் இல்லத்தரசியின் கணவர் ஆரோக்கியசாமி. அவர் திருச்சி பாய்லர் ஆலையில் வேலை பார்த்து வருகிறார்.



• படைப்பாற்றல் பதக்கம்!



மாதம் ஒன்றரை டன் மண்புழு உரம் விற்பனை செய்து வருவதன் மூலமாக மாதம் பத்தாயிரம் ரூபாய் வருவாய் பெறும் அந்தோணியம்மாள், உரம் தயாரிப்பில் பயிற்சியும் தருகிறார்.

ஜெனீவா நகரில் இயங்கி வரும், அகில உலக பெண்கள் உயர்வு அமைப்பானது, 2002ஆம் ஆண்டுக்கான ஊரக வாழ்வில் பெண்களின் படைப்பாற்றல் பிரிவின் சாதனைப் பெண்மணியாக அவரைத் தேர்வு செய்துள்ளது. அதற்கான பதக்கமும், பாராட்டுச் சான்றிதழும், பரிசுத் தொகையாக ரூபாய் இருபத்தைந்தாயிரமும் பெற்றிருக்கிறார் ஆ. அந்தோணியம்மாள்.

கட்டுரை, படங்கள்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

இந்த வாரம் கடி... வாசகர் உபயம்



''சினிமா நடிகைக்கும், டீ.வி. நடிகைக்கும் என்ன வித்தியாசம்?''

''சினிமாவில மேக்-அப் டெஸ்ட் பார்ப்பாங்க. டீ.வி.யில அழுகையை டெஸ்ட் பண்ணிப் பார்ப்பாங்க.''

- எஸ்.முகம்மது யூசுப்

''பக்கத்து வீட்டுப் பழைய இரும்பு வியாபாரிகிட்ட என்ன ரொம்ப நேரம் பேசிட்டிருந்தீங்க?''

''சும்மா 'உலோக' விஷயங்கள் தான்!''

- வி. சகிதா முருகன், தூத்துக்குடி

''எல்லா அரசியல்வாதிக்கும் பிடிக்கிற மாதிரி என் பையனுக்கு ஒரு பேர் வைங்க தலைவரே...?''

''புறம்போக்கு..!''

- சீர்காழி வி.ரேவதி

''தினம் ஒரே ஒரு பச்சைக் காரட்டை டாக்டர் சாப்பிடச் சொன்னாருன்னு மார்க்கெட் முழுதும் அலைஞ்சும், கிடைக்கலே!''

''நிறைய வந்திருந்ததே!''

''எல்லாம் சிவப்பாகத்தானே இருந்தது, பச்சையாக இல்லையே!''

- திவாகரன், திருநெல்வேலி

''இவர் ஐம்பது ஓவரும் நின்னாரு, ஆனா ஒரு ரன்கூட எடுக்கல.''

''பந்தையெல்லாம் வேஸ்ட் பண்ணிட்டாரே..?''

''அட அவர் அம்பயருங்க.''

''தலைவரே, நீங்க நிலவுல போய் ஒளிஞ்சுகிட்டாக்கூட சி.பி.ஐ. உங்களை அரெஸ்ட் பண்ணிடும் போல..!''

''அப்படியா சொல்றே, வேற வழியில்லை 'மூன்' ஜாமீன் எடுத்திட வேண்டியதுதான்!''

- அதிரை யூசுப்



ஆஸ்துமா ஈஸ்னோபீலியா, அலர்ஜி, சைனஸ், தும்மல், காசநோய்களுக்கு தெய்வீக மூலிகை சிகிச்சை



ஆஸ்த்துமா என்றாலே நுரையீரல் பாதிக்கப்பட்டுள்ளது என்பது எல்லோருக்கும் தெரியும். நம் உடலின் மார்பறையில் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு நுரையீரல்கள் உள்ளன. நமது மூச்சு மண்டலம் மூக்கு, மூச்சுக்குழல், மூச்சுக் கிளைக்குழல், நுரையீரல், மூச்சு நுண் குழல்கள் மற்றும் காற்று நுண்ணறை போன்ற பகுதிகளைக் கொண்டுள்ளது. இதில் முக்கியமாக பிராங்கஸ் எனப்படும் மூச்சுகிளைக் குழல்கள் பாதிக்கப்படும் போதுதான் ஆஸ்த்துமா ஆரம்பாகிறது.

ஆஸ்த்துமாவில் மூன்று வகைகள் உள்ளன.

1. மூச்சுக் கிளைக் குழல்கள் (Bronchial Asthma) பாதிக்கப்படும் போது ஏற்படும் ஆஸ்த்துமா.
2. இதயம் பாதிக்கப்படும்போது (Cardiac Asthma) ஏற்படும் ஆஸ்த்துமா.
3. சிறுநீரக கோளாறால் ஏற்படும் ஆஸ்த்துமா (Renal Asthma)

மூச்சுக்கிளைக் குழல்கள் (Bronchial Asthma) பாதிக்கப்படும்போது ஏற்படும் ஆஸ்த்துமா : நமது மூச்சு மண்டலம் மென்மையான சவ்வுகளால் ஆனவை. அந்தப் பாதையில் காற்றைத் தவிர வேறு எந்த, மிக நுண்ணிய பொருட்கள் அந்தப் பாதையை தொட்டாலும், மென்மையான சவ்வுகள் சுருங்கிவிடும். மூச்சு கிளைக் குழல்கள் சுருங்கும்போது நுரையீரலுக்கு சென்றுக் கொண்டு இருக்கும் ஆக்ஸிஜன் அளவு குறைகிறது. இதனால் மூச்சு இரைப்பு ஏற்படுகிறது. இளம் வயதில் ஏற்படும் ஆஸ்த்துமாவுக்கு பிரைமரி காம்ப்ளக்ஸ் என்று கூறுவார்கள். நமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து, நோய்க்கிருமிகள் அதிகமாகி இரத்தத்தில் ஈஸ்னோபில்ஸ் என்ற அக்கள் தன் எண்ணிக்கையில் இருந்து அதிகமாகி விடும். இதைத்தான் ஈஸ்னோபீலியா என்று கூறுவார்கள். தொற்றுக் கிருமிகள் அதிகமாகும்போது டஸ்ட் அலர்ஜி, சளி, இருமல், தும்மல், மூக்கில் நீர்வடிதல் போன்ற அறிகுறிகள் தோன்றும். இதனை கவனிக்காவிட்டால் சைனஸ் ஆக மாறிவிடும். சைனஸ் நமது மூக்குப் பகுதியில் உள்ளன. இது நாம் உள்ளிழுக்கும் காற்றை ஈரப்பதமாக்கி நுரையீரலுக்கு அனுப்பும் வேலையை செய்கின்றன. சைனஸ் பகுதி கிருமிகள் மூலம் பாதிக்கப்படும்போது நீர் தேக்கம் ஏற்பட்டு தலைவலி, சளி, தலைபாரம், காய்ச்சல் போன்றன ஏற்படும். இந்த சைனஸ் நோயை கவனிக்காவிட்டால் தான் இதன் அடுத்த நிலையான மூச்சுக்கிளைகள் பாதிக்கப்பட்டு ஆஸ்த்துமாவாக மாறிவிடும்.

இதய நோயால் ஏற்படும் ஆஸ்த்துமா (Cardiac Asthma) : இதயம் நோயால் பாதிக்கப்படும்போது ஏற்படும் மூச்சிரைப்பு ஆகும். இதில் மூச்சுத் திணறல், வேகமான, அதிகமான நாடித்துடிப்பு, நெஞ்சுவலி, படபடப்பு, போன்றன ஏற்படும். இவர்களுக்கு பகலைவிட இரவில் தான் அதிகமான மூச்சுத் திணறல் ஏற்படும்.

சிறுநீரக கோளாறால் ஏற்படும் ஆஸ்த்துமா : சிறு நீரகங்கள் பாதிக்கப்படும்போது ஏற்படும் மூச்சிரைப்பு ஆகும். சிறுநீரகங்கள் பழுதடையும்போது இரத்தத்தில் உள்ள கழிவுப் பொருட்களும், உற்பத்தி ஆகும் சிறுநீரும், போதுமான அளவு வெளியேற்றப்பட முடியாததால் உடலில் நுரையீரல் முதல் பல உறுப்புகளில் நீர் தேக்கம் ஏற்பட்டு மூச்சுத் திணறல் ஏற்படும்.

ஆஸ்த்துமா நோய்க்கான காரணங்கள் : புகைத்தல், பொடி போடுதல், மதுவகைகள், நிறம், மணம் போன்றவற்றிற்காக போடப்படும் இராசயணம் கலந்த பொருட்கள், பலவித நோய்களுக்காக எடுக்கும் வீரியமிக்க இராசயணம் கலந்த மருந்துகள், நீண்ட நாள் மலச்சிக்கல், பால், டீ, காப்பி, இனிப்பு வகைகள், குளிர்ந்த பானங்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைவு, டென்சன், கவலை, பயம், பனி, குளிர், மழைப் போன்ற சீதோஷ்ண மாறுபாடுகள், நச்சுக்காற்றுக்கள், மாசு நிறைந்த புகை போன்றவற்றால் சுவாச உறுப்புகள் பாதிப்படைந்து சுருக்கம் ஏற்பட்டு ஆக்ஸிஜன் அளவு குறைந்து விடுகிறது. இதனால் மூச்சிரைப்பு தோன்றுகின்றன.

ஆஸ்த்துமா நோய்க்கான அறிகுறிகள் : சளி, இருமல், தும்மல், மூக்கில் நீர் வடிதல், மூக்கடைப்பு, மூச்சுத் திணறல், மூச்சுவிட முடியாமை, பசியின்மை, மூச்சுவிடும்போது விசில் சத்தம் வருதல், மலச்சிக்கல், கோழை, கபம் போன்றன இருக்கும்.

ஆஸ்த்துமா நோய்க்கான தெய்வீக மூலிகைகள் : வேப்பிலை, வில்வம், துளசி, தும்பை, கீழாநெல்லி, தூதுவளை, அதிமதூரம், சித்தரத்தை, நெல்லி, ஆடாதொடா, கற்பூரவல்லி, திப்பிலி, மிளகு போன்றவைகளை பொடி செய்து சம அளவில் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். பின் இவற்றில் இருந்து இரண்டு ஸ்பூன் தூள் எடுத்து தண்ணீரில் கலந்து உணவுக்கு முன் தினமும் காலை, இரவு உட்கொள்ள வேண்டும். இம்மூலிகைகளில் வைட்டமின் ஏ, சி உள்ளது. ஆண்டி-ஆக்ஸிடன்ட் என்ற நோய் எதிர்ப்பு சக்தியும், தொற்று நோய் கிருமிகளை அழிக்கும் சக்தியும் உள்ளது. இதனால் மூச்சுக் குழல்கள் பாதிக்கப்படாமல் இயல்பாக செயல்பட முடிகிறது.

ஆஸ்த்துமாவுக்கான இயற்கை சிகிச்சை முறைகள் : அனல் சிகிச்சை, மூச்சுப் பயிற்சி, ஜலநேத்தி, உபவாசம், யோகாசனம், ஆவிபிடித்தல், சக்தி நிறைந்த இயற்கை உணவுகள் சாப்பிடுதல், நீர் குளியல் போன்றன செய்தால் மூச்சுக் குழல்கள் விரிவடைந்து காற்றானது எளிதாக நுரையீரலுக்கு சென்றடைகிறது. இதனால் ஆஸ்த்துமா முற்றிலும் குணமாகியது.



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

Chennai Cell : 98410 45138 Vellore Cell : 98423 69696

தலைமை முகவரி : Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, Dr.M.சிவசக்தி, S/o Dr.C.K.மாணிக்கவாசகம்

P.B.No:30, No.3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர், வேலூர் Dt.-635 601 ✆ 04179-220469, 222769

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 10

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 5 to 7 ✆ 28424285, 28427638

7 & 8ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), ✆ : 24011589, 42083879

9ந் தேதி - பெங்களூர் : காலை 11 to மாலை 1 மணி வரை, ஹோட்டல் பிரைட்வே, (கல்பனா தியேட்டர் அருகில்) செப்பேகுடா ரோடு. ✆ : 080-2266374, 2873013

20 & 21ந் தேதி - புதுடெல்லி : காலை 9 to இரவு 8 மணி வரை South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh, ✆ : 25717126, 25723651



லாரி கோம்ஸும் மற்றும் சில மாணவர்களும்...

பஞ்சாயத்து ஆபீஸ்களில் மட்டுமே தொலைக்காட்சி வந்திருந்த காலம் அது. நான் வசித்த கேளம்பாக்கம் கிராமத்தில் ஒரு சில உப்பள முதலாளிகள் வீட்டிலும், தோல் தொழிற்சாலை ஆபீசர்கள் வீட்டிலும் மட்டும் டீ.வி. இருந்தது. தோல் தொழிற்சாலை ஆபீசர்கள் மட்டும்தான் நானறிய அக்காலத்தில் கிரிக்கெட் வெறியர்களாயிருந்தார்கள்.

ஐந்து நாள் மேட்ச் என்றால், முந்தைய நாளிலிருந்தே ஆபீசுக்கு லீவு போட்டுவிட்டு, கருட்டிவிட்ட லுங்கியும், நாலைந்து பாக்கெட் சிஸர்ஸ் சிகரெட்டுமாக, சோபாவில் தலையணை வைத்து ஒரு மாதிரி ஸ்ரீரங்கநாதர் போஸில் படுத்துக் கொண்டு, டீ.வி. வால்யூம், பிக்சர் பட்டன்களை அட்ஜஸ்ட் செய்து வைத்துக் கொள்ள ஆரம்பித்து விடுவார்கள்.

என்னை மாதிரி டீ.வி. இல்லாத வீடுகளில் பிறந்த பாபாத்மாக்களிடம் தலா நாலணா வாங்கிக் கொண்டு, ஆபீசர்களின் சம்சாரங்கள் வராண்டாவில் அமர்ந்து பார்க்க ("யாரும் பேசக் கூடாது") மனம் கனிந்து அனுமதிப்பார்கள்.

மால்கம் மார்ஷல், மைக்கேல் ஹோல்டிங், பேட்ரிக் பேட்டர்சன், கார்னர் போன்ற பெயர்களைச் சொன்னாலே மனத்தில் பனைமரம் போன்றதொரு பிம்பம் உண்டாகும். என்ன வேகம்! என்ன லாகவம்! ஆனால் ஒருத்தர் மூஞ்சி கூட தனித்தனியாக மனத்தில் பதியாமல், ஒட்டு மொத்தமாக ஒரு நெகடிவ் பிம்பம்தான் உண்டாகும். (பிற்பாடு நெகடிவைக் கழுவி பிரிண்ட் போட்டுப் பார்க்க தினத்தந்தி உதவியது.)

அந்த சேப்பாக்கம் மேட்சில் இந்தியா தோற்கவில்லை. கவாஸ்கர் 'ஏழெட்டுநாள்' நின்று ஆடி, இருநூற்று முப்பத்தஞ்சோ என்னவோ அடித்து டிராவாக்கிவிட்டு, மேன் ஆஃப் தி மேட்சையும் வாங்கிக் கொண்டு ரயிலேறி விட்டார்.

ஆனால் அந்த மேட்ச் எங்கள் அரசுயர் பள்ளி மாணவர்களிடையே அன்று மிகப் பெரிய பாதிப்பை உண்டாக்கியது. அது வரை ஸாஃப்ட். பால் மட்டுமே ஆடிக் கொண்டிருந்த பள்ளிப் பையன்களின் பார்வை, முதல் முதலாக கிரிக்கெட்டின் மீது விழுந்தது.

பா.ராகவன்

ஸாஃப்ட் பாலெல்லாம் ஒரு விளை யாட்டா? ஸ்டம்பு இல்லை என்பது தவிர, அதில் பெரிய அட்வான்டேஜ் கிடையாது. ஓங்கி ஒரு அடி அடித்துவிட்டு உருட்டுக் கட்டை மாதிரி இருக்கும் மட்டையை விசிறிக் கடாசிவிட்டு, பெரிதாக ஒரு சதுரம் ஓட வேண்டும். இதில் என்ன பெப் இருக் கிறது? மேலும் ஆடும்போது பள்ளியின் மாதர் குல மாணிக்கங்கள் நின்று ரசிப்பது கிடையாது.

ஆனால் அந்த லாரி கோம்ஸின் பஞ்சு மிட்டாய்த் தலை குறித்து வகுப்பில் வளர் மதி எத்தனை சிலாகித்துப் பேசினாள்? மொட்டைத்தலை ரிச்சர்ட்ஸின் சூயிங்கம் மெல்லும் அழகைக்கூட ஜெயலலிதா விட்டு வைக்கவில்லை.

'ஹேண்ட்ஸம்' என்ற சொல்லை எங்கள் பள்ளி வளாகத்தில் அந்தப் பெண்கள்தான் முதல் முதலில் அறிமுகப்படுத்தினார்கள். அந்தப் பெரிய கௌரவம் முதல் முதலில் மேற்கிந்திய ஆட்டக்காரர்களுக்குக் கிடைத் ததன் சூட்சுமம்தான் இன்றுவரை எனக்குப் புரியவில்லை.

அது நிற்க, நாங்கள் ஒட்டுமொத்தமாக ஸாஃப்ட்பாலைப் புறக்கணித்து கிரிக்கெட் ஆடுவது என்று முடிவு செய்தோம். உடனே பத்மநாபன் என்ற குடுமிநாதன் தன் கூந் தலைப் பாதியாக வெட்டிக் கொண்டு, லாரி கோம்ஸ் மாதிரி சிகையலங்காரத் துக்கு முயற்சி செய்ய ஆரம்பித்து, தலை யில் நிறைய காயங்கள் சம்பாதித்துக் கொண்டான்.

மாதவன் என்னும் ஒன்பதாங் கிளாஸ் பையன், ஹோல்டிங் மாதிரி ஓடிவந்து பந்து வீசத் தொடங் கினான். அவனது பந்துவீச்சுக்கு நாங்கள் தேர்ட் மேனிலும் செகண்ட் ஸ்லிப்பிலுமாகத் தலா இரண்டு விக்கெட் கீப்பர்களை நிறுத்த வேண்டியதானது.

பள்ளியின் கூட்டுறவுச் சங்கக் கடையில் நிறைய சூயிங்கம்கள் விற் பனையாவதாக வாட்ச்மேன் எட்டியப்பன் வந்து சொல்லி விட்டுப் போனான்.

உடற்பயிற்சி

ஆசிரியர் மாசிலாமணி, பையன்களின் திடீர் கிரிக்கெட் மோகத்தை ஊக்குவிக்கும் விதமாக ஹெட்மாஸ்டரிடம் பேசி, பள பளவென எண்ணெய் தடவிய இரண்டு பேட்டும், நாலு ஸ்டம்பும் (ரன்னர் ஸைடுக்கு ஒண்ணு போதும்!) ஒரு பெட்டி நிறைய ரத்தச் சிவப்பில் வாசனை மிக்க கிரிக்கெட் பந்துகளும் வாங்கி வந்து விட்டார்.

ஆர்வம் மிக்க மாணவர்களை இரண்டு அணிகளாகப் பிரித்தார்கள். ஒவ்வொரு அணியிலும் பத்தொன்பது பேர் இடம் பெற்றிருந்தோம். ஆளுக்கு இரண்டு ஓவர் ஆடுவது, இரண்டு ஓவர் பந்து வீசுவது, என்று பொதுவில் முடிவு செய்து கொள் ளப்பட்டது.

ஒரு ரெண்டு மாசகாலம் அந்த ஜுரம் எங்களுக்கு இருந்தது. கனவிலெல்லாம் பந்து வீசிக் கொண்டிருந்தோம். ஒவ்வொரு முறையும் சகமாணவிகள் கைதட்டிவிட்டு, காதோடு வந்து ஹாண்ட்சம் என்று



சொன்னார்கள்.

தினசரி மாலை நாலு மணி தொடங்கி இருட்டி, எதிராள் தென்படாமல் போகும் வரை விளையாடி, ஒரு மாதிரி பேட்டைப் பிடிக்கவும், பந்து வீசவும் பயின்றோம்.

மாசிலாமணி வாத்தியார் அபிஷியலாக ஒரு மேட்ச் ஏற்பாடு செய்தார். வேறு வழியில்லை, கிரிக்கெட்டில் 11 பேர்தான் ஆட முடியும் என்பதால், பயிற்சிக் காலங்களில் முதல் பந்தில் அவுட்டான பையன்கள் அனைவரையும் சப்ஸ்டிட்யூட் என்று அறிவித்துவிட்டு, மிச்ச முன்னோரை இரு குழுக்களாக்கி, ஒரு ஞாயிற்றுக் கிழமை பள்ளி மைதானத்தில் அந்த உற்சவத்தைத் தொடங்கி வைத்தார்.

ஓரத்தில் பானையில் குடிநீர் வைக்கப்பட்டிருந்தது. வீரர்களின் டிரிங்ஸ் இண்டர்வலின்போது அது பயன்படும்.

புதிதாக பிட்சுக்கு மேக் _ அப்பெல்லாம் போட்டு இருந்தார்கள். ஹெட்மாஸ்டர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் உட்கார ஒரு பிரத்யேக காலரி தயார் செய்யப்பட்டது. மரத்தடியில் ஏழெட்டு நாற்காலிகள். பள்ளியின் முன்னாள் மாணவரும், வேலை இல்லாத ஆனால், கிரிக்கெட் அனுபவம் இருந்த (டீவியில் நிறைய மேட்ச் பார்ப்பார்) சௌந்தர் என்கிற வாலிபர் அம்பயராக (லுங்கியுடன்) வந்து நின்றார். மாசிலாமணி வாத்தியாரே லெக் அம்பயராக நின்று கொண்டார். காலுக்குக் குறிபார்த்து யாரும் பந்து வீசமாட்டார்கள் என்கிற நம்பிக்கையில் அவரது கையில் அந்த வார ஆனந்த விகடனும் இருந்து.

நாங்கள் பெரிதும் எதிர்பார்த்த எங்கள் சக மாணவிகள் ஒரு குழுவாக, யூனிஃபார்ம் தவிர்த்து, வண்ணப் பாவாடை சட்டையுடன் அடிக்கடி தமக்குள் பேசிச் சிரித்தபடி ஒரு ஓரத்தில் அமர்ந்திருந்ததை பத்மநாபன் கவனித்துச் சொன்னான். அவனுக்குள் அப்போது தான் ஏன் லாரி கோம்ஸாக மாறினோம் (நின்ற இடத்திலிருந்து பந்து வீசுவான்.) ஒரு மார்ஷலாகியிருக்கலாமே என்கிற வருத்தம் மேலோங்கியிருந்ததை நாங்கள் உணர்ந்தோம்.

காற்றே... நீ கட்டில் ஆனாய்!

மேலை நாட்டில் பெரும் பிரச்னையே... குடியிருக்கும் இடம்தான். சிறிய இடத்தில் வசிப்பவர்களின் சௌகரியத்துக்காக சோபா, கட்டில், மேஜை போன்ற வற்றை கெட்டியான பி.வி.சி.யில் பலூன் டைப்பில் வடிவமைத்துள்ளனர். இவற்றில் காற்றை



முதல் ஓவரை மாதவன் ஓடி வந்து வீசினான். எல்லாப் பந்துகளும் ஹெட்மாஸ்டரின் சோடாபுட்டிக் கண்ணாடியை நோக்கியே வீசப்படுவதாக எங்களுக்குத் தோன்றியது. (ஹெட் மாஸ்டர் இங்கிலீஷ் செகண்ட் பேப்பர் எடுப்பவர்.) "ஸ்டம்புக்குப் போடுப்பா" என்று மாசிலாமணி வாத்தியார் அருகே வந்து சொல்லிவிட்டுச் சென்றதும், அடுத்த பந்து அவரை நோக்கிப் பாய்ந்தது.

நான் இருந்த அணி பேட்டிங் வரிசையில் இருந்தது. பள்ளி வளாகத்தில் புகழ் பெற்ற ஓபனிங் பேட்ஸ்மேன் நான்தான் என்பதால் (நிச்சயம் முதல் ஓவர் தாக்குப் பிடித்து விடுவேன்) மாணவர்கள் மத்தியில் ஒரு எதிர்பார்ப்பு இருந்தது.


ஆனால் ஓபனிங் எனினும் முதல் ஓவருக்கு நிற்க மாட்டேன். மாதவன் மீது என் நம்பிக்கை அப்படி. இரண்டாவது ஓவரில் நாலு ரன் எடுத்ததாக ஞாபகம்.

மேலும் ஓரிரு ஓவர்கள் கடந்திருக்கும். அதற்குள் விக்கெட் கீப்பர் கலியமூர்த்தி "எப்படா ட்ரிங்ஸ் இண்டர்வல் விடுவாங்க?" என்று கேட்டான். மாணவிகள் எதிரே ஸ்டைலாக பானை நீரை கோக்கோ கோலாவாக பாவித்து அருந்தி, வியர்வையைத் துடைத்து போஸ் கொடுக்கும் உத்தேசம் அவனுக்கு இருந்திருக்கலாம்.

விதி மாதிரி அன்று ஒரு பந்து கூட ஸ்டம்புக்கு வராததால், யாரும் ரன்

நிரப்பினால் ஃபர்னிச்சர் தயார். தேவையில்லாத சமயத்தில் காற்றைப் பிடுங்கி மடித்து வைத்து விடலாம்!

தும்பிக்கை ஆர்டிஸ்ட்!



இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட சில யானைகளை ரஷ்ய சர்க்கஸ் கலைஞர்கள், ஓவியம் வரையப் பழக்கப் படுத்தியுள்ளார்கள். கால்பந்து, கூடைப்பந்து, ரக்பி, இசை நிகழ்ச்சிகள் போன்றவை நடக்குமிடங்களில் பொதுமக்கள் முன்னிலையிலேயே இந்த யானைகள் ஓவியம் தீட்டி மகிழ்விக்கின்றன. இந்த ஓவியங்களை ஏலம் விடுவதன் மூலம் கிடைக்கும் வருமானம் உலக வனவிலங்குப் பராமரிப்புக்கு அளிக்கப்படுகின்றது.

- பாரீஸ். பார்த்தசாரதி

எடுக்கவோ, அவுட் ஆகவோ வாய்ப்பு இல்லாமல், இலங்கைப் பேச்சுவார்த்தை மாதிரி எங்கள் இன்னிங்ஸ் நீண்டு கொண்டே போனது.

ஹெட் மாஸ்டர் 'தோ வரேன்' என்று எழுந்து போனதும், பிற ஆசிரியர்களும் "வரட்டா மாசிலாமணி?" என்று கழன்று கொண்டார்கள். தூர்தர்ஷனில் அப்போதெல்லாம் காது கேளாதோருக்கான செய்தி அறிக்கை ரொம்பப் பிரபலம். காது கேட்பவர்கள் கூட அதைத் தவற விடமாட்டார்கள். அது முடிந்ததும் அதிர்ஷ்டம் இருந்தால் தமிழ்ப் படம் கூடப் போடுவான், என்று மாணவிகளும் எழுந்திருக்க ஆரம்பித்து விட்டார்கள்.

பத்து ரன்களைத் தாண்டாமல், ஒரு விக்கெட் கூட விழாமல், அன்றைய மாட்ச் பிற்பகல் ஒன்று முப்பது வரை அந்தரத்திலேயே நின்றது. மைதானத்தில் எங்களையும் மாசிலாமணி வாத்தியாரையும் தவிர வேறு ஆள் இல்லை. அம்பயராக நின்றிருந்த முன்னாள் மாணவர், சாப்பிட்டு வந்து விடுவதாகச் சொல்லிப் போனவரை திருப்போரூர் பஸ்ஸில் பார்த்ததாக பியூன் கணபதி வந்து சொன்னான். ஓவர் கணக்கு வைத்துக் கொண்டு ஆடியிருக்கலாம் என்பதெல்லாம் சிற்றறிவுக்கு எட்டாத காலம்.

"முடிச்சிக்கலாம்டா" என்றார் மாசிலாமணி வாத்தியார்.

"நாங்க பேட்டிங் பண்ண வேண்டாமா?" முறைப்புடன் கேட்டான் மாதவன். உக்கிரமாக ஓடி வந்து பந்து வீசி வீசி, அவன் பார்க்க ஒரு பிசாசு போலாகியிருந்தான்.

அடுத்த வார ஞாயிற்றுக் கிழமை மேட்சைத் தொடரலாம் என்றும், அப்போது எதிரணி முதலில் பேட் செய்யலாம் என்றும் ஆசிரியர் சொன்னார்.

அரை மனத்துடன் ஒப்புக் கொள்ள வேண்டியதானது.

அந்த அடுத்த வாரம் அப்புறம் வரவில்லை. நடுவே இன்ஸ்பெக்ஷன் வந்து விட, ஆங்கிலம் செகண்ட் பேப்பரிலும் (ஹெட்மாஸ்டர் எடுக்கிற வகுப்பு) புவியியலிலும் மாணவர்கள் ரொம்ப வீக் என்று ஜீப்பில் வந்த இன்ஸ்பெக்டர் சொல்லி விட்டுப் போய்விட்டார். அவ்வளவுதான். எங்கள் பேட்டும் பந்துகளும் பீரோவுக்குள் போய்விட்டன.

பத்மநாபன் மீண்டும் குடுமி வளர்க்க ஆரம்பித்தான். நாங்கள் சமர்த்தாக ஆங்கிலம் இரண்டாம் பேப்பரும் புவியியலும் படித்துக் கெட்டுப் போகத் தொடங்கினோம்.

கல்கத்தாவிலும் அநேகமாக இப்படித்தான் கிரிக்கெட் ஆர்வம் உற்பத்தியாகத் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால் அந்த ஊர் மாசிலாமணி வாத்தியார் விடாப்பிடியாக அடுத்தவார ஞாயிற்றுக்கிழமை மேட்சை நடத்தியிருப்பாராயிருக்கும். ○

புத்தம் புதுசு!




இயற்கையான இனிய சுவை கொண்ட இள நீர் தற்போது தரமான பாக்கெட்டுகளில் தமிழகமெங்கும் கிடைக்கிறது. கோடையின் கடும் வெப்பத்தைத் தாக்குப் பிடிக்க சுகாதாரமான எளிய வழி கிடைத்து விட்டதால், உங்கள் ஃபிரிஜ்ஜில் வாங்கி அடைத்து வைக்கலாம்.

சக்தி காயர் எக்ஸ் போர்ட்ஸ், 8, சக்தி இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், உடுமலைப் பேட்டை, பொன்னாச்சி _ 624 003



ஐம்பதாண்டுக் காலமாக அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பில் முன்னணியில் இருக்கும் 'லாக்மே' நிறுவனம், கோடைக்கேற்ற புதிய பொருட்களை அறிமுகப்படுத்தியுள்ளது. ஸ்ட்ராபெர்ரி ஸில்க் ஸ்ப்ளாஷ் ஷிம்மர் பிரான்ஸ், ஷைன் ஸ்கின் ஷிம்மர் ஸில்வர், ஜஸி ஃப்ரெஷ் ஸ்கின் கூலிங் ஜெல் என ஐந்து விதமான சருமப் பாதுகாப்புப் பொருட்களும் பெண்களின் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளன.

ஆஸ்துமா, மூச்சிரைப்பு, போன்ற நெஞ்சகப் பிரச்னை உள்ளவர்களுக்கு உடனடி நிவாரணம் தரக்கூடிய அற்புதமான இன்ஹேலர் _ ஏர் ஆஃப் லைஃப். சுவாசத் தடுமாற்றம் உள்ளவர்களுக்கு மட்டுமல்லாது, மாசு மிக்க சுற்றுப் புறத்திலிருந்து பாதுகாப்புப் பெற விரும்பினாலும் மருத்துவர் ஆலோசனையுடன் தூய பிராண வாயுவைப் பெறலாம்.



மெர்குரி மார்கெட்டிங், சென்னை-117. போன் : 22314085

உலகத்தரம் வாய்ந்த க்வாலிடி வால்ஸ் நிறுவனத்தின் குளுகுளு அறிவிப்பாக வந்துள்ளது 'டபுள் சண்டே' ஐஸ்கிரீம். 'சாக்கோ ஆல்மண்ட் அண்ட் ஹனி ஃபட்ஜ், 'பேஷன் ஃப்ரூட் கிவி' என இரட்டைச் சுவையுடன், கோடையைக் கொண்டாடலாம்! நா இனிக்க, வெயிலை விரட்டலாம்.



உறுதி! உயர்தரம்!! உன்னதம்!!!

சந்திரசேகர்

பில்டர்ஸ்

வீடு உருவாகும் இடங்கள்

மேற்கு மாம்பலம்

- ஆரிய கௌடா ரோடு
- ருக்மணி தெரு
- பரோடாத் தெரு
- மகாதேவ ஐயர் தெரு
- சர்தார் மாணிக்கம் தெரு
- பிருந்தாவனம் தெரு

கே.கே.நகர் (மேற்கு)

- திருவள்ளுவர் தெரு

(பாண்டிச்சேரி கெஸ்ட் ஹவுஸ் பின்புறம்)

சந்திரசேகர் பவுன்டேஷன்

74, பிருந்தாவன் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.

போன் : 24839646, 24849738 ஃபாக்ஸ் : 24836471



நாலும் தெரிஞ்சா நல்லதுதானே!

● கருணைக் கிழங்கு நறுக்கும்போது கை அரிக்கும். புளி கரைத்த நீரினால் கையைக் கழுவினால் அரிப்பு நிற்கும்.

● ஓமத்தை அரைத்துத் தலையில் தேய்த்து வெந்நீரில் குளித்தால் தலைவலி நீங்கும்.

● தேங்காய்ப் பாலில் சிறிது குங்குமப் பூவைச் சேர்த்து அரைத்து முகத்தில் பூசிக் கொண்டால் முகத்தில் உள்ள பருக்கள் மறையும்.

● வாழைத்தண்டு, முள்ளங்கி, வெள்ளரி ஆகியவற்றை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வதால் உடல் சீரான அழகு பெறும்.

● விருந்து சாப்பாட்டால் வயிற்றுப் பொருமல் ஏற்பட்டால், பச்சைக் கற்பூரத்தை வெற்றிலைப் பாக்குடன் சேர்த்துச் சாப்பிடுங்கள். மிக விரைவில் வயிற்றுப் பாரம் குறையும்.

● நெய்யில் வெள்ளைப் பூண்டை வதக்கி தினம் உண்டு வந்தால் கண்கள் நல்ல ஒளியுடன் விளங்கும்.

● சிவந்த கண்களுக்கு இரு சொட்டு விளக்கெண்ணெய் அல்லது பன்னீர் விடலாம்.

● பாட்டுப் பாடுகிறவர்கள், அதிகாலையில் இரண்டு கிராம்பை வாயில் வைத்து மென்று சாறு விழுங்கினால் தொண்டைக்கட்டு வராது.


● காஸ் சிலிண்டர் வைக்கும் இடத்தில் நீர் படுவதைத் தடுக்க, தரையில் ரங்கோலி ஸ்டிக்கர்களை வாங்கி ஒட்டலாம்.

● சிறுகுழந்தைகள் இனிப்பு அதிகம் உண்பதால் வயிற்றில் பூச்சி உண்டாகும். இதற்கு தித்திப்பு மாதுளையை முதல் நாள் கொடுத்து, மறுதினம் பாலில் சிறிது விளக்கெண்ணெயைக் கலந்து கொடுத்தால் பூச்சிகள் வெளியேறி விடும்.

- பா.குணா

படம்: டிஜிட்டல் சண்முகம்

"Discover the genius within"



Enrol your child in **U C MAS** & see improvement in overall Academic proficiency

To discover how **learning can be fun**, admit your child in U C MAS today

U C MAS Centres in India

Chennai	55
TamilNadu	50
Karnataka	16
Kerala	09
Orissa	01
Delhi	02
Pondy	02

Master Franchisees

Maharahstra & Goa - (022) 26202675.

Gujarat -(0265) 370657/71.

Andhrapradesh - (040) 23314327

Madhya Pradesh- 98840 65555

Over 175 allover India

Program Enhances

Concentration, Speed, Accuracy, Learning Ability, Listening Skills and Imaging skills

To know more call now.

Universal Concept Mental Arithmetic System

- Mental arithmetic using ABACUS
- For whole brain development
- For 4-12 year old children

Now @ reduced montly fee of Rs. 450/- only

UCMAS

Mental Arithmetic-India

U C MAS Mental Arithmetic (India) Pvt Ltd.,

Corporate office: No A-1, 1857,13th Main Road, 6th Avenue, Anna nagar west, Chennai 600 040.

Ph (044) 2618 0468/2390/4083. Fax: 044- 2618 1706

We welcome franchise enquiry from all over India.

ஆர்.கண்ணன்

உங்கள் நண்பர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நீங்கள் வாழும் சமுதாயம் எல்லாமே, உங்கள் கேரியர் பற்றித் தீர்மானிக்க ஏதோ ஒரு வகையில் காரணமாக இருக்கிறார்கள்.

குடும்பச் சூழ்நிலை அல்லது முன் அனுபவம் எல்லாம்கூட, கேரியர் பிளானிங்கைத் தீர்மானிப்பதில் அங்கம் வகிக்கின்றன. (நீங்கள் டாக்டருக்குப் படிக்க வேண்டும் என்று நினைப்பீர்கள். அப்பா 'வேண்டாம், இஞ்சினீயரிங் பண்ணு. பணத்துக்கு நான் ஏற்பாடு பண்ணுகிறேன்' என்பார். மனசுக்குப் பிடிக்காமல் இஞ்சினீயரிங்கில் சேருவீர்கள். இஞ்சினீயரிங் பண்ண வேண்டும் என்று நினைப்பீர்கள். 'ஆமா. 10 லட்சம் 15 லட்சம் எவன் கொடுப்பான்?' என்று வெந்நீர் ஊற்றுவார் தகப்பனார். இல்லை ஆர்க்கிடெக்சர். 'சரிதான். ஈயோட்ட வேண்டியதுதான்!' என்று குழப்பும்போது, உங்கள் கேரியர் பிளானிங் எல்லாம் கோவிந்தா! அதனால் அந்த வகைக் குறுக்கீடுகளை ஒதுக்கிவிட்டுத்தான், கேரியர் பிளானிங்கைத் தீர்மானிக்க வேண்டும்.)

ஒரே நபர் ஒன்றல்ல, பல கேரியர்களில் திருப்தி அடையும் மனோபாவம், உடையவராய் இருக்கக் கூடும். 'இது ஒன்றுதுதான் ரைட் ஜாப்' என்ற பாச்சா எல்லாம் இங்கே பலிக்காது!

இன்றைய சூழலில் ஓர் இளைஞர் தமது கேரியரில் சராசரியாக 4 முதல் 9 வேலைகளில் சேருகிறார், என்று ஒரு தோராயமான கணக்கு இருக்கிறது. எனவே அதற்கு ஏற்ற திறமையும், மனப்பக்குவமும் இன்றைய இளைய தலைமுறை கொண்டிருக்க வேண்டும்.

'இந்த வேலையில் நாம் திருப்திகரமாகப் பணி புரிவோம்' என்று இளைஞர்கள் திடமாக நம்பும் பட்சத்தில்கூட, பொழுது போக்குக்கான வாய்ப்புகள், வாலன்டியராக சேவை செய்யக் கிடைக்கும் வாய்ப்புகள், பார்ட்-டைம் வேலைகள், பார்ட்-டைம் படிப்பு, நண்பர்கள் சந்திப்பு இவற்றை எல்லாம் ஒதுக்கிவிடக் கூடாது.





படம் : டிஜிட்டல் சண்முகம்

2

எல்லாவற்றுக்கும் மேலே, 'வேலை வாய்ப்பு உலகம்' வேகமாக மாறிக் கொண்டிருக்கிறது. (ஒரு காலத்தில் எல்லாரும் கம்ப்யூட்டர் இஞ்சினீயரிங் என்று ஒரேயடியாகப் போய் விழுந்தார்கள். நடுவில் எதிர்பாராமல் அந்தத் துறை தொய்ந்து போனதும், இளைய தலைமுறையின் மனப்போக்கே மாறிப் போய்விட்டது!) அதனால் கேரியர் பிளானிங்கின்போது இந்தப் பின்னணியையும் நினைவில் கொள்ள வேண்டும்.

எனவே, உலகளவில் ஒப்புக் கொள்ளப்பட்ட பொதுவான வழிகாட்டு முறைகளின்

அடிப்படையில், நாம் கேரியர் பிளானிங்கை அமைத்துக் கொள்ளுவோம். சரிதானே?

முதலில் கேரியர் பிளானிங்கில் என்னென்ன படிகள் இருக்கின்றன என்று பார்ப்போம்.



ஏறு நூறு

1. உங்களையே சுய பரிசோதனை செய்து எடை போட்டுக் கொள்ளுவது முதல்படி.

2. இருக்கிற வாய்ப்புகளை எல்லாம் அலசுவது இரண்டாம் படி.

3. இரண்டையும் இணைத்து முடிச்சுப் போடுவது மூன்றாவது படி.

கேரியர் பிளான்தான் உங்கள் திறனையும், அக்கறையையும் தீர்மானிக்கிறது. உங்கள் திறமைக்கு ஏற்ற கேரியர் எது என்றும், நீங்கள் தேர்ந்தெடுக்கிற கேரியருக்கு எந்த மாதிரி படிப்பும், பயிற்சியும் தேவை என்றும் சுட்டிக் காட்டுகிறது. உங்கள் திறனுக்கு ஏற்ற கல்வியைத் தரும் வாயில்கள் எங்கெங்கே திறந்திருக்கின்றன என்று பாருங்கள். பிறகு முடிவு எடுப்பது சுலபமாக இருக்கும்.

உங்களையே எடை போட்டுப் பாருங்கள்:

உடல் எடையை அறிந்து கொள்ள மெஷின் இருக்கிறது. உள்ளத்தை எடை போட? அதற்குத்தான் சுய பரிசோதனை. கேரியர் பிளானிங்கில் இதுதான் முதல் படி. 'சுய பரிசோதனை' என்றதும் மிரண்டுவிட வேண்டாம். உங்களை நீங்களே புரிந்து கொள்ளுவது, அவ்வளவுதான். அப்புறம் 'ஆசை இருக்கு தாசில் பண்ண...' கதை ஆகிவிடக் கூடாது பாருங்கள்.

உங்கள் திறமையைப் பற்றி நீங்கள் எந்த அளவுக்கு எடை போட்டு அறிந்திருக்கிறீர்களோ, அந்த அளவுக்கு, வெளியே இருக்கிற வேலை வாய்ப்புகளையும், அதற்கேற்ற கல்விப் பயிற்சியையும் சுலபமாகத் தெரிந்து கொண்டுவிடலாம். உங்கள் சுய பரிசோதனையில் பல விஷயங்கள் வெளிப்படும். உங்கள் ஈடுபாடு அல்லது அக்கறை. அப்புறம் விருப்பம். அடுத்து, திறமை. இதை எல்லாம் குறித்துக் கொண்டுவிட்டால் மன இயல் நிபுணர்கள் உங்களுக்கு ஏற்ற கேரியர் எது என்று கணித்துச் சொல்லிவிடுவார்கள். அப்படியே அது உங்களுக்குச் சரிப்படாது என்று தோன்றினால், வேறு என்ன என்ன கேரியர் வாய்ப்புகள் உங்களுக்கு ஏற்ற மாதிரி இருக்கின்றன, என்றும் விவரங்கள் கூடுதலாகவே தருவார்கள்.

வாய்ப்புகளை அலசுங்கள் :

வாய்ப்புகளை அலசி ஆராய்வது அவ்வளவு முக்கியமா, என்ன?

ஆம். அப்போதுதான் வெளியே என்னென்ன வேலைகள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன என்று தெரிந்து கொள்வீர்கள்.

கேரியர் சம்பந்தமான புத்தகங்கள், பத்திரிகைகள், வலைத் தளங்கள் இவற்றிலிருந்து கிடைக்கிற தகவல்களை எல்லாம் சேகரியுங்கள். அந்தந்தத் துறையிலுள்ள நிபுணர்

களிடம் மனம் விட்டுப் பேசுங்கள். இந்த உரையாடல்கள் நிச்சயம் உங்களுக்கு உதவும்.

இணைப்பது எப்படி?

மூன்றாவது படி, உங்களை எடைபோட்டுக் கிடைத்த முடிவுகளையும், நீங்கள் அலசி ஆராய்ந்து கண்ட வாய்ப்புகளையும் இணைத்துப் பாருங்கள். இதுதான் முடிவு எடுக்கும் கட்டம்!

ஒவ்வொரு வாய்ப்புக்கும் இருக்கும் சாதக-பாதகங்களை அலசுங்கள். நீங்கள் தேர்ந்தெடுக்கற வாய்ப்பின் பாசிடிவ் அம்சங்களைப் பட்டியல் இடுங்கள். நெகடிவ் அம்சங்களையும், அதே போலக் குறித்துக் கொள்ளுங்கள். இப்போது ஒரு தீர்மானமான முடிவு எடுப்பது சரியாகவும், எளிதாகவும் இருக்கும்.

'அட, இதெல்லாம் புதுசா? இதை எல்லாம் செய்யாமலா இருக்கோம்?' என்று நீங்கள் கேட்கக் கூடும்.

முறைப்படி செய்யாமல் ஏனோ தானோ என்று செய்திருப்பீர்கள். இப்படி விஞ்ஞான ரீதியாக, சீரியஸ்ஸாக செய்து பார்த்தீர்களானால், சரியான முடிவை எடுப்பது எளிது.

கேரியர் சம்பந்தமாக நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்கள் வாழ்க்கையின் போக்கையே மாற்றிவிடக் கூடும். எந்த வாய்ப்பைத் தேர்ந்தெடுக்கிறீர்களோ, அதைப் பொறுத்தே உங்கள் வாழ்க்கை, உங்கள் வருமானம், வீட்டில் செலவிடும் நேரம், உங்கள் வேலை நேரம், உங்கள் பயணங்கள், உங்கள் ஓய்வு நேரத்தைச் செலவிடும் விதம் எல்லாம் அமையும்.

ஒரு வேலையில் சேர வேண்டும் என்று நீங்கள் தீர்மானித்தால், உங்கள் வாழ்க்கை முறையை அது எப்படி பாதிக்கும், நிகழ் காலத்தையும் எதிர்காலத்தையும் எப்படி மாற்றும், என்று நீங்கள் அறிய வேண்டும். அதனால்தான் இளம் பருவத்தில் கேரியர் பிளானிங் மிக முக்கியமானது என்று வலியுறுத்துகிறேன்.

(அடுத்த வாரம் : தேர்வுக்குத் தேவையான டிப்ஸ். ஓ.கே.?)

மாடல் விஞ்ஞானி!

துறுதுறுப்பான இந்த இளைஞரைப் பார்த்தால் சத்தியமாக யாரும் நம்ப மாட்டார்கள் இவரது ஆர்வம், அறிவியல் என்று. மதுரை செல்லூர் ஏரியாவில் நெருக்கடியான ஒண்டுக் குடித்தனத்தில்



ஏகப்பட்ட அறிவியல் மாடல்களைச் செய்து வைத்துள்ளார் மதுரை இளைஞர் ஜெயபாண்டி.

"எலக்ட்ரிகல் துறையில ரொம்ப ஆர்வமுங்க. சின்ன வயசுலருந்தே எதப் பார்த்தாலும் கழட்டி, எப்படி வேலை செய்யுதுன்னு பார்த்து, திரும்ப மாட்டிருவேன்" என்னும் ஜெயபாண்டி கிட்டத்தட்ட எழுபத்து ஐந்துக்கும் மேற்பட்ட எலக்ட்ரோ - மெக்கானிக்கல் மாடல்களை உருவாக்கி வைத்திருக்கிறார். கல்பனா சாவ்லா பெயரில் தாமே உருவாக்கிய, 18 கிலோ எடை கொண்ட ரிமோட் மோட்டர் போட்டை கண்மாயில் விட்டு, அஞ்சலி செலுத்தியுள்ளார்.

விடுமுறை நாட்களில் பள்ளி மாணவர்களின் கூட்டம் இவரைச் சுற்றிக் கொண்டே இருக்கிறது. "நாங்க தியரியா படிக்கிறத இந்த அண்ணே அப்படியே பிராக்டிகலா சொல்லிக் குடுக்கறாரு" என்கிறார் பள்ளி மாணவர் குமார்.

"ராத்திரி ஒரு மணிக்கு எந்திரிச்சு எனக்குத் தோணற ஐடியாக்களை செஞ்சுபார்ப்பேன். அப்புறம் காய்கறி லோடு இறக்கிட்டு, முறுக்கு வாங்கி கடைகளுக்குப் போடுவேன். மதிய சாப்பாட்டுக்குப் பிறகு, கொஞ்ச நேரம் ரெஸ்ட். மறுபடி ஆராய்ச்சி, அதுக்காக வேத்துக்கு போறது, பொருள் வாங்கப் போறது அப்படீன்னு வேலை இருக்கும்." என்கிறார் உற்சாகமாக.

நூறு பள்ளி மாணவர்களைத் தொழில் நுட்பத்தில் தயார்ப்படுத்தி, பிரம்மாண்டமான அறிவியல் கண்காட்சி நடத்தி அப்துல் கலாமை, சிறப்பு விருந்தினராக அழைக்க வேண்டும் என்பது ஜெயபாண்டியின் ஆசை.

- சத்யா வெங்கட்

SOUTHERN SHELTERS LTD.

SSL

Pay Rs.75,000/- and own a flat

Rs. 3,39,570/- onwards

Only Few Flats available at

PORUR

On Kundrathur Main Road,
(Just one k.m.. From Porur Junction)
Madananthapuram Bus stop

Close to City Approved plots

CHROMPET

(Near Radhanagar)
(Close to Nemilicherry Bus terminus)

- 2 kms from Railway Station / GST Main Road
- Very close to the Velacherry - Chrompet 200 feet Road
- Surrounded by Educational Institutions, Medical Facilities & Shopping Facilities
- Copious and Sweet ground water
- Future appreciation in value / development prospects brighter

MANAPAKKAM

wtih
Building plan approval
Opp. to MIOT Hospital : MGR Garden

Contact :

SOUTHERN SHELTERS LTD.

9, Bishop Wallers Avenue (East), Mylapore, Chennai - 600 004.
Ph : 2499 2226 / 2426 Fax : 2497 1554 Mobile : 98410 25171

SUNDAYS : 9 A.M. TO 4 P.M.

வாக்ஸிங்

fem

பிசுபிசுப்பான வாக்ஸை சூடாக்கும் தொல்லை இனி இல்லை, தடவிக் கொள்ளவும் தேவையில்லை.

இப்போது

இதர வேலைகளை விட்டுவிட்டு அழகு நிலையத்துக்கு செல்ல அடிக்கடி அப்பாயிண்ட்மெண்ட்கள் பெறவேண்டிய சிரமங்களும் இல்லை. செலவு பற்றிய பயமும், கவலையும் இல்லை.

வசதியாகி விட்டது

முகம் மற்றும் உடலில் உள்ள ரோமங்களை நீக்க சிரமமற்ற, இதமான, வாக்ஸிங்குக்கு வரவேற்பு கூறுங்கள், கிளியர்வே பிரீகோடட் வாக்ஸ் ஸ்ட்ரிப்சின் உதவியுடன். வாக்ஸிங்கை துரிதமாக, சுலபமாகச் செய்ய உரித்து உபயோகப்படுத்தக் கூடிய 6 டபுள்-சைடட் ஸ்ட்ரிப்கள். நம்பமுடியாத அளவுக்கு வசதியாக.

இதன் உதவியுடன்

Clearway



பிரீகோட்டட் • மீண்டும் பயன்படுத்தலாம் • டபுள்சைடட் வாக்ஸ் ஸ்ட்ரிப்கள்



உரியுங்கள், உபயோகியுங்கள் அவ்வளவுதான்



Hakuhodo Percept Mum/FEM



S.V.முதியோர் இல்லம்



Charitable Trust (Reg)

இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் டாக்டர்களும், நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எல்லா எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED

Charitable Trust (Reg)

50 / 88, Panchali Amman Kovil Street, (Near Arumbakkam Post Office)
Arumbakkam, Chennai - 600 106 Tel. Off: 2475 5700, 2475 1356.
E-mail:svhome@vsnl.net



சிவகாமியின் சபதம்

நாற்பத்து ஆறாம் அத்தியாயம்

வாதாபி

வட பெண்ணைக் கரையிலிருந்து சளுக்க சைனியத்தின் பெரும் பகுதி வடமேற்குத் திசையாக வாதாபி நகரத்தை நோக்கிக் கிளம்பிற்று.

சிவகாமியும் அந்தச் சைனியத்துடன் பிரயாணம் செய்தாள்.

தொண்டை மண்டலத்துக் கிராமங்களிலே பார்த்த பயங்கரங்களைக் காட்டிலும் கொடுமையான காட்சிகளைப் பார்த்துக்கொண்டு போனாள். வீடுகளும் வைக்கோற் போர்களும் பற்றி எரிவதையும், பசுமையான தோப்புக்கள் போர் யானைகளால் அழிக்கப் படுவதையும், பயிர்கள் நாசமாக்கப் படுவதையும் பார்த்துக்கொண்டு போனாள். குற்றமற்ற கிராமத்து ஜனங்கள் கொல்லப்படுவதையும், திடகாத்திர புருஷர்களும் இளம் வயதுப் பெண்களும் சிறைப்பிடிக்கப் படுவதையும், தாய்மாரைப் பிரிந்த குழந்தைகள் அலறி அழுவதையும் பார்த்துக் கொண்டு போனாள்.

சிவகாமியின் உள்ளத்திலும் பெரிய தீப்பிழம்பு ஜுவாலை விட்டு எரியத் தொடங்கியது.

வாதாபிச் சக்கரவர்த்தியை மீண்டும் சந்தித்து இம்மாதிரி அக்கிரமக் கொடுமைகளைச் செய்ய வேண்டாமென்று வேண்டிக் கொள்ள விரும்பினாள். பல தடவை அதற்காகப் பிரயத்தனம் செய்தாள். தன்னுடன் வந்த காவலர்களைத் தன்னைப் புலிகேசியிடம் அழைத்துப் போகும்படி கேட்டுக் கொண்டாள். அந்தக் காவலர்கள் அவள் கூறியதைக் காதில் போட்டுக் கொண்டதாகவே தெரியவில்லை.

ஒவ்வொரு சமயம் அவள் இரவில் தூங்கும்போது, 'ஹ ஹ ஹா' என்று

அமரர் கல்கி

பேய் சிரிப்பது போன்ற சிரிப்புச் சப்தம் கேட்கும். திடுக்கிட்டுக் கண்ணை விழித்துப் பார்ப்பாள். எதிரே சற்றுத் தூரத்திலிருந்து வாதாபிச் சக்கரவர்த்தியின் உருவம் திரும்பிப் போவது போலத் தோன்றும். எழுந்து உட்காருவதற்குள் அந்த உருவம் மறைந்து போய் விடும். தன்னுடைய சித்தப் பிரமையில் தோன்றிய உருவந்தான் அது என்று எண்ணிக் கொள்வாள்.

புலிகேசி இளம் பிராயத்தில் சிற்றப்பன் மங்களேசனால் பெரிதும் கொடுமை செய்யப்பட்டவன். அதன் காரணமாக, மரத்திலே வைரம் பாய்வது போல் அவனுடைய சுபாவத்திலேயே குரூரம் கலந்து இறுகிக் கெட்டிப்பட்டிருந்தது.

நாகநந்தியின் உதவியால் வாதாபிச் சிம்மாசனம் ஏறிய காலத்திலிருந்து உள்நாட்டு எதிரிகளை ஒழித்தல், வெளிப் பகைவர்களோடு யுத்தம் செய்தல் முதலிய கொடுங் காரியங்களிலேயே புலிகேசியின் வாழ்நாளெல்லாம் சென்றிருந்தது.

பிறருடைய துன்பங்களைப் பார்த்து வருந்துவது என்பது புலிகேசியின் சுபாவத்தில் இல்லவே இல்லை.

தற்சமயம், புலிகேசியின் சுபாவக் குரூரத்தை ஒன்றுக்குப் பத்தாக வளரச் செய்த காரணங்கள் இரண்டு ஏற்பட்டிருந்தன.

ஒன்று, மகேந்திர பல்லவனுடைய மாய தந்திரங்களினால் தம்முடைய தென்னாட்டுப் படையெடுப்பு அபஜயமாக முடிந்ததில் ஏற்பட்டிருந்த ஆசாபங்கம்.

இன்னொன்று, இதுகாறும் வாதாபி இராஜ்யத்தின் பெருமையையும் தம்முடைய க்ஷேமத்தையும் தவிர வேறு கவனமே இல்லாமலிருந்த நாகநந்தியடிகளின் உள்ளத்தை ஒரு பல்லவ நாட்டுப் பெண் கவர்ந்து விட்டாளே என்ற அசூயையும் ஆத்திரமும்.


இக் காரணங்களினால் தம் உள்ளத்தில் கொழுந்து விட்டெரிந்த குரோதத்தையெல்லாம் புலிகேசிச் சக்கரவர்த்தி, தாம் சென்ற மார்க்கத்தில் எதிர்ப்பட்ட குற்றமற்ற ஜனங்கள் மீது காட்டினார்.

அதனோடு, சிவகாமியின் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்வதற்கும் தக்க வழியை யோசித்துக் கொண்டிருந்தார்.

இதையெல்லாம் அறிந்திராத சிவகாமி, தான் மட்டும் வாதாபிச் சக்கரவர்த்தியை இன்னொரு தடவை நேருக்கு நேர் சந்திக்க முடிந்தால், அவருடைய படைகள் செய்யும் கொடுமைகளையெல்லாம் நிறுத்தி விடலாம் என்று ஆசையுடன் நம்பினாள். அவளுடைய இந்த மனோரதம் வாதாபி போய்ச் சேரும் வரையில் நிறைவேறவில்லை.

வாதாபியில் பெரியதோர் அழகான அரண்மனையில் சிவகாமி கொண்டு வந்து சேர்க்கப்பட்டாள். அவளுக்குத் துணையாகவும், பணிவிடை புரிவதற்காகவும் இரண்டு தாதிப் பெண்கள் அமர்த்தப்பட்டார்கள். அவர்கள் பிராகிருதமும் தமிழும் கலந்த பாஷையில் பேசினார்கள். அந்தத் தாதிப் பெண்களுடைய பேச்சையெல்லாம் சிவகாமி எளிதில் புரிந்து கொள்ளுதல் சாத்தியமாயிருந்தது.

சக்கரவர்த்தி கட்டளையின் பேரிலேயே அந்த அரண்மனை சிவகாமிக்காகத் திட்டம் செய்யப்பட்டதென்றும், அவளுக்கு யாதொரு சௌகரியக் குறைவும் இல்லாதபடி பார்த்துக் கொள்ளும்படி ஆக்ஞை என்றும் மேற்படி தாதிப் பெண்களிடம் சிவகாமி தெரிந்து கொண்டாள். இதெல்லாம் அவள் எதிர்பார்த்தபடியே இருந்தது. ஆகவே, கூடிய சீக்கிரம் புலிகேசிச் சக்கரவர்த்தி தன்னைப் பார்க்க அங்கு வருவாரென்றும் சிவகாமி தீர்மானித்தாள். அப்படி அவர் வரும்போது என்ன பேச வேண்டும், எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி



ஓயாமல் சிந்தித்த வண்ணமிருந்தாள்.

சக்கரவர்த்தியின் விஷயத்தில் சிவகாமியின் மனோபாவம் இரண்டு விதமாயிருந்தது. ஒருசமயம், அவருடைய சைனியம் செய்த கொடுஞ் செயல்களை எண்ணி எண்ணி அவளுடைய உள்ளம் கொதித்தது. மற்றொரு சமயம், அப்பேர்ப்பட்ட கொடுங்கோல் மன்னன் மீது அபலையாகிய தனக்கு ஏற்பட்டிருந்த சக்தியை நினைத்து அவள் உள்ளம் பெருமிதம் அடைந்தது.

இராவணன் கவர்ந்து சென்று அசோகவனத்தில் சிறை வைத்த சீதாதேவியின் நினைவு சிவகாமிக்கு அடிக்கடி வந்தது. சீதையின் நிலைமை தான் தன்னுடைய நிலைமையும், இராமபிரான் இராவணனை வென்று சீதையைச் சிறை மீட்டுக் கொண்டு போனது போல் மாமல்லர் ஒருநாள் வந்து இந்தப் பாதகப் புலிகேசியை வென்று தன்னைச் சிறை மீட்டுக் கொண்டு போகப் போகிறார்!

இவ்விதம் நம்பிய சிவகாமி, சீதைக்கும் தனக்கும் இருந்த வித்தியாசத்தைப் பற்றியும், எண்ணமிட்டாள். சீதாதேவியை இராவணன் அவளுடைய அழகுக்காக ஆசைப்பட்டு அபகரித்துக் கொண்டு வந்தான். அவளைக் கலியாணம் செய்து கொள்ள விரும்பினான். ஆனால், புலிகேசியோ தன்னிடமிருந்த நாட்டியக் கலையின் மேல் மோகங்கொண்டு தன்னைச் சிறைப் பிடித்து வந்திருக்கிறான். (புலிகேசியே மாறுவேடம் பூண்ட புத்த பிக்ஷு என்னும் நம்பிக்கை சிவகாமியின் உள்ளத்தில் வேரூன்றியிருந்தபடியால் இவ்விதம் எண்ணினாள்.) ஆகையால், இராவணன் மீது சீதைக்கு இல்லாத செல்வாக்கு, தனக்கு வாதாபிச் சக்கரவர்த்தியின் மீது இருக்கிறது. தன் கலையின் சக்தி கொண்டு அவரைத் தன் இஷ்டப்படியெல்லாம் ஆட்டி வைக்கலாம். ஆ! அந்தப் பொல்லாத புத்த பிக்ஷுவைத் தான் இலேசில் விடப் போவதில்லை. வரட்டும் இங்கே! எப்படியும் என்னிடம் வந்துதானே ஆக வேண்டும்?

சிவகாமி வாதாபி வந்து சேர்ந்த எட்டாம் நாள் அவளுடைய மனோரதம் ஈடேறியது. சக்கரவர்த்தி அவளைப் பார்ப்பதற்காக அந்த அரண்மனைக்கு வந்தார். வாசற்புறமிருந்த தாதி ஓடி வந்து, "சக்கரவர்த்தி வருகிறார்!" என்று தெரிவித்ததும் சிவகாமி மிக்க பரபரப்புக் கொண்டு வாதாபிச் சக்கரவர்த்தியை வரவேற்கவும், அவர் மீது தன் கூரிய கண்ணம்புகளையும், சொல்லம்புகளையும் செலுத்தவும் ஆயத்தமானாள்.

ஆனால், சக்கரவர்த்தி அரண்மனைக்குள்ளே வந்து நின்று அவளை மேலும் கீழும் ஏறிட்டுப் பார்த்து விட்டு, அவள் கனவிலே கேட்டது போன்ற ஒரு பேய்ச் சிரிப்புச் சிரித்ததும், சிவகாமி எண்ணியிருந்த எண்ணமெல்லாம் எங்கேயோ போய் விட்டன. இன்னதென்று சொல்ல முடியாத ஒரு பீதி அவளுடைய இருதயத்தில் புகுந்து தேகமெல்லாம் வியாபித்துத் தேகத்தின் எலும்புக்குள்ளே பிரவேசித்து ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது. வாயைத் திறந்து பேச முடியாதபடி நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

"சிற்பி மகளே! நாட்டிய கலாராணியே! மகேந்திர பல்லவனின் கலைப் பொக்கிஷமே! சௌக்கியமா? வாதாபி வாசம் உனக்குப் பிடித்திருக்கிறதா?" என்று புலிகேசி கேட்டபோது, சிவகாமியின் உடம்பு படபடத்து நடுங்கிற்று.

தன்னுடைய நாட்டித் தோற்றங்களிலே வெகு சாதாரணமான தோற்றத்தைக் கண்டு அப்படியே பரவசப்பட்டு நின்ற புத்த பிக்ஷுவா இவர்? தன்னிடம் அணுகும்போதே பயபக்தியுடன் அணுகி உணர்ச்சி மிகுதியினால் தன்னுடன் பேச முடியாமல் தத்தளித்து நின்ற நாகநந்தி இவர்தானா? பொன்முகலி நதிக்கரையில் தொண்டை நாட்டுப் பெண்களை விடுதலை செய்ய வேண்டுமென்று தான் வரங்கேட்டுப் பெற்ற போது, அவர் இவ்விதமில்லையே? வாதாபி நகருக்கு வந்து





விட்டதனா லேயே இவ ரிடம் இந்த வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறதா?

இவ்விதம் சிவகாமியின் உள்ளக் கடல் கொந்தளித்துக் குழம்ப, புலிகேசியின் கேள்விகளுக்கு மறுமொழி ஒன்றும் சொல்ல முடியாமல் நின்றாள். அதைப் பார்த்த புலிகேசி, ''பெண்ணே! ஏன் மௌனம் சாதிக்கிறாய்? 'கலை உணர்ச்சியில்லாத வாதாபிப் புலிகேசியுடன் நமக்கு என்ன பேச்சு' என்ற எண்ணமா? அப்படி நான் அடியோடு கலை உணர்ச்சி இல்லாதவனல்ல. அவ்விதமிருந்தால் சிறைப் பிடித்துக் கொண்டு வந்த உன்னை இந்த அரண்மனையில் வைத்திருப்பேனா? பல்லவ நாட்டின் இணையற்ற நடன கலாராணிக்குத் தகுந்த அலங்கார மாளிகையல்லவா இது? இங்கு உனக்கு எல்லாம் சௌகரியமாயிருக்கிறதா? பணிப் பெண்கள் திருப்தியாகப் பணிவிடை செய்கிறார்களா? ஏதாவது குறை இருந்தால் சொல்!'' என்றார்.

புலிகேசியின் பேச்சு எவ்வளவோ அருவருப்பாயிருந்த போதிலும் இனிப் பேசாமல் இருக்கக் கூடாது என்று சிவகாமி கருதி, மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, "பிரபு! இங்கு எல்லாம் சௌகரியமாயிருக்கிறது. ஒரு குறையும் இல்லை. மிக்க வந்தனம்!" என்றாள்.

"ஆஹா! வாய் திறந்து பேசுகிறாயா? நல்லவேளை! நீ மௌனமாய் நின்றதைப் பார்த்துவிட்டு, நீ உயிருள்ள பெண்தானா அல்லது உன் தந்தை அமைத்த கற்சிலைகளில் ஒன்றைத்தான் சிறைப் பிடித்துக் கொண்டு வந்து விட்டோமோ என்று சந்தேகித்தேன். நீ இந்த மட்டும் பேசியது மிக்க சந்தோஷம். நீ வாயினால் சொன்னபடி உண்மையாகவே எனக்கு வந்தனம் செலுத்த விரும்பினால் அதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது..." என்ற புலிகேசி மேலும் கூறத் தயங்கி நின்றார்.

அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்ற பீதியுடன் சிவகாமி மௌனமாயிருந்தாள்.

"பெண்ணே! அந்த மூடன் மகேந்திர பல்லவன் என்னைக் கலை உணர்ச்சி அற்றவன் என்று சொன்னான். அதை நீயும் நம்பினாய். நரிக்கும் புலிக்கும் எவ்வளவு வித்தியாசமோ, குட்டைக்கும் சமுத்திரத்துக்கும் எவ்வளவு வித்தியாசமோ, உள்ளங்கை அகலமுள்ள தொண்டை மண்டலத்துக்கும் விஸ்தாரமாகப் பரந்த சளுக்க சாம்ராஜ்யத்துக்கும் எவ்வளவு வித்தியாசமோ, அவ்வளவு வித்தியாசம் மகேந்திர பல்லவனுடைய கலை உணர்ச்சிக்கும் என்னுடைய கலை உணர்ச்சிக்கும் உண்டு. கூடிய சீக்கிரத்தில் இதை நீயே தெரிந்து கொள்வாய். கலா ராணியே! கேள்! தொலை தூரத்திலுள்ள பாரசீக நாட்டுச் சக்கரவர்த்தியிடமிருந்து என்னுடைய சபைக்குத் தூதர்கள் வந்திருக்கிறார்கள். என்னுடைய நட்பைக் கோரிப் பாரசீகச் சக்கரவர்த்தி காணிக்கைகளும் சன்மானங்களும் அனுப்பியிருக்கிறார். பாரசீகத் தூதர்களைப் பகிரங்கமாக வரவேற்பதற்கும் அவர்கள் கொண்டு வந்த காணிக்கைகளை ஏற்பதற்கும் நாளைய தினம் மகுடாபிஷேக மண்டபத்தில் மகாசபை கூடுகிறது. அந்த மகாசபையில் வந்து நீ நடனம் செய்ய வேண்டும்."


இத்தனை நேரம் பயமும் பலவகைக் குழப்பங்களும் குடிகொண்டிருந்த சிவகாமியின் உள்ளம் நடனம் என்ற வார்த்தையைக் கேட்டதும் அசாதாரண தைரியத்தை அடைந்தது. கொஞ்சமும் தயங்காமலும் பயப்படாமலும் தலைநிமிர்ந்து புலிகேசியை நோக்கி அழுத்தந் திருத்தமான குரலில் "முடியாது" என்றாள்.

புலிகேசியின் கண்கள் ஒருகணம் ஜுவாலாக்கினியைக் கக்கின. தன்னை மீறிக் கொண்டு வந்த கோபத்தைப் புலிகேசி பல்லைக் கடித்துச் சமாளித்துக் கொண்டதாகத் தோன்றியது.

"பெண்ணே! ஏன் இவ்வளவு கண்டிப்பாக 'முடியாது' என்று சொல்லுகிறாய்? மூன்று நாள் உனக்கு அவகாசம் கொடுக்கிறேன்; யோசித்துச் சொல்!" என்றார் புலிகேசி.

"யோசிப்பதற்கு அவசியமேயில்லை, பிரபு! என்னைத் தங்களுடைய சபையில் ஆடச் சொல்லி, மகேந்திர பல்லவரைத் தாங்கள் ஜயித்து வந்தது பற்றி உலகத்துக்கெல்லாம் பறையறையப் போகிறீர்கள். 'பல்லவ நாட்டிலிருந்து கொண்டு வந்த அடிமை இவள்!' என்று சுட்டிக் காட்டப் போகிறீர்கள். ஆ! தங்கள் நோக்கம் தெரிந்தது. தாங்கள் என்னைச் சிறைப் பிடிக்கலாம். என்னுடைய தேகத்தை அடிமை கொள்ளலாம். என் ஆத்மாவையும் கட்டுப்படுத்தலாம். ஆனால், என்னிடமுள்ள கலையைத் தங்களால் அடிமைப்படுத்த முடியாது. அதிகாரத்துக்கு அடங்கி,





ஆக்ஞைக்குப் பயந்து நான் நடனம் ஆட மாட்டேன்! ஒருநாளும் ஆட மாட்டேன்'' என்றாள்.

ஆத்திரம் பொங்கிய குரலில் சிவகாமி மேற்கூறிய மொழிகளைக் கூறி வந்தபோது புலிகேசியின் கண்கள் செந்

அருள்வாக்கு!

மீநாக்ஷியின் அம்ருத கடாக்ஷம் படுகிற இடமெல்லாம் மதுரமாகிறது. மதுரத்துக்கு, இனிமைச் சுவைக்கு பெயர் போனது அம்ருதம்தானே? ஜீவஜந்துக்கள் மதுரம் ஆவது என்றால் என்ன? அன்பு மயமாவது என்றுதான் அர்த்தம். பரிபூர்ணத்வம் அடைவதே ஜீவனுக்கு மதுரம். கட்டைக் கசங்காய், கடைசியில் பக்குவமாகிற போது, கனிந்து மதுரமாவது போல், அநேக துர்க்குணங்கள் கொண்ட நாம் கனிந்து மாறிக் கொண்டே போய்ப் பக்குவமாகிப் பெறுகிற பூரண நிலைதான் நமக்கு மதுரம். அப்படிப்பட்ட பூர்ணத்வ மதுரத்தை நமக்குத் தருவது மீநாம்பிகையின் கடைக்கண். லோகத்தில் இருக்கிறபோதே நிறைவைத் தந்து, அப்புறம் இந்த லோகம், ஸம்ஸார, பாசம் இல்லாமல் மோக்ஷானந்தம் தருகிறது...



...இப்படி ஜீவனுக்குப் பூர்ணத்வம் என்ற மதுரத்தைத் தரும் மீநாக்ஷியின் மதுரகடாக்ஷம் விசேஷமாகப் பரவியிருப்பதால்தான் அவளுடைய க்ஷேத்ரத்துக்கே மதுரை என்று பெயர் இருக்கிறது. அம்பாளின் கடைக்கண் அமுது அலை அலையாகப் பரவியிருப்பதால் அது மதுரையாகிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

தணல் நிறம் பெற்று அனல் உமிழ்ந்தன. சிவகாமி பேசி முடித்ததும் புலிகேசி பழையபடி ஒரு பேய்ச்சிரிப்பு சிரித்தார்.

"பெண்ணே! பொறு! இவ்வளவு பதற்றம் உனக்கு எங்கிருந்து வந்தது? அப்படியொன்றும் உன் தேகத்தையோ, உன் கலையையோ அடிமைப்படுத்த எனக்கு உத்தேசமில்லை. உனக்கு இஷ்டமில்லாவிட்டால் நீ நடனம் ஆட வேண்டாம். இந்த அரண்மனைக்குள்ளே உன்னைச் சிறைப்படுத்தி வைத்திருப்பதாகவும் எண்ண வேண்டாம். உனக்கு இஷ்டமான போது நீ இந்த மாளிகையை விட்டு வெளியே போகலாம். வாதாபி நகரைச் சுற்றிப் பார்த்து விட்டு வரலாம். உங்கள் காஞ்சியைப் போல் எங்கள் வாதாபி அவ்வளவு அழகாயில்லா விட்டாலும், ஏதோ பார்க்கத் தகுந்த காட்சிகள் இங்கேயும் இருக்கின்றன. இந்த அரண்மனை வாசலில் காவல் காப்பவர்கள் உன்னைச் சிறை வைப்பதற்காக இங்கு இருக்கவில்லை. உனக்கு ஏவல் புரிவதற்காக இருக்கிறார்கள். நீ எப்போது சொல்கிறாயோ அப்போது அவர்கள் உனக்குப் பல்லக்குத் தருவித்துக் கொடுப்பார்கள். மறுபடியும் என்னைப் பார்ப்பதற்கு நீ விரும்பினாலும் அவர்களிடமே சொல்லி அனுப்பலாம். சிற்பி மகளே! நீ என் அதிகாரத்துக்குப் பயந்து நடனமாட வேண்டாம். உன் இஷ்டம் போல் சுயேச்சையாகவும் சுகமாகவும் இருக்கலாம்!"

இவ்விதம் சொல்லிவிட்டுப் புலிகேசிச் சக்கரவர்த்தி சிவகாமியைக் கூர்ந்து பார்த்தார். அந்தப் பார்வையில் எல்லையில்லாத துவேஷமும், பழி வாங்கும் உறுதியும் குடிகொண்டிருந்ததைச் சிவகாமி கவனிக்கவில்லை. அந்த ஏழைப் பெண் அப்போது தரையை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தாள். கொடுமைக்கும் கொடூரத்துக்கும் பெயர் போன வாதாபிப் புலிகேசியைத் தான் வென்று விட்டதாக அவளுடைய உள்ளம் இறுமாப்புடன் எண்ணமிட்டுக் கொண்டிருந்தது.

அன்று மாலை சிவகாமி வாசற் காவலரிடம் தான் வாதாபி நகரைச் சுற்றிப் பார்க்க விரும்புவதாகக் கூறிப் பல்லக்குக் கொண்டு வரச் சொன்னாள்.

"உன்னை இங்கே சிறை வைத்திருக்கவில்லை. உன் இஷ்டப்படி வெளியே சென்று வரலாம்" என்று புலிகேசி கூறியது அவள் மனத்தை விட்டு அகலாதிருந்தது.

தன்னுடைய சுதந்திரத்தை அன்றே பரிசோதித்து விட எண்ணிப் பல்லக்கிலே ஏறிக் கொண்டு புறப்பட்டாள்.

(தொடரும்)

ஆத்ரேயா

★ ரெடிமேட் ரவிக்கைகள்

★ பெட்டி கோட்ஸ்

★ நைட்டீஸ்

★ Childrens Nighties and Tops



நல்ல தரம்.

சரியான விலை

வாருங்கள்.

அணிந்து மகிழுங்கள்!

ATHREYA GARMENTS™

House of Blouses

No.1, Jambulingam Street, (Valluvar Kottam High Road),
Nungambakkam, Chennai - 600 034.
☎ 8226586 Fax : 091-044-5360076
Website : www.athreyawoman.com E-mail : ols@md3.vsnl.net.in

SINGAPORE : MUSTAFFA (OLD) NALLI Pvt. Ltd.,
UAE : LULUCENTRE
KARAIKAL : EVE'S PARK, BARATHIYAR STREET,

CHARY'S

Online Wedding Alliances at

www.swayamwara.com

For all Castes & Communities



இந்திய திருமணங்களுக்கான
சிறப்பு இணையத்தளம்,
இப்பொழுது மேலும் பல
புதிய சிறப்பம்சங்களுடன்!

மணமகன் மணமகள் விபரங்களை
கலர் போட்டோ மற்றும் ஜாதகத்துடன்
இலவசமாக பதிவு செய்து கொள்ளுங்கள்!

பொருத்தமான வரன்களை உங்கள்
வீட்டில் இருந்தபடியே மிக எளிதாக
இன்டெர்நெட்டில் தொடர்பு கொள்ளுங்கள்!

swayamwara.com
23, Balaji Avenue 2nd Street,
(Opp. Vidyodaya Girls High School),
T.Nagar, Chennai - 600 017.INDIA
Ph: 044 - 2834 2051, 5212 2800 Fax: 5212 2801
e-mail: info@swayamwara.com
url: www.swayamwara.com

CALL US TO KNOW MORE ABOUT FREE MEMBERSHIP BENEFITS & PREMIUM MEMBERSHIP BENEFITS

www.swayamwara.com/tam/Mar 2003

நீங்கள் கேட்டவை – தராசு

● **வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சாவூர்**

? "தி.மு.க.வில் இருந்திருந்தால் தம்பி; ம.தி.மு.க.வில் இருந்திருந்தால் கம்பி, அ.தி.மு.க.வில் இருப்பதால் எம்.பி." என்று எஸ்.எஸ்.சந்திரன் பேசியிருக்கிறாரே...?

! நியமிச்சாங்களே இவரைப் போய் நம்பி!

● **கல்லன் கிருஷ்ணராஜ், குன்னூர் - 5 ●**

? 2006ல் ஆட்சி அமைப்பதுதான் த.மா.கா. ஜனநாயகப் பேரவையின் நோக்கம் என்கிறார் ப.சி. - அவர் பேசியிருப்பது அப்துல் கலாமின் (இலட்சியக் கனவு) அறிவுரையை ஏற்றதன் பலனா?

! 'Dream big' என்ற கலாமின் கனவை அவர் பகிர்ந்து கொள்கிறார். (ஆதாரம் Gokulam மார்ச் இதழ்) ஆனால் கனவு மெய்ப்பட இன்னேரம் செயல் திட்டம் ஆரம்பித்து முன்னேறியிருக்க வேண்டுமே.. இலட்சியத்துடன் சற்று சாணக்கியமும் இணைய வேணும்.



• செயல்படாச் சிதம்பரம்!

● **நகை இமகாராசன், கடமலைக்குண்டு**

? பத்திரிகை, டீ.வி.யில் சிகரெட் விளம்பரங்களுக்குத் தடை வரப் போகிறதாமே?

! எத்தனை தடை விதித்தாலும் அதே பிராண்ட் பெயரில் உள்ள வேறு பொருட்களுக்கு விளம்பரம் செய்வது போல் மறைமுகமாக விளம்பரம் செய்வார்கள். இப்போது மது விளம்பரம் அப்படித்தானே சக்கைப்போடு போடுகிறது. இதைத் தடுக்க மீடியாதான் கொள்கை முடிவு எடுக்க வேண்டும்.



• வீராஜகோபாலன்!



• சந்தர்ப்பவாத(மு)ம்!

● **ஆர். அப்துல் சலாம், திருச்சி - 21**

? 'ராமர் கோயில் கட்ட ஆதரவு கொடுங்கள்; இழந்த ஆட்சியை மீண்டும் பிடிக்கலாம்' என்று காங்கிரசுக்கு தொகாடியா யோசனை தெரிவித்திருப்பது எதைக் காட்டுகிறது?

! இந்த நாட்டின் அரசியலை ஹிந்து மத அடிப்படைவாதத்துக்கு அடிமைப்படுத்தும் முயற்சியை. ஏற்கெனவே பி.ஜே.பி.யைப் பின் வாங்க முடியாதபடி வளைத்துப் போட்டாயிற்று. காங்கிரசையும் ஹிந்துத்வா கயிறால் கட்டிப்போட்டுவிட்டால் நோக்கம் நிறைவேறிவிடாதா!

● **கே.என். பாலகிருஷ்ணன், சென்னை - 91**

? ஜெ. பிறந்த நாளில் பிறந்த எல்லாக் குழந்தைகளுக்கும் தங்க மோதிரம் பரிசளிக்கப் பட்டுள்ளதே...?

! கட்சிக்காரர்கள் எப்படி வேணுமானாலும் கொண்டாடிவிட்டுப் போகட்டும். ஆனால் வழக்கறிஞர்கள் உயர்நீதிமன்றத்தையே அன்று அ.தி.மு.க. பிரசார நிலையமாக உருமாற்றியது அசிங்கம். இது போன்ற செயல்கள் நீதித்துறையை அவமதிப்பதோடு அ.தி.மு.க. தலைவருக்கும் இழுக்கைத்தான் தேடித் தரும்.

● **கே.வி.ராமன், சென்னை - 73**

? பாபர் மசூதி கட்டுமுன் கோயில் அங்கு இருந்ததா என்பது நீதிமன்ற விசாரணையில் உள்ளது. பிரதமர் ஹிமாசலப் பிரதேஷ் பிரசாரத்தில் பேசுகிறபோதோ, 'கோவில் அங்கு இருந்ததற்குச் சரித்திரச் சான்று உண்டு' என்று பேசுகிறார். இதுதான் அவர் உபதேசிக்கும் பாரதியத்துவாவா? அல்லது

❐ ரூ.100 பரிசு பெறுபவர் :

ஆ.சண்முகசுந்தரம்,
14, சிந்தாமணி பஜார்,
திருச்சி - 620 002.

'செல்லக்குட்டி' சபாஷ் வாங்குமா?

இது ஹிந்துத்வாவா?

! வோட்டு வாங்கணுமா, ஹிந்துத்வா; நல்ல பேர் வாங்கணுமா, பாரதியத்வா. மொத்தத்தில் பிரதமர் பேசறது 'ஹம்பக்'துவா.

● ஆர். நாகராஜன், சென்னை - 61

? 'செல்லக்குட்டி', முதல்வரிடம் தேர்தல் முடிவு மூலம் சபாஷ் வாங்குமா?



• மதுரையைவிட்ட அழகிரி!

! அது எப்படியோ, செல்லக்குட்டி அழகிரி தொல்காப்பியம் விழா எடுத்து, கலைஞரிடம் சபாஷ் வாங்கி விட்டது! பனிப்போர் தொடரும்!

● கே. கணேசன், சென்னை - 16



• தந்திரத் தொகாடியா!



• சவடால் சந்திரன்!

? 'வீரப்பன் சுற்றி வளைக்கப்பட்டு விட்டான்' என்று புதிய டி.ஜி.பி. ராஜகோபாலன் அறிவித்து ஒரு மாதமாகியும் அவன் பிடிபடவில்லையே!

! கொஞ்சம் பொறுங்க; இப்பத்தான் எஸ்.எம். கிருஷ்ணா, கர்நாடக போலீஸ் அதிகாரிகளுக்கு டோஸ் விட்டிருக்கிறார் - 'வீரப்பன் விவகாரம் கர்நாடகத்தின் கரும்புள்ளி' என்று. இன்னும் ஒரு மாதம் சென்று தமிழகத்தில் ராஜகோபாலன் இன்னொரு வீராப்பான அறிக்கை விடுவார்.

● ஆ. சண்முகசுந்தரம், திருச்சி - 2

? தொகுதிக்கு ஒன்றும் செய்யாத எம்.எல்.ஏ., எம்.பி.க்களைச் சகித்துக் கொள்ளும் மக்கள், இரண்டு போட்டிக்களில் மட்டும் சரியாக ஆடாத விளையாட்டு வீரர்களின் உருவப் பொம்மையை எரித்து, வீட்டைத் தாக்குவது சரியா...?

! எம்.எல்.ஏ. அல்லது எம்.பி., தொகுதிக்கு ஓரளவுக்குச் செய்ய முடியும். நிறைய செய்வதற்கு மேலிடத்துத் தயவு வேண்டும். இது எல்லோருக்கும் தெரியும். கிரிக்கெட் வீரர்களோ, நேரடியாகக் களத்தில் இறங்குகிறவர்கள். அவர்கள் வெற்றிக்கு விழிப்புணர்வுடன் செயல்படாது, அலட்சியப் போக்கால் கோட்டைவிட்டால், தேசத்தின் கௌரவத்துக்கே இழுக்கு. இதுவும் எல்லோருக்கும் தெரியும். அதனால்தான் பின்னதில் உணர்ச்சிப் பிரவாகம் எடுக்கிறது. ஆனால் அணை போடத்தான் வேணும்.

● க. சுகுமாரன், அண்டக்குளம்

? காலில் விழும் நாகரிகத்தைக் கண்டறிந்தவர்கள் யார்..?

! கண்டவர் காரணத்தை விண்டிலர்; விண்டவர் தாமும் விழுந்தனர்!

● தேவி, பாபாநாசம்

? சாத்தான்குளத்தில் குமாரதாஸின் அராஜகமான அத்துமீறலை, ஆளுங்கட்சி அனுமதித்தது ஏன்...?

! முதல்வரின் பேச்சு உள்பட, எத்தனையோ அத்துமீறல்களைத் தேர்தல் கமிஷனே அனுமதித்து விட்டதே! தேர்தலை ஒத்திப் போடலாமா என்று கமிஷன் யோசித்து, பிறகு நடத்துவதாகத் தீர்மானித்து, சாண் ஏறி முழம் சறுக்கி விட்டதே!

● கி. துரைசாமி, மங்களப்பட்டி

? சகிப்புத்தன்மை என்பதுகூட ஒருவகை கையாலாகாத்தனம்தானே?

! இல்லை. மாற்றுக் கருத்தை ஏற்காவிட்டாலும் அது ஒலிக்க அனுமதிப்பது சகிப்புத்தன்மை. தவறு இழைக்கப்படும் போது, தட்டிக் கேட்காமல், கை கட்டி அடங்கிப் போவது கையாலாகாத்தனம்; அதையே

• ரூ. 50 பரிசு பெறுபவர் :

கல்லன் கிருஷ்ணராஜ்,
11சி, ஒட்டுப் பட்டறை,
நீலகிரி - 643 105.

சுயநலம் காரணமாகச் செய்வது அயோக்கியத்தனம்.

● **கார்த்திக் அமர்த்யா, மயிலாடுதுறை**

? பொதுவாக சுயமுன்னேற்ற நூல்களில் எல்லாம் பொருளாதார முன்னேற்றம் குறித்த போதனைகளே 90 சதவிகிதம் ஆக்கிரமிக்கின்றனவே.. பொருளாதார முன்னேற்றம் மட்டுமே வாழ்வில் நிறைவு தந்து விடுமா?

! spirituality, prosperity என்ற தலைப்பில், தினமும் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் கர்மயோகி எழுதுவதைப் படியுங்கள். தனி மனிதனின் மன வளமும், ஆன்ம பலமும் எவ்வாறு பொருளாதார வளத்தைத் தானே கொண்டு சேர்க்கும் என்று ரத்தினச் சுருக்கமாக எழுதி வருகிறார்.

● **ஒய்.எஸ். ப்ரீதா, சென்னை - 12**

? கணவனை விட மனைவிக்கு அதிக சம்பளம் - சங்கடமா? சந்தோஷமா?

! சந்தகடம் ... இல்லையில்லை, சங்கோஷம்... அடச்சே! இரண்டில் ஒண்ணு. ஆளை விடுங்க சார்!

● **க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்**

? ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில், தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் - இரண்டில் மிகவும் பிடித்தது எது?

! ரெண்டு முடியப் பார்க்கறீங்களா...? ஹரியும் சிவனும் ஒண்ணு; அறியாதவர் வாயிலே மண்ணு. நன்றி: ஆழ்வார்க்கடியான்.

● **என். மாணிக்கம், மின்னல்**

? மக்களின் உழைக்கும் திறன் குறைந்ததற்குக் காரணம் அரசிடம் அதிகமாகச் சலுகைகளை எதிர்பார்ப்பதுதான் என்பது உண்மையா?

! சலுகைகள், இலவசங்கள், தேவையற்ற மானியங்கள் எல்லாமே மக்களைக் கொட்டாவி தாசர்களாக்கும். மக்களின் உழைப்பைத் திறம்படப் பயன்படுத்த, சிறப்பாகத் திட்டமிடும் அரசுதான் நாட்டை உயர்த்த முடியும். இதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகள் உள்ளன. ஆனால் நமது தலைவர்கள் கற்றுணராமல் கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கிறார்களே!

மார்ச் 8

ஜோரா பாடிய நோரா!



"அந்த அதிகாலை ஆழ்ந்த தூக்கத்திலிருந்தேன். வழக்கமாக விடிந்ததும் ஒலிக்கும் ஃபோன் அதிகாலையிலேயே அலறத் தொடங்கிவிட்டது. 'யார்ரா இது தூக்கத்தைக் கெடுத்துக்கிட்டு' என்று எரிச்சலாக எழுந்தால்... சந்தோஷம் தாங்காமல் குதியாட்டம் போட்டேன். எனது 'கம் அவே வித் மீ' என்ற ஆல்பத்துக்கு ஐந்து பிரிவுகளில் கிராமி அவார்டு கிடைச்சது சாதாரண விஷயமா" என்கிறார் நோரா!

பண்டிட் ரவிசங்கரின் மகளான நோரா, தமது தந்தையை மிகக் குறைந்த முறையே சந்தித்திருப்பதாகக் கூறுகிறார். இவரது 'டோன்ட் நோ வொய்'- என்ற பாப் இசைப் பாடல் எல்லோரையும் முணுமுணுக்க வைத்ததில் இளைய உலகம் கிறுகிறுத்து போய்விட்டதாம். இந்த விருதுக்குப் பிறகு அம்மணியின் கச்சேரி ரேட் எக்கச்சக்கத்துக்கு உயர்ந்து விட்டது.

– அப்பு



டாக்டர் விஜயலக்ஷ்மி பந்தையன்,
நிர்வாகி, பயிற்சியாளர்.

ஆல்ஃபா மைண்ட் பவர்

'சக்திகளிலேயே பெரிய சக்தி ஆழ்மனதின் சக்தி'

உங்களை வியக்க வைக்கும் அளவுக்கு ஒரு பெரிய சக்தி உங்களுக்குள், உங்கள் ஆழ்மனதில் புதைந்திருக்கிறது. இந்த சக்தியை அன்றாட வாழ்க்கைக்கும் பயன்படுத்த முடியும். அதற்கான திறவுகோல்தான் 'ஆல்ஃபா மைண்ட் பவர்!'

சுலபமான ஆல்ஃபா தியானத்தின் மூலம் இந்த சக்தியை தூண்டி விட்டு வாழ்க்கையில் எந்த பிரச்சினைக்கும் விடை காணலாம்.

* மன அழுத்தம் குறைக்கலாம்.
* பண வரவை அதிகரிக்கலாம்.
* உறவுகளை சீர்படுத்தலாம்.
* குடும்பத்தில் அன்பு நிலவ செய்யலாம்.
* நோய் தீர்க்கலாம்.
* பரீட்சையில் அதிக மார்க் வாங்கலாம்.
* மகிழ்ச்சியுடன், தன்னம்பிக்கையுடன், வெற்றியுடன் வாழலாம்.

இன்னும் பல வழிகளில் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளலாம்.

* நான் சென்னையில் ஒரு பள்ளியில் தலைமை ஆசிரியையாக இருக்கிறேன். 9வது படிக்கும் ஒரு மாணவன் படிப்பில் மிகவும் குறைந்த மதிப்பெண்கள் பெற்று வந்தான். அவன் பெற்றோர்களை அழைத்து பலமுறை பேசியும் பலனில்லை. பிறகு திடீரென்று இரண்டு மாதங்களாக அவன் மிக நன்றாகப் படித்து நல்ல மார்க் வாங்குவதைப் பார்த்தேன். அவன் நடவடிக்கையும் மிக நல்ல முறையில் மாறி இருந்தது. விசாரித்தபொழுது அவன் ஆல்ஃபா தியான பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டதை அறிந்தேன். நானும் இந்த வகுப்பில் கலந்து கொண்ட பின் தான் இது எவ்வளவு பயனுள்ள வகுப்பு என்பது புரிந்தது. மாணவர்களுக்கு மிகவும் தேவையானதுதான் ஆல்ஃபா தியானம்!

பயிற்சி வகுப்புகள் மாதந்தோறும் ஆங்கிலத்திலும் தமிழிலும் தனித்தனியாக சென்னையில் நடத்தப்படும். பெங்களூர், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சியிலும் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

தபால் மூலம் கற்க :

ஆல்ஃபா மைண்ட் பவர் ஆடியோ கேஸட்/சிடி மற்றும் பயிற்சி புத்தகம் ஆங்கிலம் மற்றும் தமிழில் தபால் மூலம் பெற தொலைபேசி, ஈமெயில், கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.

தினத்தந்தி போன்ற பத்திரிகையில் வெளிவந்த ஆல்ஃபா மைண்ட் பவர் கட்டுரைகள் புத்தகமாக தமிழில் மட்டும் கிடைக்கும்.

ஆல்ஃபா மைண்ட் பவர் பிரைவேட் லிமிடெட்

* 11, அருணாசலம் சாலை, சாலிகிராமம்,
சென்னை -93. இந்தியா.
சென்னை +91-44-23761880/23760283
பெங்களூர் - 080-5291976/6607051/3347084
திருப்பூர்/கோவை - (0422) 2426663/878494
மதுரை - (0452) - 2536820
திருச்சி - (0431) - 2231561
email: alphamindpower@hotmail.com.
www.alphamindpower.net

ரெப்கோ ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்

REPCO HOME FINANCE LTD.

(இந்திய அரசு நிறுவனம்)

கனவு இல்லம் நனவாவது திண்ணம்

வீட்டு வசதி கடன்

* வீட்டு மனை வாங்க
* வீடு கட்ட
* கட்டிய வீட்டை விரிவு படுத்த...
* அதிக பட்சமாக ரூ.25,00,000/-
* பணி முதிர்வு பெற இரண்டு ஆண்டுகள் மட்டுமே இருப்போரும் 15 ஆண்டுகால தவணை பெறலாம்

ஓய்வு பெறும்பொழுது மொத்தமாகவோ, பகுதியாகவோ கடனை திருப்பிச் செலுத்த வசதி.

வட்டி விகிதம் 9.5% முதல்

* உங்கள் வீட்டின்மீது உங்கள் மகன் வீடுகட்ட **Super Loan** அதாவது நீங்கள் தரை தளம் மட்டும் கட்டிய நிலையில் உங்கள் மகன் முதல் தளத்தை தன்னுடைய வருமானத்தை கொண்டு கட்டுவதற்காக உங்கள் மகன் பெயரில் கடன் பெறலாம்.

மேலும் விபரங்களுக்கு :

ரெப்கோ ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்,

எண்.18, சர்.சி.பி. இராமசாமி சாலை,
ஆழ்வார்பேட்டை,
சென்னை - 600 018.
போன் : 52106650, 52106652

மற்றும்
கிளைகள் தென்னகமெங்கும்.



இரக்கமில்லாத பேய்!

தூரத்துப் பச்சை! நாவலை (அப்படிச் சொல்லக் கூடாது; உண்மை சம்பவங்களின் தொகுப்பு) படித்து முடித்தவுடன் கனத்த மனது இயல்பாவதற்கு இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. இரண்டாம் உலகப் போருக்கு முந்தைய காலகட்டத்தில், ராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பஞ்சம் பிழைக்க இலங்கைத் தேயிலைத் தோட்டங்களுக்குப் போகிறது வேலனது குடும்பம். வேலனின் மகள் வள்ளியின் வாழ்க்கைப் போராட்டம்தான் நாவல். மலைத் தோட்ட அடிமை வாழ்வு, கங்காணிகள், கணக்குப் பிள்ளைகள் மற்றும் வெள்ளைக்கார துரைகளிடம் படும் அவஸ்தைகள், அடிப்படை வசதி இல்லாத லயங்கள் (குடியிருப்புப் பகுதிகள்), அதனால் ஏற்படும் கொள்ளை வியாதிகள், குடும்ப உறுப்பினர்களின் தொடர் மரணங்கள், அவர்களைத் தேயிலைத் தூர்களின் (செடிகளின்) அடியிலேயே புதைக்கும் கொடுமை, என்று அடுக்கடுக்கான வாழ்க்கைச் சம்பவங்கள். இத்தனைக்கும் இந்த நாவலை எழுதிய கோகிலம் சுப்பையா அடிப்படையில் எழுத்தாளர் கிடையாது.

"1950களில் எனது கணவர் சுப்பையா, மலைத் தோட்டத் தொழிலாளர்களின் பிரதிநிதியாக இலங்கை பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த சமயம் தேயிலைத் தோட்டங்களுக்கு நான் சென்றபோது, கேட்ட உண்மைச் சம்பவங்களின் தொகுப்புதான் தூரத்துப் பச்சை" என்கிறார் கோகிலம்.

1956ம் ஆண்டு பெண் தொழிலாளர்கள் தொடர்புடைய மாநாடு ஒன்று செக்கோஸ்லோவாகியா நாட்டில் நடந்தது. அந்த மாநாட்டுக்குச் சென்ற போது, அறிஞர் காமில் வெலபில் என்பவரைச் சந்தித்தார்



• கோகிலம் சுப்பையா



கோகிலம். அவரிடம் இலங்கையில் தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் சந்திக்கும் வாழ்க்கைப் போராட்டங்களை விவரித்தபோது, "இதை ஏன் நீங்கள் புத்தகமாக எழுதக் கூடாது?" என்று தூண்டினார் அவர். எந்தவிதமான இலக்கிய ஜிகினா வேலைப்பாடும் இல்லாமல், தொழிலாளர்களின் பேச்சு வழக்கிலேயே நாவலைப் பின்னினார் கோகிலம். 1964ல் தமிழ்ப் புத்தகாலயம் கண. முத்தையா, நாவலைப் படித்துப் பார்த்துவிட்டுப் பதிப்பித்தார். "கிட்டத்தட்ட முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, ஆங்கிலத்தில் அந்தப் புத்தகத்தைப் போடலாம் என்று முனைந்தபோது, ஒரு பிரதியும் கிடைக்கவில்லை. கடைசியில் பெர்க்லியின் பல்கலைக் கழகத்தில் ஒரு புத்தகம் இருந்தது" என்று சொல்லும் கோகிலம் தற்போது அமெரிக்கா வாழ் தமிழர். சிகாகோ பல்கலைக் கழகத்தில் திராவிடர் வரலாற்றுப் பிரிவில் பாடம் போதித்த அனுபவம் இவருக்குண்டு. பண்டைய இலக்கியப் பாடல்களை 'முருகனின் சிரிப்பு' என்ற பெயரில் பழகு தமிழில் மாற்றி எழுதியிருக்கிறார். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு 'தூரத்துப்பச்சை' இரண்டாவது பதிப்பு சமீபத்தில் வெளிவந்திருக்கிறது.

336 பக்க நாவலின் உள்ளடக்கத்தையும் கடைசி நான்கு வரிகள், அழுத்தமாகவே சொல்லுகின்றன.

"அந்தத் தேயிலைத் தூர்தான் எத்தனை சவங்களை விழுங்கிவிட்டுத் திமிறிக் கொழுந்து வெடித்து நிற்கிறது? அதைத் திட்டினாள் வள்ளி: "இரக்கமில்லாத பேய்".

ஆனால் அதன் சூடான பானத்தை அனுபவித்து அருந்தும் அந்த மேதாவிகளுக்கு அது எப்படித் தெரிய முடியும்?

— ப்ரியன்

மங்கையர் மலர்

மார்ச் 2003

வெற்றிச் சிறப்பிதழ்

சாதனையாளர்களின் வெற்றி ரகசியம்.



'அம்மா தந்த வாழ்க்கை'

- ஏ.ஆர். ரஹ்மான்

வாசகர்களின் 'வெற்றிக்' கதைகள்

'எங்க ஊர் அழகி'ப் போட்டி

- பரிசுக் கட்டுரைகள்

இனி கருப்பை நீக்கம் வேண்டாமே?

பரீட்சைக்கு உதவி செய்யும் இன்டர்நெட்!

இன்னும் ஏராளமான வெற்றிக் கதைகளுடன் மங்கையர் மலர் இப்போது விற்பனையில்!



காதலுடன்

U

KBCV
(கல்கி போர்டு ஃபார் சினிமா விமர்சனம்!)

வினாத்தாள்

நேரம் : 60 நிமிடங்கள்

கீழ்க்கண்ட கதைச் சுருக்கத்தைப் படித்த பிறகு, படத்தையும் பார்த்துவிட்டு கேள்விகளுக்குச் சரியான விடை அளிக்கவும்.

அம்மா தனக்குத் தேர்ந்தெடுத்திருக்கும் வரனான தேவயானியை முறைப்படி பெண் பார்க்காமல், அவருடைய ஊருக்கு ரகசியமாகச் சென்று, அவரின் நடவடிக்கைகளைத் தெரிந்து கொண்ட பிறகு ஓகே சொல்லலாம், என்று கிளம்புகிறார் முரளி. அங்கு தேவயானி - அப்பாஸ் காதல் கதை ஷாக் தருகிறது. சுதாரித்துக் கொண்டு அவர்களை ஒன்று சேர்த்துவிட்டுத் திரும்புகிறார்.

A. 5 வரிகளுக்கு மிகாமல் பதில் அளிக்கவும்
(7 x 5 = 35 மதிப்பெண்கள்)

1. தான் பட்ட கடனுக்காக வினு சக்கரவர்த்தி பிடித்து வைத்திருக்கும் 'முரளி அண்டு கோ'வை மீட்க, தேவயானியின் அப்பா ஏன் எந்த முயற்சியும் எடுக்காமல் சாவகாசமாய் எண்ணெய் தேய்த்துக் குளித்துக் கொண்டிருக்கிறார்?

2. அவருக்கு, கதகளி பாணியில் ஏன் இவ்வளவு பெரிய புருவம் தீட்டிவிட்டிருக்கிறார்கள்?

3. பம்பாய் என்றவுடன் டைரக்டர்கள் புறாக்களைப் பறக்க விடுவது ஏன்?

4. கிளைமாக்ஸில், வரதட்சணையைப் பற்றி பல்கிவாலா - லெக்சர் நீளத்தில் ஒரு டயலாக் தேவையா?

5. தேவயானி ஏன் சதாசர்வகாலமும் யசோதையின் கிருஷ்ணனைப் போல் வாயைத் திறந்த வண்ணம் வைத்திருக்கிறார்?

6. பிள்ளையாருக்கு அபிஷேகம் பண்ண அவருக்கு தினமும் 108 குடம் தண்ணீர் எங்கிருந்து கிடைக்கிறது? (எஸ்.எம்.கி.யுடன் ரகசிய உடன்பாடா?)

7. ஹொர்பா - லைஃப் சாப்பிட்டாரா? அப்பாஸ் எப்படி திடீரென்று எடையைக் குறைத்தார்?

B. 10 வரிகளுக்கு மிகாமல் நியாயப்படுத்தவும்
(5 X 13 = 65 மதிப்பெண்கள்)

1. B/W ஆ? கலரா? - குழப்பம் வரும் அளவு, முதல் பாதியில், நமக்கும் படத்துக்கும் நடுவே ஒரு ஜெனரேஷன் - கேப் தெரிகிறது.

2. போட் - மெயிலிலிருந்து இறங்கி சதாப்தியில் ஏறி உட்கார்ந்த மாதிரி இருக்கிறது, அப்பாவின் வருகைக்குப் பிறகு.

3. காமெடியில் இழந்த பாயிண்ட்டுகளை எமோஷனல் காட்சிகளில் பெறுகிறார் முரளி (அப்பாஸ் இறந்த தவறான செய்தி கிடைக்கும்போது.)

4. 'காதலுடன்' என்று ஒரு சிக்ஸரும், 'உச்சிக்கரையில் ஓ மைனா' என்று ஒரு பவுண்டரியும் அடித்து விடுகிறார் எஸ்.ஏ. ராஜ்குமார்.

5. கதைக்கு முக்கியத்துவம் கொடுத்து அண்டா - சைஸ் அபத்தங்கள் இல்லாமல் படம் எடுத்ததற்கு, இஇஇராஜ குமாரனுக்கு(டைட்டிலில் இப்படித்தான் போடுகிறார்கள்) 'ஆவரேஜ்' மார்க் தாராளமாகக் கொடுக்கலாம்.

— கிருஷ்ணா சிதம்பரம்

ESTD 1947

பருக பருக ஆனந்தம்
அதிக ஆனந்தம்
சுத்தமான தஞ்சாவூர்
டிகிரி காப்பிக்கு

ஜீவா காபி

திருமணங்களுக்கும் மற்றும்
அனைத்து விசேஷங்களுக்கும்
100% பியூர் பில்டர் காபி பவுடர்

தயாரிப்பாளர்கள்:

ஜீவா காபி ஒர்க்ஸ்

28, பி.வி. நாயக்கன் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

இலவச டோர் டெலிவரிக்கு தொடர்பு
கொள்ளவும்:(சென்னை) : **8444725, 8442667**

டெல்லி, மும்பை, கொல்கத்தா.
E-mail:coffeeps@md3.vsnl.net.in

நவக்கிரக ஆன்மீக பயணம்

நாள் : சென்னையில் இருந்து 21.3.03
இரவு கிளம்பி 24.3.03 காலை திரும்புதல்.

2 தினங்கள் ரூபாய் 900/-

வசதி : இரயிலில் படுக்கை
வசதியுடன் சென்று வருதல்.
இரவு தங்க வசதியான அறைகள்,
திருத்தலங்களை சுற்றி பார்க்க வேன்
வசதி உட்பட. மற்றைய தேதிகளில்
சிறு சிறு குழுக்களாகவும் அழைத்துச்
செல்லப்படும். (சாப்பாடு நீங்கலாக)

சென்னையில் தொடர்பு போன் : 24720885

VISWAM TOURS & TRAVELS
VISWAM GUEST HOUSE

33, திருமஞ்சன வீதி, திருவிழந்தூர்,
மயிலாடுதுறை - 609 001.
போன் : 04364 - 227228

ஸ்ரீ ராமஜெயம்



ஸ்ரீ மாருதி டிராவல்ஸ்

தொலைபேசி எண் **25511786** 10/1, ராஜேஸ்வரி தெரு, பெரம்பூர், சென்னை — **600 011**
(நாம சங்கீர்த்தனத்துடன் அன்பர்களை அழைத்துச் செல்லும் ஆன்மீக சுற்றுலா குழு அமைப்பாளர்கள்)
Please visit our website: www.srimaruthitravels.com

① 13.4.2003: திருமலைவையாவூர், திருவக்கரை, மயிலம், மதுராந்தகம், ஸ்ரீகுருதத்தா

② 20.4.2003: வல்லக்கோட்டை, மகாமேரு, காஞ்சிபுரம், தென்னாங்கூர், உத்திரமேரூர்

③ 24.4.2003: பாண்டிச்சேரி அரவிந்தர் ஆசிரமம், ஸ்ரீ அன்னை நிரந்தரமாக வந்து தங்கிய தினம்.

④ 04.5.2003: தாமரைப்பாக்கம், சுருட்டப்பள்ளி, நாராயணவனம், நாகலாபுரம், காக்களூர்

குறிப்பு: மேற்படி ஒருநாள் பயணங்கள், ஒவ்வொன்றுக்கும் காலை டிபன், காபி, மதிய உணவு, மாலை தேநீருடன் கூடிய பஸ் கட்டணம் உட்பட நபர் ஒருவருக்கு ரூ.240/-

⑤ May/June: சிங்கப்பூர், மலேசியா, பாங்காக்-அந்தமான் தீவுகள்

⑥ June/July: கைலாஷ், மானசரோவர் புனித யாத்திரை.

⑦ September: 15 நாட்கள் பத்திரிநாத், கேதார்நாத், ஹிரித்துவார், ரிஷிகேஷம், ஆக்ரா, மதுரா, பிருந்தாவனம் ஆகியவை.

⑧ November: 15 நாட்கள் பஞ்சத்துவாரகை மற்றும் புஷ்கர், ஜெய்ப்பூர், சோம்நாத், மவுண்ட் அபு ஆகியவை.



குறிப்பு: எமது ஏப்ரல் மாத அறிவிப்பின்படி இருந்த நவதிருப்பதி மற்றும் மலைநாட்டு திருப்பதி யாத்திரை சில தவிர்க்க முடியாத காரணங்களால் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

முழு விவரமறிய சுய விலாசமிட்ட ரூ. 5/-ஸ்டாம்ப் அடங்கிய கவருடன் விண்ணப்பிக்கவும்.

பங்கு பெறுவீர்! பாக்கியவான்களாவீர்! விவரங்களுக்கு: **V.சீனிவாசன்** (அமைப்பாளர்)

9

யாரிடம் சொல்வேனடி

தென்னங் கீற்றுகள் காற்றில் தலையாட்டிக் கொண்டிருந்தன. நிலவொளியில், தெரு விளக்கின் மஞ்சள் ஒளியும் குழைத்துப் பூசிய மினுமினுப்பு கீற்றுகளில் பளபளத்தன. தென்னையை மிஞ்சி பப்பாளி ஒன்று வளர்ந்திருந்தது. வளர வளர இலைகள் உதிர்ந்து போய், காய்த்துக் கிடக்கும் காய்களுக்குக் குடை பிடித்தாற் போல் வளர்ந்து கொண்டே போகும் அதன் இயல்பு, பிடித்திருந்தது.

தேவையற்றவைகளை உதிர்த்து விடும் இயல்பு எல்லா உயிரினங்களுக்கும் உண்டு போலும்... மனிதனைத் தவிர்த்து. சுகமோ, துக்கமோ அமைதியை கைக் கொள்ள முடிகிற மனத்தைப் பெறுதல் பெரும் பாக்கியந்தான்.

அலை பாய்ந்து கொண்டிருந்த மனத்தை ஒரு நிலைக்குள் கொண்டு வர பெரும்பாடு பட்டுக் கொண்டிருந்தாள் அஞ்சலி.

மாலை கடை வீதியில் நடந்த சம்பவங்கள் அவளின் மன உணர்வுகளை மெல்ல மெல்ல உரசி, சுந்தரின் எதிர்விளைவுகளின் மேல் கோபமாய்ப் பற்றிக் கொண்டு விடும் போலிருந்தது.

தனக்குள்ளேயே கேள்விகளில் உழன்று கொண்டிருந்தாள்.



'தான் நடந்து கொண்டதில் என்ன தவறு? பொறுக்கித்தனமாக ஒருவன் தன் கண் முன்னே நடந்து கொள்ளும்போது, அதைக் கண்டும் காணாதது மாதிரி விலகி வருவதுதான், பிரச்னையேதுமின்றி வாழ்வதற்குத் தகுதியா?'

'ஆரம்பத்திலிருந்தே தன்னுடைய இயல்பாக இதுதான் இருந்திருக்கிறது. ஆனால், திடீரென்று இந்த நடத்தைகள் எல்லாம் வேண்டாதவைகளாகவும், தேவையில்லாத விஷயங்களாகவும் உருமாறிப் போனது எதனால்? எத்தனையோ நாட்கள், எந்தெந்த விஷயங்களுக்காகவோ, எவ்வளவோ பேரிடமெல்லாம் நேருக்கு நேராய் நின்று வாதிட்டு, சண்டை போட்டிருக்கிறோம். அப்பொழுதெல்லாம் பிரச்னை பற்றிய சலனங்களும், கவலைகளுந்தான் மனதில் நிரம்பியிருக்குமேயன்றி, அவ்விதம் நடந்து கொண்டதற்காகத் தன்னை யாருமே கடிந்து கொண்டதோ, கண்டித்ததோ இல்லையே!'



பேருந்தில் பயணம் செய்கிறவர்களில் பலரும் எதிர்கொள்கிற பிரச்னைதான். ஆனால், எல்லோரையும் போல் அஞ்சலி ஒருபோதும் சும்மா இருந்ததில்லை.

பேருந்துக்குள் நுழைய முடியாமல் சன்னலோரங்களில் மோதி மோதி காயப்படும் காற்று. பொது இடம் என்கிற உணர்வேயின்றி அடித்தொண்டையில் கத்திப் பேசியபடி வரும் பயணிகள், கொஞ்சமும் யோசிக்காமல் சிகரெட் ஒன்றை பற்றவைத்து, பேருந்துக்குள்ளேயே புகை வளையங்களை ஊதிவிடும் சில ஜீவன்கள்.

அஞ்சலி தயங்கியோ, சங்கடப்பட்டோ ஒருநாளும் நின்றதில்லை.

நேராய் சிகரெட் பிடிக்கிற நபரின் முன் போய் நிற்பாள். இவள் வருகிற வேகமும், வந்து நிற்கிற தோரணையுமே, அந்த சிகரெட் ஆசாமியை சற்றேனும் உலுக்கியிருக்கும்.

''ஏங்க... உங்களுக்கு கொஞ்சமாச்சும் தெரியுதா...? அவுங்கவுங்க மூச்சு விடக்கூட முடியாம பஸ்ல முட்டி மோதி வர்றாங்க. நீங்க என்னடான்னா, சிகரெட்டு புகைய வேற ஊதித் தள்றீங்க. பஸ்ல வர்ற கொஞ்ச நேரம் உங்களால சிகரெட் பிடிக்காம வர முடியாதா? பேசாம கீழே இறங்கிப் போய் சிகரெட்டைப் பிடிச்சிக்கிட்டு, அடுத்த பஸ்ஸில வாங்க...!''

அவள் சொல்லி முடிக்குமுன்பே, சிகரெட் துண்டு பேருந்தை விட்டு வெளியே விழுந்திருக்கும். வார்த்தைகளுக்கு மதிப்பளித்து சொல்வதைக் கேட்பவர்களாக எல்லோரும் இருந்து விடுவதில்லையே...!

சிலரிடம் கோபமாய்ச் சண்டை போட்டிருக்கிறாள்.

''பஸ்ல எல்லாரும் கம்முனு சும்மா இருக்கயில ஒனக்கு மட்டும் என்னம்மா...? பேசாம போ...'' என சிலர் பதிலுக்குச் சண்டைக்கு வருவார்கள். அதையும் அஞ்சலி எதிர்கொள்வாள்.

''மத்தவங்களப் பத்தி எனக்குத் தெரியாது. பொது இடங்கள்ல சிகரெட் பிடிக்கக் கூடாதுன்னு சட்டமே இருக்கு தெரியுமா...? உன்கிட்ட என்ன பேச்சு... கண்டக்டர் சார்... பஸ்ஸ நேரா போலீஸ் ஸ்டேஷனுக்கு விடுங்க. சார்... அங்கே வந்து விளக்கம் சொல்லட்டும்...''

அஞ்சலியின் குரலுக்கு ஆதரவாய் ஓரிரு பெண்களும் சேர்ந்து கொள்வார்கள்.

''இது மாதிரி ஆளுங்களுக்குச் சொன்னா புத்தி வராது. நானும் ரொம்ப நேரமா பொறுத்துக்கிட்டு வர்றேன். உமட்டிக்கிட்டு வருது...!'' என்பாள் நடுத்தர வயது பெண்ணொருத்தி.

'இனிமேலும், சிகரெட் பிடித்தால் ஏதாவது நடந்து விடும்', என்று அஞ்சி முணுமுணுத்துக் கொண்டே அணைத்து விடுபவர்கள்தான் அநேகம் பேர்.

சமீப நாட்களில் முன்போல் எதையும் தன்போக்கில் செய்ய முடிவதில்லை அஞ்சலியால். அதுவும் கந்தருடன் பயணம் செய்யும்போது, அவனின் அனுமதியோடுதான் சிலவற்றை அவளால் தவிர்க்க முடிந்திருக்கிறது.

முகஞ்சுளித்து... ''யாரோ சிகரெட் பிடிக்கிறாங்க...!'' என்றால், காதில் ஏதும் வாங்காதது போல் இருப்பான்.

''யாரது...?'' என இவள் இருக்கையை விட்டு எழுந்து பார்த்தாலே போதும்.

அ. வெண்ணிலா

கைப்பிடித்து இழுத்து உட்கார வைத்து...

''உன்னால உக்கார முடியலேனா, கர்சிப்பை எடுத்து மூக்குல வச்சுக்க. இல்லே, சன்னலோரமா உக்காந்துக்க. இந்த வீண் சண்டைய விலை கொடுத்து வாங்குற வேலையெல்லாம் வேணாம். எவனாவது தண்ணி அடிச்சிட்டு வருவான். அசிங்கமாப் பேசுவான். அதெல்லாம் கேட்டுக்கிட்டு என்னால வர முடியாது...'' என்று சுந்தர் கறாராய்ப் பேசுவான்.

வேறு வழியின்றி அமைதியாக இருந்து விடுவாள் அஞ்சலி. மனசின் கனம் கூடிப் போகும்.

எத்தனையோ சின்னச் சின்ன அனுபவங்கள். பொதுக் கழிப்பறை என்று போட்டிருக்கும். ஒரு ரூபாய் கேட்டபடி யாரேனும் நிற்பார்கள். கட்டணக் கழிப்பறைகளில் ஐம்பது பைசா என்று எழுதியிருக்கும். உள்ளே நுழைந்தால் 'இரண்டு ரூவா கொடு' என்பார்கள். 'ஏன்'னு ஒரு வார்த்தை கேட்டால் போதும். சண்டைக்கு வந்து விடுவார்கள்.

முரட்டுத்தனமான, தழும்புகளுடைய முகத்தோடு, சிவந்த கண்களோடுமான மனிதர்களே அநேகமாக இது மாதிரியான இடங்களில் மிரட்டுகிற தோரணையில் உட்கார்ந்தபடியே வசூலித்து விடுகிறார்கள்.

பெரும்பாலும் அவர்கள் உள்ளே வந்து போகிற மனித முகங்களைப் பார்ப்பதேயில்லை. கை மட்டும் அனிச்சையாய் நீட்டி, சில்லரையை வாங்கிக் கொள்ளும். கண்கள் சில்லரையை மட்டும் சரி பார்க்கும். மற்றபடி, எங்கோ வெறித்துக் கொண்டேயிருக்கும்.

இப்போதெல்லாம் சுந்தர் இவளிடம் காசு கொடுப்பதேயில்லை.

'நீ போயிட்டு வா...!'' என இவளை உள்ளே அனுப்பிவிட்டு, சுந்தரே முன் வந்து சில்லரையைக் கொடுத்து விடுகின்றான்.

''ஏம்ப்பா...?'' என்றால்,

''காலணா பெறாத விஷயத்துக்கு நீ வேற சண்டை போடுவே. அதான்...'' என்கின்றான் சலனமேயில்லாமல்.

வெளியிடங்களில் பழகுவதற்கும், புழங்குவதற்கும் இங்கிதமே தெரியாத எத்தனையோ பேர்களை தினந்தினம் சந்திக்க வேண்டியுள்ளது.

'ம்ம்... அவ்வளவுதான்...' என்று ஏற்றுக் கொண்டு கடந்து போகும் பக்குவமோ, மனநிலையோ அஞ்சலிக்கு இன்னமும் வாய்த்ததேயில்லை.

'இதுதான் அஞ்சலி' என்று தெரிந்திருந்தும், ஆரம்பத்தில் இவற்றையெல்லாம் சாதாரணமாக உணர்ந்து கொண்ட சுந்தர், இப்போது அஞ்சலியைக் குற்றவாளி போல் பார்க்கத் தொடங்கி விட்டான். இதற்காகவே, அவளுடன் வெளியே கிளம்புவதை தவிர்த்தான்.

பிரியத்தின் நெருக்கத்திற்குள் விரிசலொன்று வேர் இறங்குவதைப் போல் இருந்தது.

ஆவி பறக்கவில்லையென்றாலும் சூடு இருந்தது. ஒரே மூச்சில் டீயைக் குடித்து விட்டு, தம்ளரைக் கீழே வைத்தாள் அஞ்சலி.

'மறுபடியும் இவனுக்கு என்னாயிற்று? ஏன் இப்படி நடந்து கொள்கின்றான்?'

மாலை நடந்த அந்த சம்பவத்தின் தொடர்ச்சியாய் நடைபெற்ற அவனது செய்கைகள், அஞ்சலிக்குக் கூடுதல் வருத்தத்தையே தந்தன.

வழியில் ஒரு வார்த்தைகூட பேசாமல் வீட்டிற்கு வந்தவன், இந்த நிமிடம் வரை இவளை நிமிர்ந்து பார்க்கவோ, ஒரு வார்த்தைகூட பேசவோயில்லை.

சாப்பிடாமல் வேறு படுத்துக் கொண்டான்.

குழந்தைக்குச் சாப்பாடு ஊட்டி, தூங்க வைத்து விட்டு, சுந்தரைச் சாப்பிட எழுப்பினாள் அஞ்சலி. நாலைந்துமுறை எழுப்பியும் 'என்ன...' என்று கூட கேட்கவில்லை.

'இவன் தூங்கவில்லை. முழித்துக் கொண்டுதான் இருக்கின்றான்!'

ஒரு நிமிடம் நின்று யோசித்தாள்.

'நான் மட்டும் என்ன தப்பு செஞ்சிட்டேன்... இவனை சமாதானம் செய்து தேற்றுவதற்கு...!'



''என்னது! 2004ல் திருமணம் செய்து கொள்ள மணமகள் தேவைன்னு விளம்பரம் கொடுக்கணுமா...!''

''ஆமா, முதல் மனைவி மீது போட்டிருக்கிற டைவர்ஸ் கேஸ் முடிய ஒரு வருஷம் ஆகும்னு என் வக்கீல் சொல்றாரு!

- உ. ராஜாஜி

கதவை சாத்தி விட்டு வந்தாள். பசிப்பது போலிருந்தது. சாப்பிடத் தோணவில்லை. வயிறு காலியாய், மனசு கனத்துப் போயிருந்ததில் தூக்கம் வரவில்லை.

எப்படி எப்படியோ யோசித்தும் தன் மேல் என்ன தவறென்று அஞ்சலிக்குப் புரியவேயில்லை. தனக்குச் சரியில்லை என்று, தவறென்று படும் விஷயங்களைத் தட்டிக் கேட்கும் இயல்பைக்கூட தொலைத்துவிட்டு, பல் பிடுங்கிய பாம்பைப் போல் வாழ்வதில் என்னவிருக்கிறது...?

வெட்டி முடிந்த கரும்புத் தோட்டத்தைக் கொளுத்தி விட்டிருப்பார்கள் போலும். மலையடிவாரம் முழுதும், ஆரஞ்சு வண்ணத்தில் திகுதிகுவென்று தீ கிளர்ந்தெழுந்து எரிகிறது. இன்னொரு மலை போல் மேலெழுந்து நின்றிருக்கிறது புகை கலந்த தீ. சிறுவயதில் இரவு நேரத்தில் நெருப்புத் தெரிந்தாலே, 'கொள்ளிவாய்ப் பிசாசு போகுது' என்று பாட்டி சொன்னதைக் கேட்டு பயந்தது நினைவுக்கு வந்தது.

கற்பிதங்களும், பயங்களும்கூட பாதுகாப்பாய் இருக்கிறது பலருக்கும். எல்லாவற்றையும் தன் நோக்கிலேயே புரிந்து கொண்டதில் கற்பிதங்களும், பயங்களும் காணாமல் போய் விட்டன. எதற்கும் பயந்து போகாமல், வீணான 'அச்சச்சோ'க்கள் இல்லாத பெண்ணை ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறார்கள் ஆண்கள்.

கும்பல்களைப் பார்த்து, அவர்களின் முதுகுக்குப் பின்னால் ஒளிந்து கொள்ளும் பெண்ணும், துணையின்றி தனியே செல்லத் தயங்கும் பெண்ணும், எல்லாவற்றிற்கும் ஆலோசனைக் கேட்டுத் தயங்கி நிற்கும் பெண்ணும் மட்டுமே ஆண்களுக்குப் பிடித்தமானவர்களாயிருக்கிறார்கள்.

சுந்தர் தன்னைப் புறக்கணிப்பது கூட இதனால்தானோ என்றிருந்தது அஞ்சலிக்கு.

ஒருவருடன் அன்பு செய்கிறோம் என்பதன் பொருள், நம்முடைய இயல்புகளை அழித்து விடுவது என்பதா? உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது என்பதன் பொருள்.. உனக்காகவே என்னை, என் விருப்பங்களைப் பலியாக்கிக் கொள்கின்றேன் என்பதா?

'நான் சரியாக இருந்திருக்கிறேனா? எனக்கு விருப்பமானவன் என்பதற்காக அவனை, அவன் இயல்பிலேயே வாழ விட்டிருக்கிறேனா...?



''எதுக்கு ஸ்டேஷனுல இருந்து பொருட்களோட விலைப்பட்டியல் உனக்கு அனுப்பியிருக்கிறாங்க, கபாலி?''

''விலைவாசி உயர்ந்திட்டுது; மாமூல் உயர்த்துன்னு சிம்பாலிக்கா தெரிவிக்கறாங்களாம்!''

- தூத்துக்குடி வி. சகிதா முருகன்

எனக்கு சிகரெட் புகை பிடிக்காது என்பதற்காக அவனை புகைப்பிடிப்பதை விட வைத்திருக்கின்றேன். நண்பர்களோடு நள்ளிரவு வரை சுற்றிக் கொண்டிருந்தவனை, இரவு எட்டு மணிக்குள் வீடு திரும்ப கட்டாயப் படுத்தியிருக்கின்றேன். நான் இல்லாத அவன் பயணங்களை விரும்பவில்லை. கூடவே போயிருக்கின்றேன். சிலவற்றைத் தவிர்த்துமிருக்கின்றேன்.

சாப்பிட்டத் தட்டைக்கூட கழுவியறியாத அவன், இப்போது துணி துவைத்துக் கொள்ளப் பழகி விட்டான். விரல் நகங்களில் கூட அழுக்குப் படியாத அவன், குழந்தையின் மலம் அள்ளிப் போடவும், குழந்தையைச் சுத்தம் செய்து கழுவவும் தெரிந்து கொண்டான்.

வீட்டைப் பெருக்கவும், காய்ந்த துணிகளை மடித்து வைப்பதும் அவன் இயல்பாகி விட்டது. இவையெல்லாம் புரிதலில் மட்டும் கற்றுக் கொண்டவைகளா? கட்டாயத்தில் எழுந்தவைதானா?

தனக்காக மட்டுமா மாறினான்? குடும்பத்திற்காகத்தானே...?'

சுந்தர் மாற்றிக் கொண்டுள்ளவையும், தான் விட்டுக் கொடுத்தவையும் மாறி மாறி மனசுக்குள் சுற்றி வந்தன.

ஒரு கூட்டுக்குள் இருவர், இருவருக்காக குழந்தைகள், குழந்தைகளுக்காக குடும்பம், குடும்பம் சார்ந்த வாழ்க்கை... என சுருள் சுருளாக அஞ்சலியின் மனக்கண்ணில் காட்சிகள் படிந்தன.

சரி, தவறு என விடை காண முடியா நீள் சுழற்சியில் சிக்கிக் கொண்ட அஞ்சலிக்குத் தலை சுற்றத் தொடங்கியது.

(தொடரும்...)



வெகு விரைவில்!



உங்கள் அபிமான

கல்கி

இப்போது
உலகம் முழுமைக்கும்,
புதுப்பொலிவுடன்
வாரம்தோறும்.....

www.kalkionline.com

- முற்றிலும் புதிய வடிவம்!
- ஆவலைத் தூண்டும் புதிய பகுதிகள், மற்றும் தொடர்கள்!
- ஆணித்தரமான தலையங்கம்!
- சுவாரசியமிக்க வாசகர் பங்கேற்பு!
- போட்டிகள், கருத்தாடல்கள், அமரர் கல்கி நூல்கள், சந்தா.....

In association with

ChennaiOnline
all @bout the city.

முற்றிலும் புதிய அனுபவம்!

அமெரிக்காவிலிருந்து அடையாறுக்கு!



மார்ச் 8

எழும்பூரில் உள்ள மியூசியத்தைப் புதுப்பிக்க ஒப்பந்தம் பெற்று, அதில் எண்பது சதவிகித வேலைகளை முடித்துவிட்ட திருப்தியில் படுகுஷியான மூடில் இருக்கிறார் நளினி ராதாகிருஷ்ணன்.

குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாமே வந்து திறந்து வைக்கப் போகிறார் என்கிற மகிழ்ச்சி வேறு.

''என்னுடையதுதான் குறைந்தபட்ச 'கொட்டேஷன்'. எந்த சிபாரிசும் பிடிக்காமலே எனக்குக் கிடைத்தது. பதிமூன்று ஷோ கேஸ்கள், அவர்கள் கேட்ட அளவிலேயே தயாரித்துக் கொடுத்துவிட்டேன். சில மதுரைக்கும், சில கங்கைகொண்ட சோழபுரத்துக்கும் அனுப்பப்பட்டுவிட்டன. தேக்கு மரமும், கோபேன் கண்ணாடியும், ஜெர்மன் லீல்களும், சிலிகான் ஜெல்லும் வைத்து உருவாக்கியிருக்கிறேன். இது மாதிரி இந்தியாவில் இதுவரை பண்ணியதில்லை!'' என்கிறார் நளினி.

முதல் தளத்தில் இப்போதிருக்கிற பாரம்பரிய ஷோ கேஸ்களைப் புதிது போல் தோற்றமளிக்கிற மாதிரி செய்திருக்கிறார். ஆலயச் சூழல் மாதிரி அமைந்திருக்கிறது இது. இரண்டாம் தளத்தில், அலுமினிய சானல்கள் பொருத்திய 'ஆக்ரோ நாம்' ஷோ கேஸ்கள். அண்ணா பல்கலைக் கழக மாணவர்களுடன் அமர்ந்து டிசைன்களை உருவாக்கியிருக்கிறார் நளினி. சாதாரண ஸ்க்ரு முதல், இறக்குமதி செய்யப்பட்ட பூட்டுக்கள் வரை, ஒவ்வோர் அம்சத்தையும் நுணுக்கமாகக் கவனித்துச் செய்திருக்கிறார்.

''லண்டன், நியூயார்க், ஷாங்காய் மியூசியங்கள் போலவே இனி நம் சென்னை மியூசியமும் இருக்கும் பாருங்கள்!'' என்கிறார். வெளிப்புற வேலைகளை எல்லாம் பொதுப் பணித் துறை செய்கிறதாம்.

இளமை, திறமை, உற்சாகம் இவற்றுக்கு மறு பெயர் நளினி ராதாகிருஷ்ணன். எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியில் இன்டீரியர்



டிசைனிங் தேறியவர். திருமணமாகி அமெரிக்கா சென்றவர், அங்கே 'இந்தியா வெஸ்ட்' இதழின் விளம்பர நிர்வாகியாக இருந்தார். ஸியர்ஸ் ரோபக் நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றியிருக்கிறார்.

'கணவர்' இந்தியாவில் மென்பொருள் துறையில் இறங்கப் போகிறேன், வா சென்னை போவோம், என்று சொன்ன போது, கலிஃபோர்னியாவை விட்டு வரவே மனதில்லை. வந்த பிறகு, என்னுடன் கல்லூரியில் இன்டீரியர் டிசைனிங் படித்த சுசித்ரா மோகனுடன் சேர்ந்து 'ஈவன்ட்ஸ்' நிறுவனம் ஆரம்பித்தேன். பிறகு அதை விற்று விட்டேன். இப்போதும் நிறைய நிறுவனங்களுக்கு ஈவன்ட் மானேஜ்மென்ட் செய்கிறேன். பஜாஜ், டி.வி.எஸ். எல்லாம் என்னை ஊக்குவித்து வருகிறார்கள். 'இன்டர்ஸ்கேப்' என்ற நிறுவனத்தை சுசித்ரா மோகனுடன் ஆரம்பித்து, இன்டீரியர் டெகரேஷன், லேன்ட்ஸ்கேப்பிங், என்று நிறைய அலுவலகங்கள், வீடுகள் எல்லாவற்றிலும் உள் அமைப்பில் அழகுபடுத்தும் பணிகளைச் செய்து வருகிறேன்" என்கிறார் நளினி.

'மீடியா மிக்ஸ்' என்ற பெயரில், நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்தும் ஈவன்ட் மானேஜ்மென்ட் பணியைச் செய்கிறார் நளினி.

நளினி ராதாகிருஷ்ணனுக்கு வேறு என்னென்ன தெரியும்?

பாட்மின்டன் ஆடுவார். ஸ்நூக்கரும் தெரியும். ஷார்ப் ஷூட்டிங்கில், மாநில அளவில் பிஸ்டல் ஷூட்டிங் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றிருக்கிறார். இந்த வருடம் நேஷனலில் பங்கு பெறப் போகிறாராம்.

காலையிலும் மாலையிலும் 'ஜிம்'முக்குப் போய் உடற் பயிற்சி செய்து, உடம்பைக் கட்டுக் கோப்பாக வைத்திருக்கிறார். (இவருக்கு அனிஷ் என்ற பையனும், லாவண்யா என்ற பெண்ணும் இருப்பது, சொன்னால் தான் தெரியும்!)

அமெரிக்காவில் இருந்தபோது, மும்பை ராஜராஜேசுவரி பரத நாட்டியப் பள்ளியில் பயின்ற விசால் ரமணியிடம் பரத நாட்டியம் கற்றிருக்கிறார்.

சென்னையில் மணக்கால் ரங்கராஜனிடம் கர்நாடக இசை படித்திருக்கிறார். சமீபத்தில் வெங்கட்ராகவனுக்கு பத்மஸ்ரீ விருது கிடைத்த அன்று, அவர் வீட்டில் நடந்த பார்ட்டியில், ஒரு குட்டிக் கச்சேரியே செய்துவிட்டார். அன்று வெங்கட்டின் மாமனாருக்கு வெடிங் அனிவர்சரி வேறு!


அமெரிக்காவிலிருந்து திரும்ப சென்னைக்கு வந்தபோது, உடனேயே திரும்பப் போய்விட வேண்டும் போல் இருந்ததாம். நண்பர்கள் யாரும் இல்லை. என்ன வேலை செய்வது என்று ஒரு குழப்பம்.

இன்று?

"என் வேலைகளில் திருப்தியும் சந்தோஷமும் கிடைக்கிறது. என் வெற்றிகள் எனக்கு நம்பிக்கை தருகின்றன!" என்கிறார் நளினி.

பேட்டி : **சாருகேசி**

படங்கள் : **யோகா**



கிளிசரின் புதிர்!

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு டி.வி சீரியல்களின் பெயர்களை ஊகியுங்க! எல்லாத்தையும் கண்டுபிடிச்சுட்டா நீங்கதாங்க மெகா சீரியல் மன்னீ!

1. மலராலும் கட்டிப் போடலாம்.
2. கடல் உள்ள மட்டும்...
3. தாயம் இதில் ஒளிந்திருக்கிறது.
4. பயப்படும் பெண்கள்
5. போய்விடு, அம்மா!
6. நெல்லின் வகை
7. உன்னோடு நானும் அவளும்
8. கல்யாணத்தின் அடையாளம்
9. முதலெழுத்தும் கடைசி எழுத்தும் சேர்ந்தால் பெண்கள் விரும்பும் பொருள்.
10. ராகத்தின் பெயரில் இருபது வருஷ சினிமா

– பி.என். சீத்தாராமன்

விடைகள்: 1. பூவிலங்கு 2. அலைகள், 3. தாம்பத்யம், 4. அஞ்சுமஞ்சு 5. செல்லம்மா 6. சம்பா, 7. நீ, நான், அவள். 8. மாங்கல்யம். 9. நம்பிக்கை. 10. சஹானா.

CREATORS
NOT JUST BUILDERS

YESDE ASSOCIATED BUILDERS LTD.

402, "Challamall" 17, Thyagaraya Road,
T. Nagar, Chennai - 600 017.

PORUR
Proposed Double Bed Deluxe Flat

"APURVA"
Mugalivakkam Main Road,
Opp.S&S Bushing & W.S.

MOGAPPAIR East
Ready for Occupation

- Power Connection
- Water Supply

2 Bedroom Deluxe Flats
at **"ANAAR"** 10th Block
(Behind MMM Hospital)
Opp. TNEB (Mosque Bus Stop)

Ph: 2433 3636 / 2434 0224 / 2667
Cell: 98410 - 73973 Fax: 24340210
E-Mail:yesde@md3.vsnl.net.in
www.yesde-builders.com

22 Yrs of Experience

ஸ்ரீசந்தர விநாயகர் துணை உ தேவதானப்பட்டி ஸ்ரீ காமாட்சி அம்மன் துணை

தினசரி காலை காபி, 3 வேளை சைவ உணவு, தங்கும் வசதியுடன் 3 Tier இரயில் சுற்றுலாக்கள்.

18-3-2003 & 7-4-2003 மற்றும் 8-5-2003 முதல் 21 நாட்கள் : பூரி – கோனார்க் – புவனேஸ்வர் – கல்கத்தா – கயா – காசி – திரிவேணி – அயோத்தி – அமிர்தசரஸ் – ஜம்மு – வைஷ்ணவதேவி – ஹரித்துவார் – ரிஷிகேஷ் – டெல்லி – ஆக்ரா – மதுரா ரூ. **6590**

8-5-2003 மற்றும் 12-6-2003 முதல் 18 நாட்கள் மதுரா - ஆக்ரா - பிருந்தாவன் - டெல்லி - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - பத்ரிநாத் - கேதார்நாத் - திரிவேணி - அயோத்தி - நைமிசாரண்யம் - காசி - சாரநாத் - கயா - கல்கத்தா ரூ. **5990**

19-4-2003 மற்றும் 8-5-2003 முதல் 16 நாட்கள் : மதுரா – ஆக்ரா – டெல்லி – குருசேத்திரம் – சண்டிகார் – சிம்லா – குளு – மணாலி – ரோத்தங்பாஸ் – வசிஷ்டாபாத் – ஜோத்பூர் ரூ. **5990**

18-3-2003 & 15-4-2003 & 8-5-2003 முதல் 19 நாட்கள் : மதுரா – ஆக்ரா – ஜெய்பூர் –ஜோத்பூர் ஓசியான் பாலைவனம் – டெல்லி – அமிர்தசரஸ் – வாகா பார்டர் – ஹரித்துவார் – ரிஷிகேஷ் – அயோத்தி – திரிவேணி – காசி – சாரணாத் – கயா – கல்கத்தா – பூரி – புவனேஸ்வர் – கோனார்க் ரூ. **5990**

குறைந்த நாட்கள் - குறைவான கட்டணம் | * L.T.C. ரசீது தரப்படும்.

18-3-2003 & 7-4-2003 & 8-5-2003 முதல் 10 நாட்கள் : கல்கத்தா – கயா – புத்தகயா – காசி திரிவேணி ரூ. **2990**
27-3-2003 & 7-4-2003 & 4-5-2003 முதல் 11 நாட்கள் : பூரி - புவனேஸ்வர் - கோனார்க் - கல்கத்தா - டார்ஜிலிங் ரூ. **3300**
21-4-2003 & 12-5-2003 முதல் 12 நாட்கள் : திரிவேணி - காசி - சாரணாத் - வியாசகாசி - நேப்பாள் ரூ. **3990**

சன் டிராவல்ஸ்

Prop. *K. சிதம்பரம்*, B.Sc., B.Ed.,
செல் : 98421 - 56668
121, நேதாஜி ரோடு, (மாடர்ன் ரெஸ்டாரெண்ட் எதிரில்) மதுரை – 1. போன் : 2341133, 2344466
சென்னை : 30, நடேசன் தெரு, (சிவா–விஷ்ணு ஆலயம் அருகில்) T. நகர், சென்னை–17. போன் : 24359194
கோவை : கலா காம்ப்ளக்ஸ், 523, நூறு அடி ரோடு, காந்திபுரம், கோவை – 641 012 ✆ 2490547, 94430–25226
கும்பகோணம் : பிரசாத் போட்டோ ஸ்டுடியோ, 13-B, கோதண்டபாணி தெரு, கும்பகோணம். போன் : 2433550



காதல் பிசாசே!

19

தலைகோதும் விரலைப்
பிடிக்கும்
தரைவிழும் நிழலைப்
பிடிக்கும்
நீ பேசும் வாய் வார்த்தைகள்
தாயாகிடும் தருணம்
பிடிக்கும்
அலைபாயும் விழியைப்
பிடிக்கும்
அகலாத இரவைப் பிடிக்கும்
நீ வீசும் கூர்பார்வையில்
நான் சாய்கிற மரணம் பிடிக்கும்

எதையெல்லாம் இறைவனை அடைவதற்கான வழியாகச் சித்தர்கள் கற்பிக்கிறார்களோ. அவையாவும், காதலுக்கும் பொருந்துகின்றன. இறைவனை அடைவதனால் ஆய பயன் என்னென்ன இருக்கிறதோ, அத்தனையும் காதலிப்பதனாலும் கிடைக்கக் கூடும்.

உடலையும் உள்ளத்தையும், உண்மையை உணர வைக்கும் தகுதிக்கு இட்டுச் செல்வது யோகம். அந்த யோகத்தின் உண்மையை உணர வைக்கவே, காதல் போல. மிக மிக நுண்ணிய விதையை விருட்சமாக்குகின்ற

வித்தையைக் காதல் செய்கிறது.

காலச் சக்கரம் அறிவுப் பயணத்தை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது. அதன் வேகம் புதிய புதிய பொருளை உருவாக்கித் தருகிறது. அன்போ, அமைதியையும் நிம்மதியையும் தருவதற்காகப் போராடுகிறது. நமக்கு இரண்டில் எது வேண்டும்?

அம்மா மட்டும் இருக்கும்போது அம்மாவையும், அப்பா மட்டும் இருக்கும்போது அப்பாவையும் பிடிக்குமென்கிற குழந்தைகளைப் போல, நாம் நமது இருப்பை உத்தேசித்து வாழப் பழகிவிட்டோம். உண்மையில், நமக்கு இருவரும் தேவை. இருவரால்தான் நாம் இங்கே வந்தோம். அறிவும் அன்பும் நம்மை வரவழைத்தன.

வட்டிலிலும் தொட்டிலிலும்
மார்மேலும், தோள் மேலும்
கட்டிலிலும் வைத் தென்னைக்
காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச்
சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்?

அன்பை ஈன்றெடுக்கும் அன்னையின் மேனிக்குத் தீ மூட்டும் நேரத்தில் அழுது புலம்பும் பட்டினத்தார், உடம்பு சுகந்தன்னை உயர்வென்று சொன்னதில்லை. உடம்பிலிருந்து வெளியேறுவதுதான் ஒவ்வொரு உயிரும் என்பதை சித்தர்களும் மறுப்பதில்லை. எனில், இந்த உயிர் உடம்பால் மட்டுமே விளைந்ததில்லை, அதனுள்ளே அன்பிருக்கிறது.

இதை இப்படியும் புரிந்து கொள்ளலாம்; இரண்டு அன்பிலிருந்து ஒரு அன்பு உருவாக்கப்படுகிறது, அந்த அன்பு இன்னொரு அன்பைச் சேரும்போது அறிவு பெறுகிறது. அறிவால் தழைத் தோங்கும் வையம் அன்பால் காக்கப்படும். அறிவு மட்டுமோ அல்லது அன்பு மட்டுமோ காலத்தைச் செழுமைப்படுத்தாது. இரண்டையும் சித்தர்கள் போற்றுவர்.

வெளியே அறிவும் உள்ளே அன்பும் பூரணமாகும்பொழுது, பூமி புனிதமடையும். விவேகானந்தர் சொல்வதுபோல உடல் தேர்; புலன்கள் குதிரைகள்; மனம் கடிவாளம்; அறிவே தேர்ப்பாகன். இத்தனையும் இல்லாது ஓர் உயிரால் பயணிக்க இயலாது.

பற்றற்ற நீரதிலே
பாசி படர்ந்தது போல்
உற்றுற்றுப் பார்த்தாலும்
உன் மயக்கம் தீரவில்லை
உற்றுற்றுப் பார்த்தாலும்

யுகபாரதி

உன் மயக்கம் தீர்ந்தக்கால்
பற்றற்ற நீராகும் என் கண்ணம்மா
பாசியது வேறாமோ?

யாதொரு பற்றுமில்லாதவனை ஊன்றிக் கவனித்தாலும் அவன் உண்மையானவன் என்கிற மயக்கம் ஒரு போதும் தீர்வதில்லை. எப்படியெனில், தெளிந்த நீரில் படர்ந்த பாசியைப் போல், இந்த மயக்கம் தீர்ந்தாலும் வேறொரு மயக்கம் உண்டாகிறது. அது, பாசியும் மயக்கமெனும் உணர்வைத் தருகிறது. அழுகுணிச் சித்தரின் இப்பாடல் பேருண்மை பாதையைத் தெளிவாக்குகிறது என்றாலும் காதலைப் பேசுவது போலவே தோன்றுகிறது. கண்ணம்மாவைக் கௌசல்யாவாகவோ அல்லது கௌசல்யாவைக் கண்ணம்மாகவோ கருதி உணர்கிற பக்குவத்தைக் காதலும் தரும், பக்தியும் தரும். அவருக்குப் பக்தி. நமக்குக் காதல்.

உற்றுற்றுப் பார்த்தாலும் உன் மயக்கம் தீரவில்லை. பற்றற்ற நீரில் பாசி படர்ந்தே தீரும். பற்றற்ற நிலை முழுமை. பற்றிக் கொள்ளும் நிலை புதுமை. முழுமையை நோக்கும் எல்லாப் புதுமையும் போற்றத்தக்கதே.

காதலிக்காதே என, பொது மேடையில் ஒருவன் உரைப்பானேயானால் அவனை பிற்போக்கானவன் என்போம். சாதியும் மதமும் இன்னபிற சடங்கு சாங்கியங்களை வலியுறுத்துபவன் காதலை ஒரு போதும் ஆதரிக்கமாட்டான். அவனுக்கு முக்கியமாகப்படுவது அவனுடைய அந்தஸ்து. இந்த அந்தஸ்து நிலையற்றது என்பதையோ, அல்லது இந்த அந்தஸ்தால்தானே நாளை தொலைந்து போவோம் என்பதையோ, அவன் அறிய மாட்டான்.

மூன்றாவது மனிதனை கருதித்தான் ஒவ்வொருவனும் வாழ்கிறான். அந்த மூன்றாவது மனிதனை சமூகம் கட்டமைக்கிறது. காதலிப்பதை அவதூறாகப் பேசவும் பார்க்கவும் அந்த சமூகம் கட்டமைவதால் அவன் உதடுகள் அதையே பேசுகின்றன. அவன் விழிகள் அதையே பார்க்கின்றன.

காதலிப்பதை மகிழ்வாக வேறொரு சமூகம் கட்டமைத்தால், அந்த சமூகத்தின் மூன்றாவது மனிதன் அதைப் பாடுகிறான், போற்றுகிறான் அதன் காலுக்கு நீரூற்றி பூஜை

செய்கிறான். காதலிப்பதும் காதலிக்காததும் மூன்றாவது மனிதனைப் பொருத்ததாக அமைவதுதான் இன்றைய சோகம். இந்தச் சமூகம் காதலிப்பதை சட்டம் போட்டு காப்பாற்றுகிறது. விரும்புகிற இருவரையும் சேர்த்து வைக்கிறது. பிரச்னை நேர்ந்தால் பாதுகாக்கிறது. ஆனபோதும், காதலிலிருந்து இந்தச் சமூகம் வெகு தூரம் தள்ளியே இருப்பதற்கு என்ன காரணம்? வழிவழியாய் வந்த ஒழுக்கமென்னும் பொய்க் கவசம். கடிவாளத்திற்குப் பதில் இந்தக் குதிரைகள் கவசத்தைப் பூட்டிக் கொண்டன.

உன்னை மறந்தல்லோ
உளுத்த மரமானேன்
தன்னை மறந்தார்க்குத்
தாய் தந்தை இல்லையடி.
தன்னை மறக்காமல்
தாயாரு முண்டானால்
உன்னை மறக்காமல் என் கண்ணம்மா
ஒத்திருந்து வாழேனோ?

நினைவுக்குழி பறித்து நேசத்தை நட்டு வைத்தால், கனவு மழை வந்து கரைத்து விட்டுச் செல்கிறது. அழுகுக் கிளை தேடி அன்புக் கூடு செய்வித்தால், வீசும் புயல் காற்று வீழ்த்தி விட்டுப் போகிறது. என்ன செய்வதெனத் தெரியாமல் புலம்புவதும், ஏது செய்வதெனப் புரியாமல் அரற்றுவதும் இயற்கையின் கட்டளை. தன்னை மறந்தவர்க்கு, தாய் தந்தை எனும் சொந்தமற்றுப் போகும். இறைவன் இருக்கிறான் என்ற உணர்வு வேண்டும். அவ்வுணர்வை மறக்காமல் தாயாரும் உண்டானால், பெருமானை மறக்காமல் என் கண்ணம்மா, ஒன்றாக ஒத்திருந்து வாழ்வேனோ? என்கிறார் சித்தர்.

இறைவன் இருக்கிறான் என்ற உணர்வைக் காதலுக்குப் பொருத்துவோம். காதல் உண்மையென்று நம்புவோமாயின் தன்னை மறக்கும் சக்தி பிறக்கும். சக்தி பிறந்துவிட்டால், முக்தி கிடைக்கும். முக்தியடைவது தானே முழுமை. ஞானிகளுக்கு முக்தி. பாமரர்க்கு மரணம். காதல் மரணத்தைத் தராது.

நீயாக வேயானால் புழுதிப்படலம்
என்னை
நீக்கமற நிறைந்து விடட்டும்
நோயாகவே நீ இருந்துவிடேன்
தீர்க்க முடியாமல் கூடவே
கறுத்து வியர்த்த தேமல் முகத்தோடு
நீ வேண்டும் எனக்கு
பெருத்த தவறுகள் சறுக்கல்களை
எப்போதும் செய்து விழித்தவாறே
இறுகின மோவாயில் உன்புத்தி
எனை பயப்படுத்தும்
இளித்து முட்டாளாயிரு நீ, எனக்குள்

அறிவும் அன்பும் நம்மை வரவழைத்தது என்கிற கூற்றை இந்தக் கவிதை மறுக்கிறது. அன்பு அறிவைத் தூக்கிக் கொஞ்சுவதில்லை. அறிவும் அன்பை நோக்கிச் செல்லுவதில்லை. இளித்து முட்டாளாயிரு என்கிற கவிஞர் மாலதியின் இக்கவிதை, பறத்தல் அதன் சுதந்திரம் என்னும் தொகுப்பு நூலில் காணக் கிடைத்தது. தொகுத்தவர் க்ருஷாங்கினி.

ஒரிய பெண்கவி ஆஷாபூர்ண மௌஹந்தி முதுமையைக் கேட்டதுபோல, தமிழில் இவர் கேட்கிறார். தீர்க்க முடியாத நோயாக, கறுத்துவியர்த்த தேமல் முகமாக; நீக்கமற நிறைந்த புழுதிப் படலமாக அன்பைப் பார்க்கிறார். அன்பால் மட்டுமே இப்படியெல்லாம் பார்க்க முடியும். எல்லாம் சரி தான். இதெல்லாம் நடைமுறைக்குச் சாத்தியமா? என்கிறீர்கள். நடைமுறைக்குச் சாத்தியப்படாத எதையும் செய்வதுதான் காதல். எதையெல்லாம் இறைவனை அடைவதற்கான வழியாகச் சித்தர்கள் கற்பிக்கிறார்களோ அவையாவும் காதலுக்கும் பொருந்துகின்றன.

(தொடரும்)

''டாக்டர் மூச்சுவிட ரொம்ப சிரமமா இருக்கு...''

''சிரமமா இருக்குதில்லையா. அப்புறம் ஏன் மூச்சு விடறீங்க?''

- சென்னிமலை சி.பி.செந்தில்குமார்



ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜுவல்லரி

P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES
Old No. 102, New No. 138, USMAN ROAD,
T. NAGAR, CHENNAI - 600 017.
PH: 24344442, 24327764 TUESDAY HOLIDAY
(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

PROPRIETOR : P. RAVINDHIRAN

எங்கு ஜோதிடம் பார்த்தாலும் **P.R.** ஜுவல்லரிக்கு வந்து ரூ.400/-க்கு ராசிக்கல் வாங்கி பயன் பெறுங்கள். கல் ஒரிஜினல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.

ராசி	ராசிக்கல்	வெள்ளி மோதிரம் விலை	
மேஷம், விருச்சிகம்	பவழம் -	2 CARAT	400/-
ரிஷபம், துலாம்	வைரம் -	5 CENT	2250/-
மிதுனம், கன்னி	மரகத பச்சை -	20 CENT	400/-
கடகம்	முத்து -	2 CARAT	400/-
சிம்மம்	மாணிக்கம் -	20 CENT	400/-
தனுசு, மீனம்	புஷ்பராகம் -	1 CARAT	400/-
	கனகபுஷ்பராகம் -	½ CARAT	1000/-
மகரம், கும்பம்	நீலம் -	20 CENT	400/-

எங்களிடம் நியூமராலஜிபடியும் கல் மோதிரங்கள் கிடைக்கும்.

TOPAZ, MOONSTONE, AMETHYST, TARQUISE, TIGER EYE, BLOOD STONE, OPAL, AQUAMARINE.

தங்கத்தில் ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 1800/- முதல் 5000/-ம் வரை உடனே கிடைக்கும்.

அனைவரும் அணியக்கூடியது கார்னெட் வெள்ளி மோதிரம் விலை ரூ. 400/- இதை அணிவதால் படிப்பு, ஞாபக சக்தி, வேலை வாய்ப்பு, வியாபாரம்,

செல்வ வளம் பெருகும்.

தபால் மூலம் மோதிரம் 1க்கு ரூ 450/-

M.O. (or) D.D. அனுப்பவும்.

தபால் எழுதினால் முழு விவர பாம்லட் இலவசமாக அனுப்புகிறோம்.

மேஷ ராசி, விருச்சிக ராசி- பவழம் * ரிஷப ராசி, துலாம் ராசி - வைரம் * மிதுன ராசி, கன்னி ராசி - மரகத பச்சை

கடகராசி -முத்து * சிம்மராசி - மாணிக்கம் * தனுசு ராசி, மீனராசி - புஷ்பராகம் * மகரராசி, கும்பராசி - நீலம் *

குறிப்பு : தினசரி காலை ராஜ் டீவியில் 6.55 மணிக்கு சிறப்புப் பேட்டியை பார்க்கவும்

அதிவேக நடை பயில்பவர்களைத் தவிர அதிகம் பேர் விழித்துக் கொள்ளாத அதிகாலை நேரம். சென்னையின் முக்கிய சாலைகளில் அந்த ஆட்டோ நுழைந்ததும், அதற்காகவே காத்திருந்தது போல, அரை டஜன் தெரு நாய்கள் ஆட்டோவைச் சூழ்ந்து கொள்ள... சிறிய உணவுப் பொட்டலங்கள் பிரித்து வைக்கப்படுகின்றன. வாலாட்டிக் குழைத்தபடி, நாய்கள் 'லபக் லபக்' என்று உணவை விழுங்குவதை, பரவசத்தோடு பார்த்தபடி நிற்கிறார் அந்தப் பெண்மணி. அடுத்த ஐந்தாவது நிமிஷம் இன்னொரு தெரு... உணவுப் பரிமாறல்.... பசித்த நாய்களின் நன்றி!

அந்தப் பெண்மணியை எங்கேயோ பார்த்தது போலவே இருக்கவே, நெருங்கிச் சென்று பார்த்தால்... அவர்... யக்ஞபிரபா. நடிகை சௌகார் ஜானகியின் மகள்!



• அன்பளிப்பு ஆம்புலன்ஸ்

வால் பசங்க!


"என்ன திடீர்னு ஜூனியர் மேனகா காந்தி ஆயிட்டீங்களே?" என்று கேட்டால்.

"அதெல்லாம் ரொம்பப் பெரிய வார்த்தை. பிராணிகளிடம் அன்பு காட்டும் விஷயத்தில் நிறைய சின்ன மேனகா காந்திகள் இருக்காங்க. அதுல நானும் ஒருத்தி. அவ்வளவுதான்" என்றார்.

"நாங்க கிரி ரோடுலே இருந்தோம். அப்பல்லாம் மழை வந்தா, தி. நகரே வெள்ளக் காடாயிடும். அந்த மாதிரி சமயங்கள்லே, கிரி ரோட்டைச் சுற்றியிருக்கிற குடிசை வாசிங்க எல்லாம் ஆடு, மாடுங்களோடு எங்க காம்பவுண்டுக்குள்ளேதான் தங்குவாங்க. அம்மா, பெரிய அண்டா நிறைய சாம்பார் சாதம், தயிர் சாதம் பண்ணிப் போடுவாங்க. அம்மாவோட குணம் எனக்கு வந்ததில் ஆச்சரியமில்லை.

"எட்டு வருஷத்துக்கு முன்னாலே, எனக்கு கருப்பை நீக்கம் செஞ்சாங்க. ஆபரேஷனுக்கு அப்புறமா மனச்சோர்வு வந்து ரொம்ப சிரமப்பட்டேன். என்னவோ பயம்! ரொம்ப டிப்ரெஸ்டா இருந்தேன். ஒரு தடவை காரிலே போய்க்கிட்டு இருக்கும்போது, தார் போட்டுக்கிட்டிருந்தாங்க. அப்போ ஒரு குப்பைத் தொட்டி ஓரமாக, உடம்பெல்லாம் தாரும், குச்சியும், குப்பையுமா நாய்க்குட்டி ஒன்று, முனகலுடன் நொண்டிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் எனக்கு வயிறெல்லாம் கலங்கிப் போச்சு. உடனே அதைத் தூக்கிக் கொண்டு, சைதாப்பேட்டை கால் நடை மருத்துவமனைக்குப் போனோம். அங்கே அதுக்கு டர்பன்டைன் பாத் கொடுத்து, அப்பியிருந்த தாரை நீக்கினாங்க. ஆனா அதுக்குள்ள அதுக்கு வலிப்பு வந்துடுச்சு. இரவெல்லாம் தூங்காமல், சொட்டு சொட்டா பால் விட்டு, அதைக் காப்பாத்தினேன். அது பேர் மானஸா... இப்பவும் என் கூடத்தான் இருக்கு.

"மானஸா வந்த பிறகு எனக்குள்ளே நல்ல மாற்றம் தெரிஞ்சது. உடல் நடுக்கம் இல்லை. அழுத்தும் பய உணர்வு இல்லை. ரொம்ப ஆரோக்கியமாயிட்டேன். "உன்னுடைய கவனத்தை நல்லபடியா திருப்பிட்டே இல்லியா...? அதுதான் வியாதியும் போயிடுச்சு" என்று அம்மா சொன்னபோது, ரொம்ப ஆச்சரியமா இருந்தது. எந்த மருந்துக்கும் கட்டுப்படாத நோய், சின்ன



நாய்க்குட்டியின் பாசத்தில் காணாமல் போனது.

"இதற்கு நடுவே, குடும்ப நண்பரின் அறிவுறுத்தலின்படி, 'பி.எஃப்.ஏ' என்ற பிராணி நல சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்தேன். தன்னலமற்ற அவர்களுடைய சேவை, என்னை மிகவும் கவரவே, நண்பர்களின் உதவியுடன் 'ஸ்ரீ சத்ய சாயி பிராணி சேவா ஷெல்டர்ஸ்..' ஆரம்பித்தேன்" என்று சின்னக் கதை போல சொன்னார் யக்ஞ பிரபா.



தெரு நாய்களுக்கு உணவு தரும் திட்டம் உருவானபோது, முருகேசன் என்ற தொழிலதிபர், பத்தாயிரம் கிலோ



அரிசியை இலவசமாகத் தந்து உதவினாரம். டாக்டர் அப்பாஜி (கால்நடை மருத்துவர்) தினகரன் (சட்ட வல்லுனர்), சின்னி கிருஷ்ணா (நீலச் சிலுவை), சங்கர லிங்கம் (நாதன் பில்டர்ஸ்), அன்புச் செழியன் (கால்நடை மருத்துவர்) போன்றவர்களின் உதவியால், கானாத்தூரில் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாய்களைப் பராமரித்து வருகிறார் யக்ஞ பிரபா.

"இது ஈரோட்டிலிருந்து குற்றுயிராக வந்து சேர்ந்த நாய். 'பிரம்மா'னு பேர். இது மூணு காலோட பிறந்ததாலே, துரதிர்ஷ்டம்னு அடிச்சுத் துரத்திட்டாங்க. இந்த எட்டு குட்டிகளும் டோல் பிளாஸாகிட்டே நிராதரவா கண்டெடுக்கப்பட்டவை. இதுங்களோட தாய் செவிலி, எங்க உணவு ஆட்டோவுக்காகக் காத்திருந்த சமயத்தில், லாரி மோதி செத்துடுச்சு. அந்த நியூஸ் தெரிஞ்சதும், ராவோடு ராவா, எட்டுக் குட்டிகளையும் தேடி எடுத்து, ஃபீடிங் பாட்டில்லே பாலூட்டி, காப்பாத்திட்டோம். இது சீஸர். இதுக்குக் காதுலே அடிபட்டு, புண்ணாயிட்டதனாலே, உரிமையாளர் இரக்கமில்லாம ரோட்டுலே விட்டுட்டார். தலை ஆட்டினா கொத்துக் கொத்தா புழு உதிரும். அப்படியொரு நிலைமையிலே எடுத்துக்கிட்டு வந்தோம். இப்ப ரொம்ப நல்லா இருக்கு."

இப்படி, ஒவ்வொரு நாய்க்குப் பின்னாலும் ஒவ்வொரு மனம் கசிய வைக்கும் கதை சொல்கிறார் யக்ஞ பிரபா.


சமீபத்தில் மேனகாகாந்தி சென்னைக்கு வந்திருந்த போது ஆயிரம் ரூபாய்க்கு காசோலை எழுதி அன்பளிப்பாக நீட்டினாராம் யக்ஞ பிரபா. உடனே "யூ நீட் இட் மோர். கீப் இட்" என்று சொன்னதோடு, நளினி சின்னிகிருஷ்ணாவின் பரிந்துரையின் பேரில், யக்ஞ பிரபாவின் பிராணி சேவா அமைப்புக்கு ஆம்புலன்ஸ் ஒன்றையும் வழங்கியிருக்கிறார் மேனகா காந்தி.

பேட்டி முடியப் போகும் சமயம், செல்ஃபோன் ஒலிக்கிறது. 'ஸ்வீட்டி, ஜூலியைக் கட்டிப் போடுங்க... குட்டிக்கு, கொஞ்சம் ஐஸ் ஒத்தடம் கொடுத்துப் பாருங்க.. இதோ... உடனே வர்றேன்...'


பதற்றத்துடன் வண்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினார் யக்ஞபிரபா.

அவரது ஆம்புலன்ஸ் வேனைப் பார்த்த தெரு நாய்கள் (பிரபாவின் பாஷையில் 'பசங்க') தெருமுனை தாண்டியும் பின் தொடர்ந்தன... வாலைக் குழைத்தபடியே.

— ஐஸ்



• ராம் குமார்



கறவைகளின் கம்ப்யூட்டர்!

"வ[illegible]டா பால் காரன்... அடடா..."

[illegible]று 'அண்ணாமலை' பாடிவிட்டு பத்தாவது நிமிஷம் ஐந்து நட்சத்திர ஹோட்டல் கட்டிவிடுகிற வேகம் இல்லையென்றாலும், இரண்டு வருஷங்களுக்குள்ளாவது சொந்தமாக ஒரு வீடு கட்டிக் கொள்ளலாம், கறவை மாடுகளை வைத்துப் பிழைப்பவர்கள்.

புலிவலம் மகளிர் பால் உற்பத்தியாளர் சங்கத்திலும். கரூர் வடசேரி பால் உற்பத்தியாளர் சங்கத்திலும் உறுப்பினராக இருந்தால் இது சாத்தியம்தான்.

கறவை மாடுகளை வளர்க்கும் கிராம வாசிகளில் எத்தனை பேருக்கு நேற்று எவ்வளவு கறந்தது, எவ்வளவு தண்ணீரும், கொழுப்பும் கலந்திருந்தது, தடுப்பூசி போடப்பட்டது எப்போது, இன்ஷுரன்ஸ் புதுப்பிப்பது எப்போது என்பதெல்லாம் நினைவிருக்கிறது?

பாலுக்கான தொகையை உடனுக்குடன் கொடுத்து உதவினால் ஏன் அவர்கள் 'அண்ணாமலை' ஆக மாட்டார்கள்?

வங்கியில் வாங்கின கடன் வேண்டுமானால் நினைவிருக்கலாம். அவர்களுக்கு கறக்கும் பாலின் அளவு தரம் பற்றியும், அதைக் கூட்டும் முறைகள் பற்றியும், மாடுகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது பற்றியும், தெரிவித்து, கொள்முதல் செய்யப்பட்ட பாலுக்கான தொகையை உடனுக்குடன் கொடுத்து உதவினால் ஏன் அவர்கள் 'அண்ணாமலை' ஆக மாட்டார்கள்?

ஆறு ஊர்களிலிருக்கும் கிளைச் சங்கங்களிலிருந்து ஆயிரத்து ஐந்நூறு உறுப்பினர்களுடைய மாடுகளின் விவரத்தை உடனடியாகத் தருவதும், கொள் முதலுக்கான தொகைகளைப் பட்டுவாடா செய்வதும் உடனுக்குடன் நடக்கிற காரியங்களா? புலிவலம் மகளிர் பால் உற்பத்திச் சங்கத்தில் இது சாத்தியமாகி இருக்கிறது.

காரணம், கம்ப்யூட்டரும் அதில் பயன்படுத்தப்படும்

'மில்க்ப்ரோ' மென்பொருளும்தான். தேவைப்படும் அனைத்து விவரங்களையும் விரல் நுனியில் பெற 'மில்க்ப்ரோ' மிகமிக உதவியாயிருப்பதால் இது சாத்தியமாகிறது.

இதன் செயலாளர் ஜெ. கோமதி உற்சாகமாகச் சொல்கிறார், "தினசரி இங்கு எண்ணூறு சாம்பிள்கள் சோதிக்கப்படுகின்றன. பதினோரு பேர் வேலை செய்கின்றனர். சுமார் நானூறு உறுப்பினர்களின் மாடுகள் மூலம் இரண்டாயிரத்து ஐந்நூறு லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. அத்தனையும் 'மிலக்ப்ரோ'வால் பதிவு செய்யப்படுகிறது. அதிக நேரம் உற்பத்தியைப் பெருக்கும் வழிகளில் செலவழிக்கப்பட்டு திருச்சி மாவட்டத்திலேயே எங்கள் சங்கம் சிறந்ததாக இரண்டு வருடங்களாக சாதனை செய்திருக்கிறது."

கரூர், குளித்தலை தாலுகாவின் குக்கிராமம் வடசேரியின் பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்திலும் இதே சாதனைதான். நானூறு பேர் உறுப்பினர்கள், எழுநூறு லிட்டர் பால் தனிசரி கொள்முதல்.

செயலர் கலைவாணி,



• ராஜாராம் கம்ப்யூட்டர்ஸில்...

கம்ப்யூட்டரில் பற்பல தகவல்களையும் பதிவு செய்து உறுப்பினர்களுக்கு உதவுவதோடு, சங்கத்தின் வரவு செலவுக் கணக்குகளையும் மானிட்டர் நுனியில் வைத்திருக்கிறார்.

இத்தனைக்கும் காரணம், புலிவலம் கிராமத்து 'ராஜாராம் கம்ப்யூட்டர்ஸ்' நிறுவனத்தின் ராம்குமார். அவர் கனகராஜன், கோவிந்த ராஜன், தண்டபாணி, செல்வி ஆகியோருடன் சேர்ந்து முயன்று உருவாக்கிய 'மில்க்ப்ரோ' ஸாஃப்ட்வேர் இந்த சாதனைகளைச் செய்திருக்கிறது. அக்கம் பக்கத்து கிராம மாணவ, மாணவிகளுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கும் இவர், தமிழில் உருவாக்கிய 'மில்க்ப்ரோ' தமிழ் நாட்டின் அனைத்து

• விருதுநகர் புலிவலம் பால் சொஸைட்டியினர்





• வடசேரி பால் சொஸைட்டி

சொஸைட்டிகளிலும் பயன்படுத்தப்பட்டு பால் உற்பத்தியில் தனி இடத்தைப் பெறும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார்.

பேட்டி, படங்கள்:

இருள்நீக்கியான்

மினி தொடர்



2

செங்கமலமும் கோதையும் ஒரே ஊர்க்காரர்கள். தூரத்து உறவு என்று கூடச் சொல்வாள் கோதை. தலைவரும் அவனும் ஒரு போராட்டத்தில் ஈடுபட்டு, அரிய வாய்ப்பாக ஒரே சிறையில் இருக்கும் போது நெருக்கமானார்கள். அதற்கு முன்னால் கிளைக் கழகத்தின் செயலாளன் என்கிற முறையில்தான் தலைவருக்கு அவன் அறிமுகமாயிருந்தான்.

ஊரே பற்றியெரிந்த ஒரு மொழிப் போராட்டம் அது. தலைவருக்கும் அவனுக்கும், இன்னும் வெகு சிலருக்கும் மட்டுமே, ஆறு மாதக் கடுங்காவல் என்று நீதி மன்றம் சொன்னது. இப்போது மாதிரி 'அப்பீல்', அது இது என்றெல்லாம் நழுவிக் கொள்ள விரும்பாத அரசியல்வாதிகள் அவர்கள். கூடிய வரை வழக்குரைஞர் வைத்துக் கொள்ளாமல், தாங்களே எதிர் வழக்காடுவார்கள். தண்டனையை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வார்கள்.

சிறை வாழ்க்கையில் படிப்பு, எழுத்து என்றே பொழுது போய்விடும். பலர் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டதே சிறையில்தான்

அடையாளங்கள்

சுப்ர. பாலன்

என்று கூடச் சொல்வார்கள்.

கணவரைச் சந்திப்பதற்காக வருகிற மனைவி என்கிற முறையில்தான் செங்கமலத்தை அவன் முதலில் பார்த்திருக்கிறான். தலைவரும் அவளும், அவனைப் பற்றியும் அந்தச் சந்திப்பின் போது பேசியிருக்கிறார்கள் என்பது, அவன் விடுதலையான பின்னர்தான் தெரிந்தது.

அவன் சட்டம் படித்தவன். சில காலம் கல்லூரியில் கூடத் தற்காலிகமாக ஆசிரியராக இருந்தவன். எப்படியோ அரசியலுக்கு அவன் ஈர்க்கப்பட்டான். அந்த நாட்களில், படிப்பும் துடிப்பும் மிகுந்த இளைஞர்கள், மொழியை மையமாகக் கொண்டு அரசியலுக்கு வந்தார்கள்.

அரசியலில் நேரடியாக அவன் ஈடுபட்டு ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகே, அவன் தலைவரைத் தனிப்படச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. தான் உண்டு, தன் வேலையுண்டு என்று கழகப் பணிகளில் ஈடுபட்டவன் அவன். ஆனால் அவனுடைய செயல்பாடுகள், துடிப்பான பேச்சு, நிர்வாக ஆற்றல் எல்லாவற்றையும் பற்றித் தலைவர் நன்றாய்த் தெரிந்து வைத்திருந்தார். அதில் அவருடைய அறிவாற்றலுக்கு இணையாக வேறு யாரையும் காட்ட முடியாது.

தலைவர் கவனித்ததன் விளைவாக, போராட்டத்தில் அவனுக்கு முக்கியமான பொறுப்புத் தரப்பட்டது. பரிசாக 'ஆறு மாதம்' கிடைத்தது. சிறையிலிருந்த அவனைப் பார்ப்பதற்கு எப்போதாவது வருகிற தாயாரும் தம்பியும் மட்டும் உண்டு. மற்றபடி பெரிய உறவு வட்டம் ஏதும் அவனுக்கு இல்லை. அவனுடைய தந்தை ஒத்துழையாமை இயக்கத்தில் சிறை சென்றவர். அடிபட்டவர், தியாகிகளுக்கு நிலம், பணம் என்றெல்லாம் வந்தபோது கூட, அவர் அதற்கெல்லாம் விண்ணப்பிக்க மறுத்துவிட்டார். ஆகையால் அவருடைய மகனும் போராட்டம், சிறை என்று ஈடுபட்டது அவர்களுக்கு வியப்பளிக்கவில்லை.

சாத்தமங்கலம் கிராமத்தில், விடுதலையாகி வந்த அவனைக் கட்சிக்காரர்கள் வாண வேடிக்கையோடு வரவேற்றார்கள். ஒரு நாலைந்து நாட்களுக்கு அவனைப் பற்றியே எல்லோரும் ஊரில் பேசிக் கொண்டார்கள். தொடர்ந்து வந்த சட்டமன்றத் தேர்தலில் அவனைத்தான் நிறுத்த வேண்டும் என்று ஊர்க்கார இளவட்டங்கள் துடித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் பக்கத்துக் கிராமத்திலிருந்த ஒரு பெண்ணுக்கு அந்த வாய்ப்பைத் தந்து விட்டார்கள். அவனுக்கு அதைப் பற்றியெல்லாம் பிரமாதமான எதிர்பார்ப்பு இல்லை என்பதால் ஏமாற்றமும் இருக்கவில்லை.

அந்த நிலையில் தலைவர் அழைக்கிறார் என்று தகவல் வந்தது. எல்லோரும், அவனுக்கு வேறு ஒரு தொகுதியைத் தரத்தான் தலைவர் கூப்பிட்டிருக்கிறார் என்று எண்ணிக் கொண்டார்கள். ஆனால் அழைத்தது வேறு காரியத்துக்காக, என்பது தெரிய வந்தபோது கூசினான். செங்கமலம் சொல்லிக் கோதையைக் கரம் பற்றிய கதை இவ்வளவு தான்.

திருமணம் செய்து கொண்ட பிறகு அவனுக்கு ஒரு 'புருஷ லட்சணம்' அவசியமாகத் தேவைப் பட்டது. ஒரு சுமாரான வேலையாவது இல்லாதவனுக்கு, அவன் எவ்வளவுதான் படித்திருந்தாலும், சொத்து பத்து இருந்தாலும், பெண்ணைத் தரமுடியாது என்பதில் கோதையின் தந்தை மிகவும் கண்டிப்பாக இருந்தார். சீர்திருத்தக் கல்யாணம் என்பதும் அவருக்குக் கசப்பாக இருந்தது.

அந்த நாட்களில் தலைவரையே கட்சிக்காரர்கள்தான் மதிப்பார்கள். மற்றவர்கள் ஏகத்துக்கு அலட்சியம் பண்ணுவார்கள். அந்தக் கட்சி சட்டசபைத் தேர்தலில் கொஞ்சம் இடங்களைப் பிடிக்கிறவரை, இதுதான் நிலை. அப்புறம்தான் எல்லோரும் நிமிர்ந்து பார்த்தார்கள்.

கல்யாணத்துக்காக ஒரு வேலையைத் தேடித் தருகிற பொறுப்பைத் தலைவர் ஏற்றுக் கொண்டார். வேலை கிடைத்து விட்டதால், பதிவுத் திருமணத்துக்குக் கோதையின் அப்பாவைச் சம்மதிக்க வைப்பதும், சமரச ஏற்பாட்டில் சுலபமாயிற்று.

திருமணம் நடந்து முதன் முதலில் அவனும் கோதையும் தனிமையில் சந்தித்த போதுதான் அவள் கேட்டாள்,

"நான் ஒண்ணு சொல்லுவேன்... கேட்பீங்களா? தப்பா நெனச்சுப்பீங்கன்னா வேண்டாம்..."

இதைப் பலமுறை அவள் கேட்டதுண்டு. அந்த 'ஒண்ணு' என்ன என்பதை அவளுடைய கடைசி மூச்சு இருந்தவரை கேட்டதேயில்லை. அவனும் 'அது என்ன' என்று கேட்டுத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டியதுமில்லை.

திருமணமாகி நாற்பத்தைந்து வருடங்களாகியும் இது மாறாத கேள்வி; மறுமொழி பெறாமலே மௌனமாய்ப் புதையுண்டு போன கேள்வி!

பழைய நினைவுகளிலிருந்து மீள முயன்று அவன் தோற்றுப் போனான். ஆயினும் அப்படிப் பழைமையை நினைத்துப் பார்ப்பதும், மீள முயன்று தோற்றுப் போவதும் கூட அவனுக்குச் சந்தோஷமாக இருந்தது.

அப்படி ஒரு இனிமையான துணையைத் தன்னோடு இணைத்து வைத்தவர் என்ற முறையில், தலைவரின் துணைவியாரின் மீது அவனுக்கு அளவுகடந்த மதிப்பும் மரியாதையும் உண்டு. ஆனால் இன்று அவரே அழைத்தும், தொலைபேசியில் கூடப் பேச விரும்பாமல் மறுத்தது நாகரிகமில்லைதான்.

அவனை யாரும் எதிலும் கட்டாயப் படுத்த முடியாது. அவனே விரும்பி எடுக்கும் முடிவுகளையும் மற்றவர்களால் மாற்ற முடியாது. இந்த வகையில் அவன் தலைவருக்கே பல பிரச்னைகளில் சங்கடம் ஏற்படுத்தினான். ஒரு முறை கட்சியை விட்டுக் கூட விலகிப் போய்ச் சில மாதங்கள் ஒதுங்கியிருந்தான். அவன் சுதந்திரமானவன்!

திருமணமாகிச் சில வாரங்களுக்குப் பிறகு அவனையும் கோதையையும் குடும்பக் கோவிலுக்கு அழைத்துப் போகவேண்டும் என்று வந்தார் சச்சிதானந்தம். அவனுடைய நெருப்புப் பார்வையைச் சகித்துக் கொள்ள அவராலும் முடியவில்லை; அவனைக் குளிர்விக்க அந்தக் கோதையாலும் முடியவில்லை.

"இதையெல்லாம் என்னிடம் எதிர்பார்க்க வேண்டாம் என்று சொல்லித்தானே சம்மதம் தந்தேன்? இப்போது கட்டாயப் படுத்துகிற மாதிரி கேட்டால் நான் என்ன சொல்ல வேண்டும்? எந்த மொழியில் சொல்ல வேண்டும்?"

சச்சிதானந்தம் ஒரு கம்பீரமான மனிதர். செல்வம், செல்வாக்கு எல்லாவற்றிலும் அவருக்கு முன்னால் அவனால் நின்று பேசக் கூட முடியாது. இருந்தபோதிலும், பெண்ணைப் பெற்ற பாவம், குறுகிப் போய் அவர் வெளியே நடந்தார். கோதையைப் பெற்ற தாய் ரத்தினம்மாள் கண்ணீரும் விம்மலுமாய்க் கணவனைப் பின் தொடர்ந்து புறப்பட்டாள்.

கோதை — எதையும் சொல்லக் கூடிய திறன் இல்லாமல் அழுது கொண்டே தரையில் அமர்ந்திருந்தாள். எல்லோரும் சென்ற பின், அவன் கோதையின் அருகில் வந்து அமர்ந்தான். அவனுடைய பெற்றோர் வாங்கி வந்த சீர்ப்பொருள்கள் அவன் கண்களில் பட்டன. பழங்கள், தின்பண்டங்கள், ஊதாவும் வெள்ளையும் கலந்த நிறத்தில் ஜாதி மல்லிகைச்சரம்...

"அந்த காங்கிரஸ்காரருக்கு 'கிரிக்கெட்'ன்னு சொன்னாலே பிடிக்காது. சண்டைக்கு வருவார்..."

"அடடா! ஏன் அப்படி...?"

"அதுல இரண்டு அணிகள்தானே மோதும். மூன்றாவது அணிக்கு இடமில்லையே! அதனால்தான்!"

— சம்பத் குமாரி





''என்ன டார்லிங், இன்னைக்குச் செலவெல்லாம் நீ பண்றே?''
''நீங்க எழுதின லவ் லெட்டரை யெல்லாம் எடைக்குப் போட்டேன்!''
— எஸ். தமிழ்மணி

பூச்சரத்தை மட்டும் எடுத்து அவளுடைய கூந்தலில் அவனே சூட்டி விட்டான். அவளு டைய முகவாயைத் தன் பக்கம் திருப்பிக் கண்ணீரைத் துடைத்தான்.

"என்னால் இதுதான் முடியும் கோதை. எந்த நாளிலும் என்னை நான் மாற்றிக் கொள்ள முடியாது. அதற்காக உன்னுடைய உரிமைகளைத் தடை செய்யவோ, மறுக் கவோ மாட்டேன். எங்கள் தலைவர் பெண் களுக்கு இன்னும் கூடுதலான உரிமைகள் வேண்டும் என்றே போராடினார். வேண்டு மானால், நீ உன்னைப் பெற்றவர்களோடு கோவிலுக்கோ குளத்துக்கோ போய் வரவேண்டியதுதானே? என்னை அழைக் காதீர்கள் என்றுதானே நான் சொன்னேன்?" என்றான்.

அவனுக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைப்பது என்பது அவளுக்குப் புரியத்தான் இல்லை. கல்யாணமான பிறகு கணவனும் மனைவியுமாகச் சேர்ந்தேதான் கோவில் குளங்களுக்குப் போய் வர வேண்டும், என்கிற அடிப்படை உண்மை கூடத் தெரி யாதவனா தன் கணவன், என்று மனசுக்குள் மறுகினாள்.

அதுவரை அவனுடைய வீட்டில் வழி பாட்டுக்கு என்று எந்த அறையும் இருந்த தில்லை. அவனுக்கு நினைவு தெரிந்து மற்ற வீடுகளைப் போல் விதம் விதமான சாமி படங்கள் எதையும் அவன் கண்டதில்லை. ஊதுபத்திப் புகைபட்டுப் பழுப்பேறிய கண்ணாடிச் சட்டத்துக்குள் அவனைப் பெற்றவரின் படம் இருந்தது. இன்னொன்று, இராட்டையில் நூற்றுக் கொண்டு அமர்ந் திருக்கும் காந்திஜியின் படம்.

இந்த மாதிரிப் படங்கள் வழிபாடு எல்லா வற்றிலும் அந்தக் குடும்பத்துக்கே நம்பிக்கை யிருந்ததில்லை என்று அவனுடைய அம்மா சொல்லியிருக்கிறாள். இப்போது கோதைக் காக அவன் தன்னைக் கொஞ்சம் அந்நி யப்படுத்திக் கொண்டான்.

மறுநாள் காலையிலேயே கொத்தனாரை அழைத்து வந்தான். சுவரில் பதித்த மாதிரி ஒரு அலமாரியைக் கட்டித்தரச் சொன்னான்.

"இந்தா பாரு! ஒன்னோட விருப்பப்படி இதிலே என்னவாச்சும் செஞ்சுக்கோ. வெளக்கு வைப்பியோ, சாமியை வைப்பியோ எனக்குக் கவலையில்லை. ஆனா எதுவும் ஏங்கிட்ட வரக் கூடாது. அவ்வளவுதான்."

அன்றைய மனநிலையில் கோதைக்கு அதுவே போதுமானதாயிருந்தது. அவசரம் அவசரமாகப் பெட்டியைத் திறந்து, தாய் வீட்டுச் சீதனமாய்க் கொண்டு வந்திருந்த வெண்கல விளக்கையும், இரண்டு மூன்று சுவாமி படங்களையும் அந்த அலமாரியில் வைத்தாள். தோட்டத்திலிருந்து சில முல்லை அரும்புகளைப் பறித்துத் தொடுத்துச் சர மாக்கித் தானும் தலையில் சூடிக் கொண்டு, சுவாமி படங்களுக்கும், விளக்கின் கொண் டையிலும் கொஞ்சம் அணிவித்தாள்.

''எனக்கு இதுவே போதுங்க'' என்று சொல்லிக் கொண்டே அவனை விழுந்து சேவிக்க முயன்றாள். அவன் தடுத்து நிறுத்தி னான். 'இதுவும் எனக்குக் கட்டோடு பிடிக் காது... யாருக்கு யார் விழுந்து வணங்குவது? வெளி வேஷங்கள் எல்லாம் இல்லாமல் மனசுக்குள் நிஜமான அன்பு இருந்தால் அது மட்டுமே போதும்..." என்றான்.

அவனுடைய காலங்களில் அரசியல் மேடைகளில் தலைவர்களை விழுந்து வணங்குகிற கேவலமான வழக்கம், நடை முறைக்கு வந்துவிடவில்லை. ஆனால் அந்த வழக்கம் பிறகு கொஞ்சங் கொஞ்சமாக வேரோடிப்போய் விட்டாலும், அவனால் அதை ஜீரணித்துக் கொள்ளவும் முடிய வில்லை.

அவனைப் பொறுத்தவரை அவன் மாறாதவனாகவே இருந்தான். அதனால் விளைந்த இழப்புக்களும், வீணான பிரச் னைகளும் அவனை வெகுவாய் அலைக் கழித்ததுண்டு.

(தொடரும்)

ஸ்டூடண்ட் நம்பர்-1



சட்டக்கல்லூரியில் பாடமே நடக்கக் கூடாது. யாரும் புத்தகத்தையே திறந்துவிடக் கூடாது என்று மிரட்டும் ஒரு மாணவனுக்குக் கட்டுப்பட்டு ஒரு கல்லூரி வருடக் கணக்கில் இயங்கிக் கொண்டு இருக்கிறதாம்! யாரங்கே... இந்த திரைக் காவியத்தின் நாமத்தை 'அபத்தம் நம்பர் 1' என்று உடனே மாற்றுங்கள்!

சட்டம் படித்து தன் கனவை நனவாக்க மறுக்கும் மகனை வெறுக்கிறார் தந்தை. சந்தர்ப்பவசத்தால் குற்றவாளி ஆகிவிடும் மகன், தந்தையைப் பரவசப்படுத்த பரோலில் படித்து, வக்கீலாகி, ஒரு சதியில் மாட்டிக் கொண்டுவிடும் தந்தையை மீட்கிறார்!

கோனார் நோட்ஸை சத்தமாக வாசிக்கும் மாணவனைப் போல், வசனங்களை சலனமில்லாமல் ஒப்பிக்கும் ஹீரோ சிபியை, திரைக்கலை கற்பிக்கும் குருகுலத்திற்கு அனுப்பி ப்ரீ - கேஜியில் சேருங்கள்!

"வாழ்க்கையில் நமக்கு முக்கியமானவர்கள் ஃபாதர் - இன் - லா, மதர் - இன் - லா... இதிலிருந்தே தெரியவில்லை, வாழ்க்கைக்கு லா எவ்வளவு அவசியம் என்று!"... இப்படி புல்லரிக்க வைக்கின்ற வசனங்கள் எழுதிய வசனகர்த்தாவை வைக்கோல் போரில் முக்குங்கள்!

கேள்வித்தாள்களை லீக் - அவுட் செய்யும் 'லீக்கேஜ் - லீடர்' என்ற அற்புத கதாபாத்திரத்தைச் சிருஷ்டித்த கதையமைப்பாளருக்கு 'பிரம்ம விபூஷன்' என்ற பட்டத்தை யாம் அளிக்கிறோம்!

ரஷ்யாவை அங்குலம் அங்குலமாக காட்டிய ஒளிப்பதிவாளருக்கு, ரஷ்ய டூரிஸம் பிரமோஷன் அவார்டாக பத்தாயிரம் ரூபிள்கள் பரிசளிக்கிறோம்!

மகனுக்கு ஒழுங்காக பிரைவேட் டியூஷன் எடுக்காமல் "என்னை ஆதரித்தது போல் என் மகனை ஆதரியுங்கள்!" என்று தேர்தல் பாணியில் வேண்டுகோள் விடுக்கும் சத்யராஜுக்கு எமது வருத்தத்தையும், படத்தைப் பார்க்கப்போன இந்நாட்டு முடிசூடா மன்னர்களுக்கு, எமது அனுதாபத்தையும் தண்டோரா போட்டுத் தெரிவியுங்கள்!

— கிருஷ்ணா சிதம்பரம்

• ஜஸ்ட் பாஸ்

அக்னிசர்மா பக்கம்



மேஷம் : வேலையில் ஆயிரத்தெட்டு டென்ஷன், போதும்டா சாமின்னு இருந்தீங்க இல்லையா? இப்ப அதுக்கெல்லாம் டாட்டா காட்டிடலாம். தடைகள், குறுக்கீடுகள் எல்லாம் விலகும். முக்கியமானவங்களோட நட்பு கிடைக்கப் போகுது. அவங்களால உங்களுக்கு நல்லது நடக்க வாய்ப்பிருக்கு. பார்ட்னர்ஷிப்ல தொழில் பண்றவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. ஏற்றுமதி இறக்குமதி, ஆடை ஆபரணம், நகை நட்டு துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு எதிர்பாராத ஆதாயம் இருக்கு. கலைத் துறையைச் சேர்ந்தவங்களோட பெயர், புகழ் அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் மதிப்பு அந்தஸ்து உயரப் போகுது.



ரிஷபம் : எல்லாக் காரிய மும் இப்படி தடைபடுதேன்னு வருத்தப்பட்டுட்டு இருந்தீங்க இல்லையா? இனிமேல் அந்த வருத்தத்தை ஓரங்கட்டி டுங்க. எல்லாம் நல்லபடியா முடி யப் போகுது. அலுவலகத்தில மேலதிகாரிங்க பாராட்டு மழையில நனையப் போறீங்க. புதிய முயற்சி கைகூடும். இதுவரை இழுபறியா இருந்து வந்த பதவி உயர்வு இப்போ தேடி வரும். குடும்பத்துல ஒற்றுமை நிலவும். சின்னச் சின்னப் பிரச்னைகள் தலைதூக்கிட்டுப் போனாலும் அதுக்காக உடைஞ்சுப் போயிட வேண்டாம். சொத்து விவகாரங்கள்ல அனுகூலமான திருப்பம் வரும்.



மிதுனம் : 'எங்க போனாலும் எப்படியோ ஒரு எதிர்ப்பு முளைச்சிடுதே'ன்னு கவலைப்பட்டீங்க இல்லையா? இந்த வாரம் எதிர்ப்புகள் மறையும். பண நடமாட்டம் தாராளமா இருக்கும். அலுவலகத்தில் புதிய பொறுப்பு தேடி வரப் போகுது. புதிய முயற்சிகள்ல ஈடுபட இது நல்ல நேரம். கூட்டாகத் தொழில் பண்றவங்களுக்கு நன்மை உண்டு. குடும்பத்துல சுபகாரியம் நடக்க சந்தர்ப்பம் உண்டு. சிலர் புது வீடு, வாங்க, கட்ட வாய்ப்பிருக்கு. பெண்களுக்கு உற்சாகமான மன நிலை அமையும்.



கடகம் : 'இப்படிப் பின்னால இருந்து குத்திட்டாங்களே'ன்னு வருத்தப்பட்டீங்க, இல்லையா, உங்க எதிரிகள் இனி ஓடிப் போயிடுவாங்க. மறைமுக, நேர்முக எதிர்ப்புகள் மாயமாகும். அலுவலகத்துல ஒற்றுமை நிலவும். புதிய முயற்சிகள் கைகூடும். வேலை சம்பந்தமா வெளியூர் போற வாய்ப்பு வரலாம். பண நெருக்கடி விலகும். மதிப்பு செல்வாக்கு உயரப் போகுது. சட்டம், காவல், ராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ், பாராட்டு உண்டு. வழக்கு விவகாரங்கள் உங்களுக்குச் சாதகமா அமையும்.

நடக்குமென்பார்; நடக்கும்!





சிம்மம் : சுப காரிய நிகழ்ச்சி தாமதமாகி போயிட்டிருக்கேன்னு கவலைப்பட்டீங்க இல்லையா? இந்த வாரம் அதுக்கான முயற்சிகள் தடபுடலா இருக்கும். உறவினர்கள் வருகை, மக்களால் மகிழ்ச்சி, விருந்து உபச்சாரம்னு ஜாலியா பொழுதைக் கழிக்கப் போறீங்க. எதிர்ப்புகள் விலகும். அலுவலகத்தில் கூட வேலை பார்க்கறவங்க கிட்ட கொஞ்சம் அனுசரிச்சுப் பேசறது நல்லது. வீண் பிரச்னைகள் வரலாம். வாரப் பின்பகுதியில அனுகூலமான திருப்பம் காத்திருக்கு.

கன்னி : எல்லாக் காரியமும் தடைபட்டுப் போகுதேன்னு நினைச்சீங்க இல்லியா? இந்த வாரம் தடையெல்லாம் ஜூட். திட்டமிட்டபடி எல்லாக் காரியமும் நல்லபடியா முடியும். பண வசதி தாராளமா இருக்கும். அலுவலகத்தில் எல்லோருடைய ஒத்துழைப்பும் கிடைக்கும். எதிர்ப்புகள் மறையும். தாமதமடைந்த பதவி உயர்வு, இடமாற்றம் ஆகியவை, இப்ப வந்து சேரும். குடும்பத்துல கணவன் மனைவி உறவு நிலை



மார்ச் 5 முதல் 11 வரை

இனிமையா இருக்கும். சுபகாரிய முயற்சிகள் கைகூடும். புது வீடு கட்ட, வாங்க வாய்ப்பிருக்கு. பெண்களுக்கு இது உற்சாகமான வாரம்.

துலாம் : 'ஒண்ணுமே நடக்க மாட்டேங்குதே'ன்னு டென்ஷன் ஆனீங்க இல்லையா? இந்த வாரம் எல்லாம் சட்டுனு நடக்கப் போகுது. எடுத்த காரியமெல்லாம் வெற்றி தான். பண வசதி தாராளமா இருக்கும். அலுவலகத்தில் எல்லோருடைய ஒத்துழைப்பும் கிடைக்கும். மேலதிகாரிங்க பாராட்டு உண்டு. குடும்பத்துல மகிழ்ச்சி கரை புரளும். பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம். உற்சாகம், ஜாலின்னு என்ஜாய் பண்ண போறாங்க, வெளியூர்ப் வெளிநாடு செல்லும் முயற்சிகள் கைகூடும்.



விருச்சிகம் : இந்த வாரம் எடுத்த காரியத்தைத் திட்டமிட்டபடி நடத்தி முடிச்சிடுவீங்க. அலுவலகத்தில் புதிய திருப்பம் வரும். எதிர்ப்புகள் விலகும். புதிய பொறுப்புகள் வந்து சேரும். சங்கீதம், சினிமா, சிற்பம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்க முன்னணிக்கு உயருவாங்க. குருபலம் நிறைந்து இருப்பதால குடும்பத்துல பொன், பொருள், ஆடை, ஆபரணச் சேர்க்கை நிகழும்.

தனுசு : இந்த வாரம் புதியவங்க அறிமுகம் ஆவாங்க. அவங்களால நன்மை

வருகிறார் அக்னி சர்மா!

கொரட்டூர் வாசகர்களே...

உங்கள் 'கல்கி'யை வாழ்த்திப் பேசுகிறார்

அக்னி சர்மா

நாள் :

6.3.2003 மாலை 6 மணி

இடம் :

பக்தவத்சலம் வித்யாஸ்ரமம்
14, பெரியார் நகர், கொரட்டூர்,
சென்னை - 80

அனைவரும் வருக!



கிடைக்கும். பண நடமாட்டம் தாராளமா இருக்கும். உங்க புத்திசாலித்தனம், திறமை எல்லாம் இந்த வாரம் வெளிப் படப் போகுது. போட்டி, பொறாமை யாவும் மறையும். புதிய வேலை முயற்சிகள்ல தாராளமா இறங்கலாம். குடும்பத்துல ஒற்றுமை அமைதி நிலவும். மக்கள் நலம் சீரா இருக்கும். புது வீடு வாங்க, கட்ட சிலருக்கு வாய்ப்பிருக்கு.

மகரம் : குருபலம் ஸ்ட்ராங்கா இருக்கறதால திருமணம் போன்ற சுபகாரிய முயற்சிகள் நடக்க வாய்ப்பிருக்கு. கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வழி பிறக்கப் போகுது. அலுவலகத்தில் எதிர்ப்புகள் மறையும். உயரதிகாரிகள் பாராட்டற மாதிரி உங்க செயல்பாடு இருக்கும். சிலருக்குப் புதிய பொறுப்புகள், பதவி உயர்வு வந்து சேரும். வழக்கு விவகாரங்கள்ல உங்களுக்குச் சாதகமான தீர்ப்பு வரப் போகுது. பண நடமாட்டம் தாராளமா இருக்கும்.



கும்பம் : இதுவரை தாமதமாகி வந்த காரியங்கள் எல்லாம் இப்ப சட்டுனு முடியும். 'முறைச்சுட்டு'ப் போன உறவினர்கள், நண்பர்கள் எல்லாரும் இப்ப தேடி வருவாங்க. வழக்கு விவகாரங்கள்ல நல்ல திருப்பம் வரும். அலுவலகத்தில் இதுவரை இருந்து வந்த குழப்பங்கள் மாயமாகும். கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. குடும்பத்துல சுபகாரிய முயற்சிகள் நடக்க வாய்ப்பு கூடி வரும். முன்ன பின்ன தெரியாதவங்க கிட்ட அதிகமா வாயைக் கொடுக்க வேண்டாம்.



மீனம் : இந்த வாரம் மனசுல துணிச்சல், தன்னம்பிக்கை அதிகரிக்கும். பண வசதி தாராளமா இருக்கும். இதுவரை இருந்து வந்த குழப்பம், எதிர்ப்புகள் யாவும் மறையும். அலுவலகத்தில் மதிப்பு அந்தஸ்து உயரும். எவ்வளவு சிக்கலான வேலையையும் உங்களோட சாதுர்யத்தாலும் சாமர்த்தியத்தாலும் வெற்றிகரமா செய்து முடிப்பீங்க. வர வேண்டிய பணம் வந்து சேரும். கடன் தொல்லைகள் மறையும். குடும்பத்துல பிரிந்தவங்க ஒன்று சேருவாங்க. இதனால மகிழ்ச்சி தாண்டவமாடும்.



மஹாலக்ஷ்மி முதியோர் இல்லம்
பிராமணர்களுக்கு மட்டும்

கனிவான சேவை, உயர்தர உணவு, ரூமுக்கு ரூம் channel music, காற்றோட்டமான இடம், மற்றும் மருத்துவ வசதியுடன் கூடிய இல்லத்தில் சேர வரவேற்கப்படுகிறார்கள்.

விடுமுறையில் வெளியூர் செல்பவர்கள் தங்கள் வயதான பெற்றோர்கள், உறவினர்களை இங்கு விட்டுச் செல்லலாம்.

மஹாலக்ஷ்மி முதியோர் இல்லம்
(தனி T.V. மற்றும் A/c வசதி உண்டு)
Only for Brahmins
No.14, 24th Street, (Near water Tank)
நங்கநல்லூர் சென்னை - 600 061.
Ph: 2311047, 2346986 Cell: 98410 - 35836

தனியாக Family Room (suit) கள் கிடைக்கும்


மாதாந்திர திருக்கோயில் தரிசனம் நடைபெறுகிறது

ஆஹா நெய் வாசம் மூக்கை துளைக்குதே



SRI DHANALAKSHMI & CO
18, M.G. PUDUR 1st STREET, TIRUPUR-641 604.
PHONE : 0421-2213557, CELL : 98430 91557

CHALLENGE THE CALCULATOR!
BALANCE THE BRAIN!!



ALOHA
ABACUS LEARNING OF HIGHER ARITHMETIC
AN INTERNATIONAL ABACUS TRAINING PROGRAM FROM ALOHA MALAYSIA

Without Calculator, Abacus, Pen and paper, your child can Solve

123 + 456 + 13 - 48 + 534 = ?
12 x 36 - 17 x 15 = ?
6288 + 24 - 13 x 17 = ?
in 5 seconds.

Your child shows growth in academics

Your child improves concentration

Computes faster than a computer

The latest ALOHA training, for developing the whole brain at the right age - 5 to 13 years.

Would you like to become an ALOHA Franchisee? Call

K.K. ACADEMY (P) LTD.,
32, 1st Main Road, R.A. Puram, Chennai - 600 028. Phone : 24613262, 24616268 Fax : 52108090
E-mail : kkacademy@vsnl.net Web : www.alohama.com

For Registration At Chennai : Adyar : 9841284012, Anna Nagar (E) : 9841012591, Anna Nagar (W) : 9841284002, Avadi : 9841149527, 26555489, Ayanavaram : 9840225568, 26444236 Chetpet : 28202991 Egmore : 28202989, Gopalapuram : 9840098216, Mylapore : 9841044889, Nungambakkam : 28202988, R.A.Puram : 24613262 / 6268, T.Nagar : 9841030755, Thiruvanmiyur : 9841006059, Kilpauk : 26443090. **Other City :** Coimbatore : 0422-2543173, Rajapalayam : 9842156489 **Other States :** Bangalore (080) : Indira Nagar : 5449534, Richmond circle : 9845124425, Rajaji Nagar : 5449668 Jaya Nagar : 5320337 Indira Nagar : 9845309396 Koramangala, Kammannahalli : 9845124425 , Hydrabad : 040-7001354

Centers coming shortly at : Chennai : Adambakkam, Tambaram, Shenoy Nagar, Mugappair, K.K.Nagar, Ashok Nagar, Perambur, Chrompet, Out station : Trichy, Madurai, Cochin, Trivandrum

ஜானி தேனீ!

சில வருடங்களுக்கு முன்னால், ஆடிட்டராக வேண்டும் என்று படித்துக் கொண்டே, 'இளந் தென்றல்', 'வேலை வாய்ப்புச் செய்திகள்' போன்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்தளித்துக் கொண்டிருந்த இளம்பெண்தான் அவர்.. இன்றைக்கு பெரிய நிறுவனங்களுக்கும் அரசுக்கும் சொந்தமாக டீ.வி சானல் உருவாக்கித் தருமளவுக்கு உயர்ந்திருக்கிறார். வெற்றிச் சிகரங்களைத் தொட எத்தனை தூரம் பறக்க வேண்டியிருந்தது...? ஜானகி ரவிச்சந்திரனே சொல்கிறார்.

"எங்கக் குடும்பம் தன்னம்பிக்கைக்கும் கல்விக்கும் முக்கியத்துவம் அளித்த குடும்பம். எனது தந்தை ராமதாஸ் ராணுவக் காப்டனா இருந்தவர். நான்தான் கடைக்குட்டி. 'ஏழாவது பொண்ணுன்னா, எரவானமெல்லாம் தங்கம்'னு 'எங்க பாட்டி என்னைக் கொஞ்சுவாங்களாம்.

அப்பா ஆர்மியிலேயிருந்து ஓய்வு பெற்றதும், பிசினெஸ் பண்ண ஆரம்பிச்சாரு. அப்பாவுக்கு எப்போதுமே நான்தான் ரைட்ஹாண்ட்! எட்டாம் கிளாஸ் படிக்கும்போதே, வீட்டுப் பாடம் பண்ணிக்கிட்டே, சைடுலே வியாபாரத்தையும் கவனிச்சிப்பேன்.

"ஜானகியைப் பாருங்கடா! படிக்கவும் செய்யறா... பொறுப்பா கடையையும் கவனிச்சுக்கறா... தேனீப் பூச்சி மாதிரி எப்பவும் ஓட்டம்தான்"'னு டீச்சர்ஸே பாராட்ட ஆரம்பிக்கவும், கிளாஸ்லே என்னோட நிக்நேம் என்ன தெரியுமா...? 'ஜானி... தேனீ!'

• ஜானகி ரவிச்சந்திரன்

மூன்று அக்காக்களுக்கு திருமணம் பண்ணி வைச்ச நிலைமையில், தந்தை ஒருநாள் மாரடைப்புலே செத்துப் போயிட்டார். ஃபைனான்ஸ் வியாபாரமாச்சே! கொடுக்க வேண்டியவங்க தராம ஏமாத்திட்டாங்க... பணம் கட்டினவங்க நெரிக்க ஆரம்பிச்சுட்டாங்க. மனிதர்களைப் பற்றிப் புரிந்துக்கொள்ள ஆரம்பித்தேன்.


ஏதாவது செஞ்சாகணும்னு வைராக்கியம் பிறந்தது. ஏர் ஹோஸ்டஸ் வேலைக்கு எழுதிப் போட்டேன். பரீட்சை எழுதி, இன்டர்வியூவிலேயும் செலக்ட் ஆகி, சேரப் போகிற சமயம், 'இதெல்லாம் நம்ப குடும்பத்துக்கு சரிப்படாது'னு மறுத்துட்டாங்க!

அப்பாயின்ட்மென்ட் கடிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு ரொம்ப யோசித்தேன்.

"சரி... என்னைப் பறக்க விடாமப் பண்ணிட்டீங்கல்ல... நான் அதைவிட உயரத்தில் பறப்பேன்'னு உறுதி எடுத்துக்கிட்டேன். ஜானகி சபதம்னு வைச்சுக்கோங்களேன்.

இதற்கு நடுவே என்னுடைய தாய் மாமா, தஞ்சைவாணனைப் பார்க்க, தூர்தர்ஷன் போயிருந்தேன். அவருடைய ஊக்குவிப்பால் தூர்தர்ஷன்





* 'மன டீ.வி.' ஸ்டுடியோ




* கணவருடன்



நிகழ்ச்சிகளைச் செய்ய ஆரம்பித்தேன். 'உண்ணும் உணவாகும் வெண் கொற்றக் குடைகள்'னு காளான் பற்றி அப்போதே நிகழ்ச்சி செய்திருக்கிறேன்.

பெண் தொழில் முனைவர் பற்றியச் செய்திப் படம் தயாரிக்க, இந்தியன் வங்கி அதிகாரியைப் பார்க்கப் போயிருந்தபோது, எனக்குள் இருந்த தொழில் ஆர்வம் விழித்துக் கொண்டது. நானும் மனு போட்டேன்.

ஆனால் இன்டர்வியூவில் "உங்களுக்கு இருபத்து மூணு வயசு. ஐ.சி.டபிள்யூ ஏ படிக்கிறீங்க. டீ.விலே வேறே இருக்கீங்க. உங்களுக்கு வங்கி செய்யற செலவு வீணாகப் போயிடாதா?" என்று கேட்டார்கள்."



"பரவாயில்லை ஸார்... நீங்கள் தேர்ந்தெடுத்தாலும், இல்லாவிட்டாலும் நான் தொழிலதிபராக உருவாகத்தான் போகிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியே வந்தேன்.

இருபத்து மூன்று வயது... உற்ற நண்பரான தந்தை இல்லை. ஏதாவது செய்து சாதிக்க வேண்டும் என்ற கனல் உள்ளுக்குள் பற்றி எரிய... "கடவுளே என் திறமைகளை உணர வை. எனக்கு வழிகாட்டு" நான் மனம் உருக பிரார்த்தனை செய்தேன்.

பிரார்த்தனைக்கு அன்றே பதில் கிடைத்தது. அப்போ 'லேடீஸ் ஹாஸ்டல்' போன்ற தனியார் தொடர்கள் பிரபலமாயிட்டிருந்த சமயம். தனியார் சேனல்களுக்கு அரசு அனுமதி அளித்துக் கொண்டிருந்தது. செவன்த் சேனல், ஏக்நாத் வீடியோஸ் தவிர, அதிகம் பேர் இல்லை.



"தூக்கமே வர மாட்டேங்குது டாக்டர்!"
"எப்ப இருந்து?"
"வி.ஆர்.எஸ். கிடைச்சதிலிருந்துதான்!"
- இரா. புதுப்பட்டி ஜி.ஆர். விஜய்

என்னவோ எனக்குள் சின்னதாக ஒரு பரபரப்பு!

"மாமா... இந்த ஒளிபரப்புக் கருவிகளுக்கெல்லாம் நல்ல டிமாண்ட் இருக்கும் போலிருக்கே. நான் இது போல் ஒரு ஸ்டூடியோ அமைக்கட்டுமா?"னு கேட்டேன்.

"ரொம்ப நல்ல ஐடியா ஜானகி... உன் ஸ்டூடியோவிலே என்னையும் ஓய்வு பெற்றதும் வேலைக்குச் சேர்த்துக்கோ" என்றார் சிரித்துக் கொண்டே. அடுப்பங்கரையில் பொழுதைக் கழிப்பதில் விருப்பம் உள்ள பெண்களுக்கு மத்தியில் முன்னேறத் துடிக்கும் என் போன்ற பெண்களைக் கண்டால் அவர் மிகவும் உற்சாகப்படுத்துவார்.

அந்தச் சமயத்தில் 'சோனி'தான் டாப்புலே இருந்தது. அங்கே பிராந்திய விற்பனை அதிகாரியாக இருந்த ரவிச்சந்திரனைச் சந்திச்சேன்.

தன்னுடைய மனைவி எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று கற்பனை செய்தாரோ அதன் மொத்த உருவமாக நான் போய் நிற்கவும் அவருக்கு என் மீது மிகப் பெரிய மதிப்பு ஏற்பட்டது. வங்கிக்கும் சோனிக்கும் அலைந்ததில், ரவிச்சந்திரன் இனிய நண்பராகிவிட்டார். இரண்டு பேருக்கும் ஒரே அலைவரிசையில் கனவுகள் இருந்ததால், இரு வீட்டார் சம்மதத்துடன் கல்யாணம் நடந்தது. இதற்குள் நான் டாக்குமெண்ட்ரி நிகழ்ச்சிகளைத் தயாரிக்க ஆரம்பித்திருந்தேன். ரவிச்சந்திரன், வேலையை ராஜினாமா செய்துவிடவே, இருவரும் எங்களுடைய கனவுகளை நனவாக்க உழைக்க ஆரம்பித்தோம்.

இரண்டு பேருமே 'டெலிஸ்க்ரீன்ஸ்' நிறுவனமே கதி என்று கிடந்தோம். யாரோ ஒருவர் ஆர்டரை ரத்து செய்ததில், முதல் விற்பனை முயற்சியிலேயே மூன்றரை லட்சம் நஷ்டம்! முதல் வியாபாரமே வெற்றி அடைஞ்சிருந்தா மிதப்பு அல்லவா வந்திருக்கும்!

அந்தக் கால கட்டத்தில் ஜுராசிக் பார்க்', 'காட்ஸில்லா' மாதிரியான அனிமேஷன் கிராபிக்ஸ் படங்கள் வர ஆரம்பிச்சதும், 'டாக்ட்'னு ஒரு பயிற்சிப்பள்ளி ஆரம்பிச்சோம். (டெலிஸ்க்ரீன் அகாதமி ஆஃப் க்ரியேடிவ் டெக்னாலஜி) ஓர் இளைஞர் கேமிராவை இயக்குவதிலிருந்து கடைசிக் கட்டமான ஒளிபரப்புவரை, கற்றுக் கொண்டு முழுமையான தொழில் நுட்பக் கலைஞனாக வெளியே போக முடியும். இன்றைக்கு சானல்களில் வேலை செய்யும் டெக்னீஷியன்களில் பலர், டாக்டில் உருவான மாணவர்கள்தாம்!

அடுத்ததாக எங்கள் நிறுவனத்தின் வெற்றிப் படிகளில் மற்றுமொரு மைல் கல்லாக அமையும் சிறந்த வாய்ப்பு கிடைத்தது. இந்தியாவில் அரசியல் கட்சிகளுக்கு என டீவி சானல்கள் இருக்கின்றன. ஆனால் முதன்முதலாக, ஆந்திர அரசு 'மன டீவி' என்ற பெயரில் பிரத்யேகமாக ஒரு சானலை ஒளிபரப்பி வருகிறது. அதற்கு ஸ்டுடியோ அமைக்க, ஆந்திர அரசிடமிருந்து எங்களைத் தேர்ந்தெடுத்திருப்பதாகச் செய்தி வந்ததும், எங்கள் கடுமையான உழைப்புக்குக் கிடைத்த பரிசாக நினைத்து மகிழ்ந்தோம்.

'இஸ்ரோ' அமைப்பின் பரிந்துரையின்படி 'டெலிஸ்கிரீன்ஸ்' நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டது என்பதை அறிந்தபோது இன்னும் பெருமையாக இருந்தது. 'மன டீவி'க்காக ஸ்டுடியோ அமைக்கும் எங்கள் வேலைகள் முழு வீச்சில் நடந்து கொண்டிருப்பதால், நான் சென்னைக்கும், ஹைதராபாத்துக்குமாகப் பறந்து கொண்டிருக்கிறேன்.

தங்களுக்கும் சிறகுகள் உண்டு என்பதை உணராமலேயே முடமாகிப் போகும் பெண்களுக்கு மத்தியில், 'பற... உன்னால் முடியும்' என்று சொல்லி வளர்த்த என் தாய்க்கும் ஊக்கமூட்டி துணை நிற்கும் கணவருக்கும் நன்றி சொல்ல ஒரு ஜன்மம் போதாது. சிநேகா, ஸ்வேதா என்று இரண்டு பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் நான் பறக்கச் சொல்லித் தருகிறேன்..."

பேட்டி: அனு
படம்: யோகா

ஸ்ரீ தேசிகன் முதியோர் இல்லம்

அன்பான உபசரிப்பு, தரமான உணவு, மருத்துவ வசதியுடன் கூடிய பிராமணர்களுக்கான முதியோர் இல்லத்தில் சேர வரவேற்கப்படுகிறார்கள்.

நடக்க இயலாதவர்கள், படுக்கையில் இருப்பவர்களுக்கு அட்டெண்டர் வசதி உண்டு.

பெற்றோர்கள் நினைவு நாள், குழந்தைகள் பிறந்த நாள் மற்றும் திருமண நாட்களை எங்களுடன் சேர்ந்து கொண்டாடுங்கள். விடுமுறையில் வெளியூர் செல்பவர்கள் தங்கள் வயதான பெற்றோர்களை இங்கு விட்டுச் செல்லலாம்.

ஸ்ரீ தேசிகன் முதியோர் இல்லம்

1/16 - தாய் மூகாம்பிகை தெரு
ஜானகி நகர் (கேசவர்த்தினி பஸ் ஸ்டாப்பிங் அருகில்) வளசரவாக்கம்,
சென்னை - 87. ☎போன்: 24867573

THE MATRIMONIAL MAGAZINE

(Reg. with news paper of India - 2002)

மணமகன்/மகள் தேவை
இலவச விளம்பரம்

அகில இந்திய ஆங்கில மாத இதழ் தி மேட்ரிமோனியல் மேகஸினில் பிரசுரிக்கப்படும்.
6 மாத சந்தா ரூ.120/- செலுத்தியவர்களுக்கு 2 முறையும்,
ஆண்டு சந்தா ரூ.240/- செலுத்தியவர்களுக்கு 6 முறையும், மாத இதழ் அனுப்புவதுடன் இலவசமாக பிரசுரிக்கப்படும். விளம்பரம் 35 வார்த்தைகளுக்குள் அமைய வேண்டும்.

VARI PUBLICATIONS

V.A.Raman Iyengar, *Proprietor,*
Post Box 9536-201 KHB Colony,
4th 'A' Corss, 17E Main, 5th Block,
Koramangala, Bangalore - 560 095.
Phone : 080-5538660

விற்பனையில்!

கோபுர தரிசனம்

மாத இதழ்!

மார்ச் 2003 இதழில்.....

- ★ அட்டையில் காஞ்சி அஷ்டபுஜத்தான் வண்ணப்படம்
- ★ எட்டுக் கரங்களுடன் ஓர் எம்பெருமான்
- ★ 'ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ்' வழங்கிய செவிக்குணவு தந்த செந்தமிழ் விழாக்கள்!
- ★ எமனிடம் வாதாடிய சாவித்திரி
- ★ ஸ்ரீ பூர்ணாதேவி மஹாயந்த்ரம்
- ★ ஸ்ரீ காடந்தேத்தி ஆண்டவன், பங்குனி உத்திர திருக்கல்யாண உத்ஸவம் கட்டுரைகள், இராமேஸ்வரம் தை அமாவாஸை, வஸ்த்ர தான, அன்னதான வண்ணப்படங்கள்!

மற்றும்

பகவான் பாபா, ஸ்ரீராமபக்த ஹனுமான், சீல(ர்) புராணம், சௌபாக்யம் தரும் யந்த்ரங்கள் தொடர்கள், ராசிபலன், மாதம் ஒரு மந்திரம்

ஆன்மீகப் புதையல் போட்டி! வெள்ளி நாணயங்கள் பரிசு!

- ✧ தனி இதழ் ரூ.12 ✧ ஆண்டு சந்தா ரூ.150
- ✧ ஆயுள் சந்தா ரூ.1000
- ✧ வெளிநாடுகளுக்கு ஓராண்டு சந்தா ரூ. 1000

உங்கள் மன அமைதிக்கு படியுங்கள்

கோபுர தரிசனம்

இந்த இதழுடன் 'ஸ்ரீகிருஷ்ண மங்களம்' புத்தகம் இலவசம்

விபரங்களுக்கு :

ஸ்ரீராம் பப்ளிகேஷன்ஸ்

M-11/F-4, Ragam Apts., I மெயின் ரோடு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை - 600 041.
☎ : (044) 2490 06 03, 2490 03 03



* கண்கவர் காகிதக் 'கவர்'கள்





நம்பித்தான் ஆக வேண்டும்! ஆண் வாசனைக்கு நிரந்தரத் தடா அமலில் இருக்கும் சென்னை நகர மகளிர்க் கல்லூரிகளில், நுங்கம்பாக்கம் எம்.ஓ.பி. வைஷ்ணவாவுக்குத்தான் முதலிடம். அங்கே எப்படி இத்தனை ஆண்கள்! அதுவும் ரஃப் அண்ட் டஃப் காஸ்ட்யூம்களில், ராயல் ஹேர் கட்டை ஸ்டைலாகக் கோதியபடி, அலைமோதும் இளைஞர்கள். அவர்களுக்குப் போட்டியாக ஜீன்ஸ், டீ ஷர்ட்ஸ், பாலோஸ், மிடீஸ், டிவைடட் ஸ்கர்ட்ஸ், ஸ்லீவ்லெஸ் டாப்ஸ் என்று தொடங்கி, காக்ராசோளிகளிலும், கலர்ஃபுல் சுடிதார்களிலுமாய் எங்கெங்கு காணினும் அழகிய பெண்கள். இருபாலார் பயிலும்படி இந்தக் கல்லூரி நிறம் மாறிவிட்டதா என்ன? இல்லை இது 'எம்.ஓ.பி. பஸார்'. மாணவிகள் தங்கள் கைப்படத் தயாரித்த கைவினைப் பொருட்களையும், புத்திசாலித்தனம் மிளிரும் பிசினஸ் ஐடியாக்களையும், விற்பனைக்கு வைத்திருந்த இரண்டு நாள் கண்காட்சி. வருடத்தில் இந்த இரண்டு நாட்களில் மட்டும் ஆண்களுக்கு அனுமதி உண்டு. தொழில் முறை வர்த்தகக் கண்காட்சிகளைப்



* பானி பூரி

* மெகந்தி ஸ்டால்

போன்ற தர நேர்த்தியோடு ஸ்டால்கள்! சரி! ஸ்டால்களில் கடை பரப்பப்பட்டிருந்த தயாரிப்புக்கள்...?! அத்தனையும் ஹை கிளாஸ்!

போன்சாய் சைஸ் பொக்கேயிலிருந்து பானி பூரி கடை

வேடிக்கையல்
வெள்ளோட்ட

வரைக்கும் எல்லாமே மாணவிகள் கை வண்ணம். இறுதியாண்டு பி.பி.ஏ. படிக்கும் தருணா, நிஷா தமது வகுப்புத் தோழிகளோடு இணைந்து 'டிஸைபர்' என்றொரு ஸ்டால் போட்டிருந்தார்கள். வெறும் நூற்று ஐம்பது ரூபாய் முதலீடு. முதல் நாள் கண்காட்சியில் இந்த டீமின் மொத்த கலெக்ஷன் ஆயிரத்து ஐந்நூறு. இவர்களது பிசினஸ் கையும் மெய்யுமாய் மெகந்தி போட்டு விடுவது!

எம்.பி.ஏ. இறுதியாண்டு படிக்கிற ரஞ்சனா, ரேகா இருவரும் நிறையவே வித்தியாசமாய் ஒரு ஸ்டால் போட்டிருந்தார்கள். 'முதலீட்டாளர் ஆலோசனை' மையம். எல்.ஐ.சி., ஐ.சி.ஐ.சி.ஐ., எச்.டி.எஃப்.சி, எஸ்.பி.ஐ. என்று முன்னணி நிறுவனங்களில் முதலீடு செய்து கடன் பெற ஆலோசனைகளையும், விண்ணப்பங்களையும் இலவசமாய்த்



• நிர்மலா பிரசாத்





• ஸ்டிக்கர் பொட்டு, காதி பொம்மையும் எங்கள் கைவண்ணம்

தருகிறது இந்த இருவர் அணி.


கண்காட்சியில் எல்லோரது கவனத்தையும் கவர்ந்த ஒரு ஸ்டால், மாம்ஸ் கேக் ஷாப். ஸ்டாலில் நின்று பரபரப்பாக வியாபாரம் செய்து கொண்டிருந்த மாணவியை நெருங்கி, 'இரண்டு நாள் கண்காட்சிக்காக நிஜமாகவே, ஒரு கண்ணாடி ஸ்டாலையே செய்து கொண்டு வந்திருக்கிறீர்களே?' ஆச்சரியமாய்க் கேட்டோம்.

"நான் இந்தக் கல்லூரியின் முன்னாள் மாணவி. இங்கே பி.எஸ்.சி. கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்கிறபோது, ஒவ்வொரு ஆண்டும் நடக்கும் இந்த பஸாரை வேடிக்கை பார்த்ததோடு சரி. திருமணம் முடிந்த பிறகு, வேலைக்குச் செல்வதைவிட குறைந்த முதலீட்டில் தொழில் தொடங்கலாம் என்று எண்ணினேன். அப்போது எங்கள் கல்லூரியின் தொழில் முனைவோர் வளர்ச்சி மையம் நினைவுக்கு வந்தது. எனது ஆர்வத்தைப் புரிந்து கொண்டு, உடனே பேக்கரித் தொழிலில், எல்லா நெளிவு சுளிவுகளையும் இங்கே சொல்லிக் கொடுத்துவிட்டார்கள் அப்புறமென்ன? கணவரோடு இணைந்து ஸ்பென்சர் பிளாசாவில் பேக்கரி தொடங்கி வெற்றிகரமாக நடத்துகிறேன். தொழில் ஆர்வம் கொண்ட இப்போதைய மாணவிகளுக்கு நான் எடுத்துக்காட்டாக இருக்க முடிந்தால், சந்தோஷப்படும் முதல் ஆள், என்னைவிட எங்கள் கல்லூரி முதல்வர் நிர்மலா பிரசாத் தான்" என்று அசர வைத்தார் அந்த முன்னாள் மாணவி இன்னாள் தொழில் அதிபர் கீர்த்தி மகேஷ்.

"கல்லூரியை விட்டுச் செல்லும்போது தன்முனைப்போடு இந்த உலகை சந்திக்கிற தன்னம்பிக்கை உடையவர்களாக மாணவிகள் இருக்க வேண்டாமா? இதற்குத்தான் தொழில் முனைவோர் பயிற்சி மையத்தை ஐந்தாண்டுகளுக்கு முன்பு தொடங்கினோம். பயிலரங்கும், பயிற்சிப் பட்டறைகளோடு நிறுத்திவிடாமல், தங்கள் தயாரிப்புகளை விற்பனை செய்யும் அனுபவத்தையும் அவர்கள் பெற வேண்டும் என்று தொடங்கியதுதான் இந்தக் கண்காட்சி. இது இரண்டு நாள் கெட் டு கெதர் அல்ல. நாளை முழு நேர தொழில் அதிபர் ஆவதற்கான வெள்ளோட்டம்" என்கிறார் முதல்வர்.

ஜெயந்த்

படங்கள் : **டிஜிட்டல் சண்முகம்**



ஹனிமூன் போறீங்களா?

கோடை விடுமுறை நெருங்குகிறது. வெளிநாட்டுப் பயணம் திட்டமிடும்போது www.lonelyplanet.com தளத்தை மறக்காமல் ஒருமுறை நோட்டம் விடுங்கள். எந்த ஊருக்குப் போக வேண்டும் என்று அங்குள்ள searchல் டைப் செய்தவுடன், அந்த ஊரைப் பற்றி அக்கு வேறு ஆணி வேராக அலசி, சமாசாரங்கள் கிடைக்கும். கிரிக்கெட் உலகக் கோப்பையைப் பார்க்க தென்னாப்பிரிக்கா போகும்போது (!) கூடவே இன்னும் வேறு ஏதாவது இடங்கள் பார்க்கத் தோன்றினாலும், இங்கே கூடச் சுட லேடஸ்ட் தகவல்கள் இருக்கின்றன. உதாரணமாக - கேப் டௌனில் உள்ள Cable car தொலைபேசி நம்பர் மாறிவிட்டது, போன்ற தகவல்கள் உள்பட, அங்கே நகரங்களில் உள்ள அபாயங்களையும், உபத்திரவங்களையும் (கலகங்கள், கலாட்டாக்கள் போன்றவை) கூட சில links அறிவிக்கின்றன. இவை தவிர வழக்கமான பயணக் குறிப்புகள், என்ன, எங்கே, எப்படி எவ்வளவு போன்றவை. இதையெல்லாம் தவிர, புறப்படும் முன்பு நீங்கள் தயார் செய்து கொள்ள வேண்டிய ஆலோசனைக் குறிப்புகளையும், ஒரு ஞாபகக் குறிப்பு லிஸ்ட்டும் கொடுக்கிறது. Lonely Planet Ticket என்ற பகுதியில் அந்த ஊரைப் பற்றி அன்றைய செய்திகளையும் தெரிவிக்கிறது. முஸ்லிம் நாடுகளில் ரம்ஜான் சமயத்தில் எப்படி இருக்கும், நீங்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைகள், என்கிற ரீதியில் நுணுக்கமாக எல்லா செய்திகளும் இருக்கின்றன.

பயணம் பற்றிய இன்னொரு தளம். www.journeymart.com இங்கே நீங்கள் எந்த மாதிரியான இடம் அல்லது என்ன விதமான விடுமுறையைத் தேடுகிறீர்களோ அந்த வரிசையில் தகவல் இருக்கும். அதாவது, ஹனிமூனுக்கு ஏற்ற இடங்கள், பீச் ரிஸார்ட், மலைப் பிரதேசங்கள், கடல் பயணம்/சொகுசுக் கப்பல் - இந்த ரீதியில், வனப்பிரதேசம் அல்லது சரணாலயங்கள் உள்ள linkல் Corbett Hideaway என்ற பக்கம் பார்க்க மிக ரம்யமாக, கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்கிறது. வன ஸ்தலங்களுக்குப் பயணம் திட்டமிட்டால், விவரங்களுக்கு இதுதான் சரியான தளம்.

கிரிக்கெட் ஜோக் ஆப் தி வீக்: (உபயம் 123india.com

ஒரு பரீட்சையில் கிரிக்கெட் பற்றி கட்டுரை எழுதச் சொல்லி கேள்வி. ஒரு மணி நேரத்தில் பரீட்சை முடிந்தது. விடைத்தாளைத் திருத்தும்போது ஒரு விடைத்தாளில் சில இங்க் துளிகள் மட்டும் இருந்தன. கீழே, 'மழை பெய்ததால் மேட்ச் கான்சலாகிவிட்டது என்று எழுதியிருந்தது. உடனே ஆசிரியர், சற்று பெரிய ஜீரோக்களை அதில் வரைந்து, 'அன்று ஆலங்கட்டி மழையும் கூட இருந்தது' என்று எழுதினார்.

- அருணா ஸ்ரீனிவாஸன்

மகாத்மா காந்தி படைப்புகள்



ஒரு சிறப்புத் தொகுப்பு

தமிழ்ப் பதிப்பாசிரியர்
லா.சு.ரங்கராஜன்

நவஜீவன் பிரசுராலயம்
அகமதாபாத் - 380 014.

முழு நிறைவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வாசகங்கள் அடங்கிய

காந்திய சிந்தனைக் களஞ்சியம்

ஐந்து தொகுதிகள் கொண்ட நூல் வரிசை

விலை ரூ.200/- மட்டுமே

நூல் 1 : காந்திஜியின் 'சுய சரிதை'. **நூல் 2 :** 'தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகம்'. **நூல் 3 :** ஆதார நூல்கள் (காந்திஜி எழுதிய சிற்றேடுகளான 'அறநெறிச் சமயம்', 'சர்வோதயம்', 'ஹிந்த் ஸ்வராஜ் அல்லது இந்தியத் தன்னாட்சி', 'எரவாடா மந்திரிலிருந்து', 'கீதை உரைகள்', 'நிர்மாணத் திட்டம்' மற்றும் 'ஆரோக்கியத் திறவுகோல்'.) **நூல் 4 :** தேர்ந்தெடுத்த கடிதங்கள் மற்றும் கடிதப் பகுதிகள். **நூல் 5 :** உண்மையின் குரல் (சில புகழ்பெற்ற பேருரைகள் மற்றும் காந்திஜி எழுதிய கட்டுரைகளிலிருந்து வாசகப் பகுதிகள்).

விநியோகஸ்தர்கள் : காந்திய இலக்கியச் சங்கம், தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, மதுரை - 625 020. **காந்தி அமைதி நிறுவனம் (Gandhi Peace Foundation, Chennai)**, 332, அம்புஜம்மாள் தெரு, (செட்டியார் ஹால் எதிரில்), ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் : 24970039.

(நவஜீவன் ஏற்கெனவே வெளியிட்டுள்ள காந்திஜியின் 'சுயசரிதை' (தமிழ், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு பதிப்புகள்) காந்தி அமைதி நிறுவனத்தில் கிடைக்கும். விலை ரூ.30).

இனி பிள்ளை வரம் வேண்டி எங்கும் அலைய வேண்டாம்!
குறைந்த செலவில் குழந்தை பெற முக்கூட்டு மருத்துவம்!!



கருக்குழாய் அடைப்பு நீங்கியும் உயிரணு உற்பத்தி ஆகியும் 20.8.2002ல் ஆண் குழந்தை பெற்ற விழுப்புரம் மாவட்டம் செஞ்சியைச் சேர்ந்த முருகன் - தமிழரசி தம்பதியர்.

அருகில் போட்டோவில் உள்ள தம்பதிகளாகிய நாங்கள் கடந்த சில வருடங்களாக குழந்தை இல்லாதிருந்து பல டாக்டர்களிடம் சிகிச்சை பெற்று தோல்வியாகி, பின் வடபழனியிலுள்ள உலகப் புகழ்பெற்ற டாக்டர் ஏ. **அர்ஜுனா**, டாக்டர் வி.ஏ. **ஆண்டாள்** அவர்களை சந்தித்தோம். நாங்கள் இருவரும் மேற்படி டாக்டர்களிடம் முக்கூட்டு மருத்துவ சிகிச்சை பெற்றதில் எனக்கு உயிரணுக்கள் உற்பத்தியாகியும், என்னுடைய மனைவிக்கு கருக்குழாய் அடைப்பு நீங்கியும் 20.8.2002ல் ஆண் குழந்தை பெற்றோம்.

மேலும் இந்த டாக்டர்கள் ஆண்களுக்கு உயிரணுக்கள் உற்பத்தி செய்தும், உயிரணுக்கள் குறைவாக உள்ளவர்களுக்கு அபிவிருத்தி செய்தும், பெண்களுக்கு மாதவிடாய் பிரச்சினை ஒழுங்குபடுத்தியும் கருப்பை ஒவரிகளை வளரச் செய்தும், கருக்குழாய் அடைப்புகளை நீக்கியும், கருப்பையிலுள் சினைப்பைகளில் உள்ள கட்டிகளை கரைத்தும், கரு முட்டை உற்பத்தி ஆகி வெடிக்க செய்தும், முக்கூட்டு மருத்துவ சிகிச்சையில் குழந்தை பிறக்கச் செய்கிறார்கள். குழந்தை இல்லாத தம்பதிகள் இந்த டாக்டர்களை சந்தித்தால் எங்களைப் போல புத்திரபாக்கியம் அடையலாம்.

நவீன வைத்தியாலயா

ஹோமியோபதி – சித்தா – ஆயுர் வேத மலடு நீக்கும் ஆஸ்பத்திரி

சென்னையில் சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் டாக்டரை சந்திக்குமிடம்:
எண்: 65, நெற்குன்றம் பாதை,
(டி.எஸ்.கவுரிசங்கர் கல்யாண மண்டபம் எதிரில்),
100 அடி ரிங் ரோடு,
வடபழனி, சென்னை - 600 026.
போன்: 044 - 23623464

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் டாக்டரை சந்திக்குமிடம்.
எண். 30, பிராமணர் தெரு,
(ஈஸ்வரன் கோயில் அருகில்),
வந்தவாசி,
திருவண்ணாமலை
மாவட்டம் – 604 408.
போன்: 225208, 226180
S.T.D.-04183



மருத்துவ திலகம்
டாக்டர் A. அர்ஜுனா,
டாக்டர் V. A.ஆண்டாள் அர்ஜுனா,

குறையொன்றுமில்லை

31

'வினாசாயச துஷ்கிருதாம்' என்பதில் வருகிற ச எதைக் காட்டுகிறது...? சாது பரித்ராணம்தான் முக்கியப் பிரயோஜனம் அவனுடைய அவதாரத்துக்கு என்பதைக் காட்டுகிறது. துஷ்டர்கள் வினாசனம் என்கிற காரியம் இரண்டாம் பட்சம் தான். அது முக்கியம் இல்லை என்பதைத்தான் 'ச' காட்டுகிறது.

பகவான் இப்போது அவதாரம் பண்ணி விடவில்லை. நாம் பேசிக் கொண்டிருப்பது துவாபர யுகத்திலே நடந்தது; திரேதா யுகத்திலே நடந்தது; அதற்கும் முன்னே நடந்த அவதாரங்கள் பற்றி...

'இப்போது ஒரு அவதாரம் பண்ணக் கூடாதா பகவான்? ஆயிரம் வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதே கலியுகம் ஆரம்பித்து...' என்று ஒரு கேள்வி வரும். இதற்கும் சேர்த்து அன்றே பதில் சொல்லிவிட்டான் பரமாத்மா - 'ச'வைப் போட்டு!

'ச' அதற்குப் பதில் சொல்கிறது!

துஷ்க்ருத் வினாசனம் எனக்கு அவ்வளவு முக்கியமில்லை என்று சொல்லிவிட்டான் பரமாத்மா. இப்போது என்ன கேள்வி கேட்டோம் என்றால்,

ஒரு ஹிரண்ய கசிபு இருக்கிறபோது நீ பிறந்தாயே;
ஒரு ஹிரண்யாக்ஷன் இருக்கிறபோது நீ தோன்றினாயே;
ஒரு கம்ஸன் இருக்கிறபோது நீ பிறந்தாயே;
ஒரு ராவணன் இருக்கிறபோது நீ தோன்றினாயே...

இப்போது பார்! தத்துல்யமாய் நிறைய்யப் பேர் இருக்கிறார்களே... ஒருத்தருக்காக நீ பிறந்தாயே, இப்போது இத்தனை பேர் இருக்கிறபோது ஏன் பிறக்கக்கூடாது என்று கேட்டால்... அதற்குத்தான் இந்த 'ச' போட்டிருக்கிறான்.

'என்னுடைய பிறப்புக்கு, துஷ்டர்களைக் கொல்வது என்பது முக்கியமில்லை. சாதுக்களை ரக்ஷிப்பதுதான் முக்கியம். இப்போது நீங்கள் சொல்கிற மாதிரி ஹிரண்ய கசிபு, ராவணன், கம்ஸன், சிசுபாலன் என்று இவர்களெல்லாம் நிறைய இருக்கலாம் உலகத்திலே. அவர்களைக் கொல்வது எனக்கு முக்கியமில்லை. பிரஹலாதனைப் போன்ற உத்தம பக்தன் இருக்கிறானா..? அவனுக்குக் கெடுதல் ஏற்படுகிறதா...?'

பிரஹலாதன் மாதிரி நிஜமான பக்தன் ஒருவன் இருந்து, அவனுக்குக் கேடு ஏற்பட்டால், பகவத் அவதாரம் இப்பொழுதும் சித்தம். அதற்காகத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறான் பரமாத்மா! ஒரு பிரஹலாதன் கிடைப்பானா, என்று பார்த்துக் கொண்டிருக்கிறான்.

பிரஹலாதனுக்கு இருக்கிற ஏற்றம் குறித்து நாரதர் உபதேசம் பண்ணுகிறார். 'பிரஹலாத, நாரத, பராசர புண்டரீக..' சுலோகத்தைப் பாருங்கள்! ஆசார்யனே பின்னால் போய்விட்டார். முதலில் நாரதர் பெயர் தானே வரவேண்டும்? ஆனால், பிரஹலாத, நாரத என்றுதான் சொல்லியிருக்கிறது.

மஹாவிச்வாசம் என்பதை, அந்தப் பிரஹலாதனைப் பார்த்துத்தான் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அந்த மாதிரி, உயர்ந்த ரீதியிலே, நீயே.......... ரக்ஷகன்!' என்று எத்தனை நாழி வேண்டுமானாலும் இழுத்துக் கொண்டே போகலாம். 'உன்னைத் தவிர எனக்குப் போக்கிடம் கிடையாது! உன்னைத் தவிர எனக்குக் கதி

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்



உண்டா?' என்று சரணாகதி பண்ணிவிட்டால் அவன் பொறுப்பு!

'நீ ரக்ஷித்தால், வேறு யார் எனக்கு ரக்ஷகர்கள்?

நீ கைவிட்டால், வேறு யார் எனக்கு ரக்ஷகர்கள்?' என்று கேட்கிறது ஒரு சுலோகம்

'நீ ரக்ஷித்த பிறகு வேறு யார் எனக்குத் தேவை! உன்னால் கைவிடப்பட்ட என்னை வேறு யாராவது ரக்ஷிக்க முடியுமா என்ன!' என்று இதற்குப் பொருள்.

'ரக்ஷகன் நீதான்' என்பதை அந்த எம்பெருமானிடத்திலே சொல்லிவிட்டால் போதும். லௌகிகத்திலும் அப்படித்தானே. உங்களைத்தான் நம்பி வந்தேன்; நீங்கள் என்னைக் கைவிட்டு விட்டால் எனக்கு வேறு ஏது போக்கிடம்? இந்த ஊரிலே யாரையும் தெரியாது...' என்று ஒருத்தரிடம் சொல்லி விட்டோமானால், கல்நெஞ்சனானாலும் இணங்கிவிட மாட்டானா!

'உம்மை நம்பி ஒன்றும் நாம் வரவில்லை... எனக்கு எத்தனையோ பேரைத் தெரியும்...' என்று ஆரம்பித்தால், யாராவது காது கொடுத்துக் கேட்பார்களா என்ன?

ஆகையினாலே, பகவானிடத்திலே போய் 'எனக்கு இது தெரியும், அது தெரியும்' என்று சொல்லலாகாது. 'ஒன்றும் தெரியாதவன்; நோற்ற நோன்பிலேன், நுண் அறிவிலேன்...' என்று ஆரம்பித்துப் பேச வேண்டும்.

தன்னுடைய இயலாமையை பகவானிடத்திலே எடுத்துச் சொல்லி, நீயே போக்தா, நீதான் ரக்ஷிப்பவன், என்று விசேஷமாகப் பிரார்த்திக்க வேண்டும்.

"நாராயணனே நமக்கே பறை தருவான்" என்று விசேஷமாக ஆண்டாள் சொல்வதைக் கவனியுங்கள். இதை முதலிலேயே சொல்லி விடுகிறாள் ஆண்டாள். இதையே பகவான் கீதையிலே கடைசியிலேதான் சொல்கிறான்! எல்லாவற்றையும் வளவள வென்று சொல்லிவிட்டு, கடைசியிலேதான் விஷயத்துக்கு வருகிறான்! ஆரம்பத்திலேயே ஒரு விஷயத்தைச் சொல்வது எப்படி? எல்லோரும் எழுந்து போகிறபோது சொல்வது எப்படி...?

ஆகையால் கிருஷ்ணனுடைய வாக்கைக் காட்டிலும், ஆண்டாளுடைய வாக்குக்கு ஏற்றம். எதைச் சொல்ல வேண்டுமோ அதை முதலில் சொல்லிவிடுகிறாளே!

ஏவகாரத்தினாலே, அவன் ஒருவனே நமக்கே என்றதன் மூலம், அந்த சரணாகதி தெரியவருகிறது.

'அவனைத் தவிர கத்யந்தமற்ற நமக்கே அவனைத் தவிர புகலொன்றில்லாத அடியேன்...' என்கிறாள் ஆண்டாள். அனன்ய சரண: சரணம் பிரபத்யே

வேறு போக்கொழிந்த நான், அடிபணிந்து நிற்கிறேன் என்று சொல்லும்போது, அப்படி அடிபணிகிறவர்களை விட்டுவிடுவானா அந்தப் பரமாத்மா? விட முடியுமா அவனாலே...?

ஆகையினாலே, அந்த எம் பெருமான் ஒரு நாளும் கைவிட மாட்டான்.

சரணாகதியின் ஐந்தாவது அங்கத்துக்கு வருவோம். (முதல் நான்கு; அவன் உயர்வை உணர்ந்து ஓதுதல்; அவனை நினையவும் அடையவும் தடையாக இருப்பவற்றை ஜெயித்தல், அவனே ரக்ஷகன் என்று உணர்தல்; அவனைத் தவிர வேறு ரக்ஷகர்கள் இல்லை, என்று மஹா விச்வாசம் கொள்ளுதல்.

இதெல்லாம் செய்துவிட்டால் கார்ப்பண்யம் என்ற ஐந்தாவதான, மேலான நிலை கைகூடும். தன்னிடத்திலே ஒரு கைமுதலும் இல்லை; தான் எத்தனை செய்தாலும், எத்தனை பூஜைகள், எத்தனை யக்ஞங்கள் செய்தாலும், அந்த எம்பெருமானுடைய காருண்யத்துக்கு முன்பு எதுவும் விலை செல்லாது என்கிற அறிவு ஏற்படும்.

பெரியாழ்வார் வாக்கைப் பாருங்கள் :

அந்த திருவேங்கடமுடையானிடத்தில்,

''அமைச்சர் தரையில் உட்கார்ந்து ஃபைல் பார்த்துக்கிட்டிருக்காரே! ஏன்?''

''நாற்காலி ஆசை இல்லாதவர்னு மத்தவங்க நினைச்சுக்கணுமாம்!''

— உ. ராஜாஜி



தணல் தந்த நிழல்!

'நிழல்' கதையில் ஒரு புது கருவை இளந் தணலாகக் கையாண்டிருக்கிறார் அருண் சரண்யா... பாராட்டுகள்.

திலகம்
திருநெல்வேலி.

நான்கு வாரத் தொடர் பரீட்சையில் இக்கதை படுவேகத்துடன் அமைந்ததோடு, சொல்ல வந்த சங்கதியை 'நச்' என்று நகைச் சுவையோடு சொல்லியது அசத்தல்!

கு.பிரசாத்
சேலம்.

நம்பத்தகுந்ததாக இல்லாதபடி 'நிழல்' விழாத மனிதனாக ராஜுனை அறிமுகப்படுத்தியபோதே,



கதை எப்படி முடியும் என்ற கற்பனையில் லயித்திருந்தேன். கதை முடிந்த விதம் முற்றிலும் மாறுபட்டு என்னை பிரமிக்கச் செய்துவிட்டது.

கோ.ராமநாஸ்
தஞ்சாவூர்.

'உனக்கே அடியேன் பாத்திரம்... வேறு என்ன என்னால் பண்ண முடியும்?' என்கிறார்.

பகவானிடத்திலே நாம் அத்தனையையும் கொடுத்தாலும், ஒரு எலுமிச்சம்பழத்தைக் கொடுத்து விட்டு ராஜ பதவியைக் கேட்கிற மாதிரிதான். நாம் எது பண்ணினாலும் அவனுடைய காருண்யத்துக்கு முன்பு நிற்க முடியாது; அது விலை செல்லாது!

சொற்பமாகப் பண்ணிவிட்டு, 'நான் அதைப் பண்ணினேனே, இதைப் பண்ணினேனே... உனக்கு ஞாபகம் இருக்கிறதா? போன வருடம் இதே நாளில் வந்தேனே, உனக்கு ஞாபகமிருக்கிறதா...?' என்றெல்லாம் பகவானிடத்திலே கேட்கலாமா?

எது பண்ணினாலும் அவனிடத்திலே விலை செல்லாது என்கிற உணர்வுதான் கார்ப்பண்யம். நம்மிடத்தில் இருக்கிற அறியாமையை பகவானிடத்திலே தெரியப் படுத்துகிறோம்.

இந்த ஐந்து நிலைகளும் கூடுகிற போது, 'இந்த ஆத்மா அவனுடையது' என்கிற நியாஸம் ஏற்படும். நியாஸம் என்றால் 'வைத்தல்' என்று அர்த்தம். எதை வைத்தல்?... ஆத்மாவை அவனிடத்திலே, அவன் திருவடியிலே வைத்தல்.

இதைப் பண்ணிவிட்டால், பகவான் நம்மை உடனடியாக ஏற்கிறான். சரணாகதி, பரன்யாஸம் என்றெல்லாம் இதற்குப் பெயர். இதுதான் இறுதியான ஆறாவது நிலை.

'ஆறும் ஆறும் ஆறுமாய்' என்றதில் இந்த ஆறு அங்கங்கள் கொண்ட சரணாகதியும் அடக்கம். எல்லாமாக பரமாத்மாவே இருக்கிறான் என்பதை எண்ணாலேயே காட்டியிருக்கிறது.

ஜோதிட நிபுணர் வராஹமிச்ரர், இந்த எண்ணால் காட்டும் முறைக்கு ஒரு காரணம் சொல்கிறார். ராமாவதாரத்தையும் கிருஷ்ணாவதாரத்தையும் எடுத்துக் காட்டுகிறபோது சொல்கிறார் :

'ராமன் எப்போதும் சீராக இருப்பான். ஒரே மாதிரி இருப்பான். கிருஷ்ணன் இருக்கிறானே, அவனுக்குக் கபடம் அதிகம் - மாறிக் கொண்டே இருப்பான். அவர்கள் பிறந்த திதியே அதைக் காட்டுகிறது.

ராமன் பிறந்தது நவமி, நவமி என்றால் ஒன்பது, ஒன்பதைப் பெருக்குங்கள். 9 x 1 = 9. 9 x 2 = 18; 1 + 8 = 9. 9 x 3 = 27; 2 + 7 = 9.... இப்படியே பெருக்கியும் கூட்டியும் பார்த்தால் திரும்பத் திரும்ப 9 என்றே வரும்; மாறாது ஒரே மாதிரி இருக்கக்கூடிய எண், மாறாது ஒரே மாதிரி இருக்கக்கூடிய ராமனுக்கு உரியது.

கிருஷ்ணன் பாருங்கள், எட்டு...

8 x 2 = 16; 1 + 6 = 7. 8 x 3 = 24; 2 + 4 = 6... இப்படி 8, 6, 7 என்று வேறுபடும். இதற்கு விஷம சங்க்யை என்று பெயர்.

'ஒருத்தி மகனாய்ப் பிறந்து, ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர..' என்றது போல் மாறிக் கொண்டே இருக்கிறான் கிருஷ்ணன்.

ராமனும் கிருஷ்ணனும் பிறந்த திதியே அவர்கள் குணத்தைக் காட்டுகிறது என்கிறார் வராஹமிச்ரர்.

எண்களெல்லாம் வியாபித்திருப்பவன் எம்பெருமான் - பரமாத்மாதான்.

(வளரும்)

குல்லு மல்லு

—கதிர்


ஏ.ஆர்.ரஹ்மான் ஷோதானே... எப்படி இருந்தது...?
ஐம்பதாயிரம் பேர்! நிற்கக்கூட இடமில்லே! மறக்கமுடியாத மாலை.
நல்ல விஷயத்துக்காக நடந்த நிகழ்ச்சியாச்சே. அசத்திட்டாரு போ!
நீ வேணா பாரு. நாளைக்கு இதேமாதிரி ஒரு கூட்டம் என் இசைக்காக எழுந்திரிச்சி நிக்கத்தான்போகுது!
மனநலம் குன்றியவர்களுக்காக ஒரு இசை நிகழ்ச்சி நடத்தறதை இலட்சியமாவே வைச்சிருக்கேன்.
என்ன எல்லாரையும் கூப்பிட்டு ஜன கண மன பாடப் போறியா?
நிகழ்ச்சிக்கு வர்றவங்களோட மன நலப் பாதுகாப்புக்கு புதுசா ஒரு இன்ஷூரன்ஸ் பிளான் கொண்டு வரலாம்...
என் மன வானில் சிறகை விரிக்கும் வண்ணப் பறவைகளே....

கல்கி



லேட்டஸ்ட் இலவச இணைப்பு
கெட்டிமேளம் கொட்டியது.
கல்யாணத்துக்குப் பிறகு வீடு கட்டிப்
பார்க்க வேண்டியதுதானே? இதோ வீடு
பற்றிய சப்ளிமெண்ட் தந்திருக்கிறோம்.



சிறுகச் சிறுகச் சேமித்து, இனிய
இல்லம் அமைக்க நீங்கள் படும்
சிரமத்தைக் குறைக்க, எங்களால் இயன்ற
சில பயனுள்ள டிப்ஸ்களைத்
தந்திருக்கிறோம். படித்துப் பயன்படுத்தி,
சிறப்பாக வாழ வாழ்த்துக்கள்!

"ஒரு வீடு அல்லது ஃப்ளாட்டை வாங்குவதற்குமுன் அது தொடர்பான உரிமைப் பத்திரங்களைப் பார்க்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை" என்ன என்று சுனில் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் இன்ஜினீயர் ஜே.ஆர். திலீப்குமாரிடம் கேட்டபோது, பயனுள்ள ஹவுசிங் தகவல்களைத் தந்தார்.

உங்களுக்கு விற்கப் போகும் மனைக்கு யார் உரிமையாளர் என்பதைத் தெளிவாக்கும் பத்திரங்களைப் பரிசீலிக்க வேண்டும். ஏதோ ஒரு ஜெராக்ஸ் பிரதியைக் கொடுத்தால் ஒப்புக் கொள்ள வேண்டாம். மூலப்பிரதியையோ வழக்கறிஞர் ஒருவரின் சான்றுரைக்கப்பட்ட

நகலையோ (Certified Copy) பரிசீலிப்பது அவசியம்.

வேறு ஒருவரது இல்லத்தை ஒரு ரியல் எஸ்டேட் நிறுவனம் வாங்கி உங்களுக்கு வீடு / ஃப்ளாட் கட்டித் தருவதாக இருந்தால், மனையின் உரிமையாளரும் மேற்படி கட்டுமான நிறுவனமும் எழுதிக் கொண்டுள்ள விற்பனை ஒப்பந்தப் பத்திரங்களை அவசியம் பார்க்க வேண்டும்.

இப்போதைய உரிமையாளருக்கு எந்த விதத்தில் சொத்தின்மீது அந்த உரிமை வந்தது என்பதை கவனிக்க வேண்டும். அவர் அதை வேறொருவரிடமிருந்து வாங்கியிருக்கலாம். அப்போது அது தொடர்பான பதிவுப் பத்திரங்களைப் பார்க்கவேண்டும்.

அல்லது உயில் மூலம் அந்த சொத்து அவருக்குக் கிடைத்திருக்கலாம். அப்படியானால் பதிவு செய்யப்பட்ட உயிலைப் பார்க்கவேண்டும். ஒருவேளை அந்த உயிலில் நிலத்தின் பராமரிப்பாளர் நியமிக்கப்படவில்லையென்றால், மாவட்ட / உயர் நீதிமன்றங்கள் வழங்கியிருக்கும் நிர்வாகச் சான்றிதழ்களைப் பார்க்க வேண்டும்.



• திலீப்குமார்

அல்லது உயில் இல்லாமலேயே சட்டப்படி வாரிசு என்ற காரணத்தால், இறந்த ஒருவரது சொத்து இவருக்குக் கிடைத்திருக்கலாம். அப்போது அந்த வாரிசுதாரர்கள், சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திலிருந்தோ அல்லது வட்டாட்சியரிடமிருந்தோ சான்றிதழ்கள் பெற்றிருப்பார்கள். அவற்றைப் பார்வையிட வேண்டும்.

வெகுமதியாகவோ, பண்டமாற்று முறையிலோ, பாகப்பிரிவினையாகவோ, சொத்து அவர் கைக்கு வந்திருக்கலாம்.

இவற்றில் எந்த விதத்தில் அவர் கைக்கு அந்த சொத்து வந்திருந்தாலும், அது தொடர்பான பத்திரங்களையும்



உங்கள் வழக்கறிஞரின் மூலம் நன்கு சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

மேலும் சில பத்திரங்களையும் நீங்கள் நிச்சயம் பரிசலீக்க வேண்டும். அவை:

பட்டா. பட்டா என்பது வருவாய்த் துறையின் சார்பாக தாசில்தாரின் முத்திரையோடு வழங்கப்படுவது.

வில்லங்கச் சான்றிதழ். முந்தைய 31 ஆண்டு காலத்துக்காக வாங்குவது நல்லது. அதில் சொத்து அடமானத்திலிருந்து மீட்கப்படாததாகவோ, அல்லது வேறு யாருக்காவது சொத்தின்மீது பாத்தியதை உண்டு என்பதாகவோ, தெரியவந்தால் எச்சரிக்கைத் தேவை. நன்கு விசாரியுங்கள்.

நில உச்சவரம்புச் சட்டம் நீங்கள் வாங்கும் (அல்லது ஃப்ளாட் கட்டப்போகும்) மனையை பாதிக்காதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். நிலத்தின் சொந்தக்காரரிடம் அவர் கைப்படவே "இந்த நிலம் நில உச்சவரம்புச் சட்டத்தை மீறவில்லை" என்பதை எழுதி வாங்கிக் கொள்வது நல்லது. மற்றப்படி குறிப்பிட்ட நிலம் நில உச்சவரம்புச் சட்டத்தால் பாதிக்கப்படா

தது என்பது போன்ற சான்றிதழை எந்த அரசுத் துறையும் தருவதாகத் தெரியவில்லை.


நாம் வாங்கும்தேதிவரை அந்த சொத்துக்கான வரிகள் கட்டப்பட்டுள்ளனவா, என்பதை தகுந்த ரசீதுகளின் மூலம் உறுதி செய்து கொள்ள வேண்டும். மின் வாரியத்துக்குச் செலுத்தப்பட்ட டெபாசிட்டிற்கான ரசீதுகள், நகர்ப்புற நிலவரி மதிப்பீட்டு ஆணைகள் மற்றும் அதைக் கட்டிய ரசீதுகள் சரி பார்க்கவும்.

அடுக்கு மாடிக் குடியிருப்பு (ஃப்ளாட்) வாங்குபவர்கள் தங்கள் ஒப்பந்தத்தில் இடம் பெற்றிருக்கும் சில விஷயங்களைப் பற்றி தெளிவாகத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும்.

பிரிக்கப்படாத நிலப்பங்கு
(Undivided Share)

உங்கள் கட்டடத்தில் இரண்டிரண்டாக மொத்தம் ஆறு ஃப்ளாட்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அவரவர் ஃப்ளாட்தான் அவரவருக்குச் சொந்தமென்றால், கட்டடத்தைச் சுற்றியிருக்கிற நிலம் யாருக்குச் சொந்தம்? "கீழே இருக்கும் இரு ஃப்ளாட்காரர்களுக்குச் சொந்தம்"

வீட்டுமொழி!



குருவிக்கும் குளவிக்கும் கூடு உண்டு... குடும்பத்துக்கு வேண்டாமா?

என்று சொன்னால், மற்றவர்கள் சண்டைக்கு வரமாட்டார்களா? தவிர மாடி ஃப்ளாட்களில் இருப்பவர்கள் தங்கள்

வண்டியை எங்கே நிறுத்துவதாம்? இன்னொரு சிக்கலும் இருக்கிறது. கீழ் ஃப்ளாட்காரரின் ஃப்ளாட்டில் உள்ள



பூமிப்பகுதி யாருக்குச் சொந்தம்? தன் ஃப்ளாட் மொத்தத்தையும் இடித்துச் சீரமைக்கப் போகிறேன் என்று கீழ் ஃப்ளாட்காரர் முடிவெடுத்துத் தொலைத்தால்?

இத்தனை விஷயங்களுக்குமான தீர்வுதான் பிரிக்கப்படாத நிலப்பங்கு. அதாவது எந்த மனையில் உங்கள் ஃப்ளாட் கட்டப்படுகிறதோ, அந்த மனையின் ஒரு பங்குக்கு நீங்கள் உரிமையாளர். இந்த உரிமை, மனையின் ஒரு குறிப்பிட்ட பாகத்திற்கானது அல்ல (அதனால்தான் 'பிரிக்கப்படாத' என்ற வார்த்தை. மனையின் மொத்தப்பரப்பில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் அது.)

ஒரு ஃப்ளாட்டுக்கு நீங்கள் உரிமையாளர் என்றால், அந்த மனையில் உங்களது பிரிக்கப்படாத நிலப்பங்கையும் நீங்கள் வாங்கியிருக்க

வேண்டும்.

இதை எப்படிக் கணக்கிடுவது?

உதாரணமாக, ஒரு மனையில் 800 சதுர அடி பரப்புள்ள பத்து ஃப்ளாட்கள் கட்டினால், ஒவ்வொரு உரிமையாளரும் அந்த மனையின் பத்து சதவிகிதம் பிரிக்கப்படாத நிலப்பங்கை வாங்கவேண்டும்.

கட்டடத்தில் உள்ள அனைத்து ஃப்ளாட்காரர்களின் மொத்த பிரிக்கப்படாத நிலப்பங்குகளையும் சேர்த்தால் 100 சதவிகிதம் என்று வர வேண்டும்.

கட்டுமானப் பணிகள் தொடங்குவதற்கு முன்பே, உங்களுக்குச் சொந்தமான பிரிக்கப்படாத நிலப்பங்கை உங்கள் பெயருக்கு விற்பனைப் பத்திரம் மூலம் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இந்த பிரிக்கப்படாத நிலப்பங்கு தொடர்பான உரிமைப் பத்திரம் சரியாக இல்லையென்றால், இருவிதப் பிரச்னைகள் உண்டாகலாம். நிதி நிறுவனங்களிட



''இந்தக் காலனியிலே பொழுது போக்க டென்னிஸ் கோர்ட் கூடக் கட்டியிருக்கோம். உங்க பொழுது போக்கு என்னன்னு தெரிஞ்சுக்கலாமா?''

''ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் வெவ்வேறு புது ஃப்ளாட்களை சும்மாப் பார்த்து வைப்பது.''

மிருந்து ஃப்ளாட் கட்ட கடன் வாங்க முடியாது. பிற்காலத்தில் உங்கள் ஃப்ளாட்



கட்டப்பட்டுள்ள நிலம் ஆக்ரமிப்புப் பகுதி என கருதப்பட்டு நீங்கள் வெளியேற்றப் பட்டால், நீங்கள் செலுத்திய பணம் திரும் பக் கிடைக்கும் என்ற உத்தரவாதம் இல்லை.

தரை பரப்பளவு குறியீடு (Floor Space Index)

சென்னை போன்ற பெருநகர்களில் எழுப்பப்படும் ஃப்ளாட்கள் இந்த FSI என்ற விஷயத்தைத் தவறாமல் பின்பற்ற வேண்டும்.

பொதுவாக ஃப்ளாட்டுக்கான மனை குடியிருப்புப் பகுதியாக இருந்தாலும், அல்லது குடி யிருப்பு மற்ற பகுதிகளும் சேர்ந் ததாக இருந்தாலும், FSI என்பது அதிகப்பட்சம் 1.5. ஆகும். அதா வது மொத்த கட்டுமானப் பரப்பளவு என்பதை, மொத்த மனை பரப்பளவால் வகுத்தால் அது 1.5வைத் தாண்டக் கூடாது.

ஒதுக்கீட்டுக் கடிதம் (Allotment Letter)

ஃப்ளாட்டை வாங்குவதற்கு முன் இந்தக் கடிதத்தைக் கட்டாயம் கட்டுனரிட மிருந்து (அதாவது கன்ஸ்ட்ரக்ஷன் நிறு வனத்திடமிருந்து) கேட்டுப் பெற வேண்

டும். ஸ்டாம்ப் பேப்பரில் (பத்து ரூபாய்) இருப்பது நல்லது.

ஃப்ளாட்டுக்கான மொத்த விலை, பிரிக்கப்படாத நிலப்பங்கின் மொத்த மதிப்பு, அதன் பதிவுக்கான முத்திரைப் பணம், பதிவுக் கட்டணம், கட்டுமான மதிப்பு, மற்றும் அதை செலுத்துவதற்கான தவணை முறைகள் ஆகிய விவரங்கள் இந்தக் கடிதத்தில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

வீடு கட்டித்தர முனவரும் நிறுவனம் தன் பெயரோடு முழு முகவரியையும் இந்தக் கடிதத்தில் எழுதும்படி பார்த்துக் கொள்ளுங்கள். கட்டுமானப் பணியை, தான் மட்டுமல்லாது தன் வாரிசுகள், பிரதிநிதிகள் மற்றும் தங்கள் நிறுவனத்தை வேறு எவரிடமாவது விற்றுவிட்டால் அவர்களும் உட்பட, குறித்த நேரத்தில் பூர்த்தி செய்து கொடுப்பார்கள் என்ற வாசகம் அதில் இருக்க வேண்டும்.



"நாலாவது மாடியில இருக்கிற நீங்க கவலைப்படவே வேணாம். நாங்க இடிக்கப் போவது மூணாவது மாடியைத்தான்."



அப்போதுதான் அந்தக் கட்டுமான நிறுவனம் வேறு யாருக்காவது கைமாறினால் கூட, நமக்குச் சட்டச் சிக்கல் இருக்காது.

நீங்கள் வாங்கப் போகும் வீட்டின் வரைபடம் மற்றும் அதற்குள் அமையவிருக்கும் சிறப்பு அம்சங்கள் ஆகியவை, இந்தக் கடிதத்துடன் இணைக்கப் பட்டிருக்க வேண்டும்.

கட்டுமானப்பணி துவங்கும் தேதி, ஃப்ளாட்டை உங்களிடம் ஒப்படைக்கப் போகும் தேதி ஆகியவை மட்டுமல்ல, ஒப்படைப்பில் தாமதமானால் அளிக்கப்பட வேண்டிய ஈட்டுத்தொகை விவரமும் இந்தக் கடிதத்தில் குறிக்கப் பட்டிருக்கவேண்டும்.

ஃப்ளாட்டுக்காக நீங்கள் கொடுக்க வேண்டிய முழுத்தொகையை இந்தக் கடிதத்தில் குறிப்பிடுவீர்கள்தான். ஆனால் அது போதாது. ஒரு வேளை நிலத்தின் விலை, முத்திரைப்பணம், பதிவுக் கட்டணம், விற்பனை வரி, மெட்ரோ நீர் இணைப்புக்கான கட்டணம் ஆகியவற்றிற்கும் சேர்த்துதான் இந்த மொத்தத் தொகை என்று இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டிருந்தால், அதையும் மறக்காமல்

இந்தக் கடிதத்தில் சேர்த்து விடுங்கள்.

பெரு நகரங்களில் எதுபோன்ற தெருக்களில் எந்த அளவு பரப்பளவு கொண்ட ஃப்ளாட்களைக் கட்டிக் கொள்ளலாம் என்பதற்கு விதிமுறைகள் உண்டு.

சென்னையைப் பொறுத்தவரை வீடு கட்டுவதற்கான மனை என்பது, குறைந்தது 90 சதுர மீட்டர் பரப்பு கொண்டதாக இருக்க வேண்டும்.

ஒரு தெருவின் அகலம் என்பது இந்த விதத்தில் மிக முக்கியமானது. அது 30 அடி என்றால், குடியிருப்புப் பகுதி மூன்றடுக்கைத் தாண்டக் கூடாது. அதிகபட்சம் நான்கு ப்ளாட்கள்தான் இருக்கலாம். (சாலை அகலம் என்பது ஒரு பக்கத்து எல்லைச் சுவரிலிருந்து அதன் எதிர்ப்புறத்து எல்லைச் சுவர் வரை உள்ள தூரம்).

வீட்டுமொழி!



செங்கற்களால் கட்டப்படுவது வீடு, மனங்களால் கட்டப்படுவதே இல்லம்

இரண்டு மாடிகளை விட அதிகமாகவும், நான்கு ப்ளாட்களை விட அதிகமாகவும் இருந்து அதன் உயரம் 15 மீட்டரைத் தாண்டவில்லையென்றால், அதை 'ஸ்பெஷல் பில்டிங்' என்கிறார்கள்.

பதினைந்து மீட்டரை விட அதிக உயரம் கொண்டதாகவோ நான்கு மாடிகளை விட அதிகமானதாகவோ இருந்தால், அதை 'அடுக்கு மாடிக் கட்டடம்' (Multi Storey Building) என்கிறார்கள்.



கீழ்த்தளம் முழுவதும் கார் பார்க்கிற்காக மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தாலும், அதுவும் ஒரு தளமாகத்தான் மேலே கூறிய முறைகளில் கணக்கெடுத்துக் கொள்ளப் படும்.

கட்டடத்தில் லிஃப்ட் இருந்தால், அதற்காக மொட்டை மாடியில் எழுப்பப்பட்டிருக்கும் இயந்திர அறை, மொட்டை மாடியைச் சுற்றியுள்ள கைப்பிடிச் சுவர் ஆகியவை எல்லாம் கட்டடத்தின் உயரத்தில் கணக்கெடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. என்றாலும், இரு மாடி கொண்ட கட்டடத்தின் உயரம் இதையும் சேர்த்து இருபது மீட்டரைத் தாண்டக் கூடாது.

பழங்காலத்து வீடுகளில் பல, ஒன்றோடு ஒன்று மிக நெருக்கமாக அமைந்திருப்பதுண்டு. ஒரே பொதுச் சுவரைக் கொண்டு உருவான வீடுகளையும் நிறையப் பார்த்திருக்கலாம். ஆனால் இப்போது அதற்கெல்லாம் அனுமதியில்லை. ஒரே கட்டடத்தில் எழுப்பப்படும் ஃப்ளாட்கள் என்றால், அந்தக் கட்டடத்துக்கு முன்புறமும், பின்புறமும், பக்கவாட்டிலும், குறிப்பிட்ட இடைவெளி விட்டுத்தான் கட்டடம் கட்டலாம்.

முன்னால் விட வேண்டிய இடம்

தெருவின் அகலம்	விட வேண்டிய இடம்
அ) 10லிருந்து 15 மீட்டர்கள்	3.5 மீட்டர்
ஆ) 15க்கு மேல் ஆனால் 30க்குள்	4.5. மீட்டர்
இ) 30க்கு மேல்	6 மீட்டர்

மூலையில் அமைந்த மனையாக இருந்தால், அந்த இரண்டு தெருக்களில் எதை நாம் நுழைவுத் தெருவாக வைத்துக் கொள்ளப் போகிறோம் என்பதை வைத்து இது தீர்மானிக்கப்படும்.

கட்டடத்துக்குப் பக்கவாட்டில் விட வேண்டிய வெற்றிடம்.

கட்டடத்தின் உயரத்தின் மூன்றில் ஒரு பங்காவது பக்கவாட்டில் விட வேண்டும்.



''என் மாமனார் மாமியாருக்குக் கீழ் போர்ஷனும், எங்களுக்கு மேலேயும்னு சமமாக் கட்டிக்கிட்டோம்.''

ஆனால் அதே சமயம் குறைந்தது 3.5 மீட்டர் இருக்க வேண்டும்.

கட்டடத்துக்குப் பின்புறம் விட வேண்டிய வெற்றிடம்.

அ) 15 மீட்டர் வரை – 3.5 மீட்டர்

ஆ) 15லிருந்து 30 மீட்டர் வரை – 4மீட்டர்

இ) 30 மீட்டருக்கு மேல் – 4.5 மீட்டர்

ஒப்புதல் பெறப்பட்ட ஃப்ளாட்டின் திட்ட வரைபடத்திலிருந்து கொஞ்சம் மாறுதலாகக் கட்டிக் கொள்ளலாமா?

எந்த மாதிரி அளவுகள் கொண்ட ஃப்ளாட்டை CMDA (அல்லது பெருநகராக இல்லாதபோது டவுன்ஷிப் மற்றும் முனிசிபாலிடி) அனுமதித்திருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் நாம் ஃப்ளாட் எழுப்ப வேண்டும்.



ஆனால் வரைபடத்திலிருந்து சுமார் ஐந்து சதவீதம்வரை மாற்றிக் கட்டிக் கொள்வதை நடைமுறையில் அனுமதிக்கிறார்கள். வெளிப்புறச் சுவரின் அளவை மாற்றாமல், உள்ளுக்குள் அமைந்த அறைகளின் அளவை நாம் மாற்றிக் கொள்ளலாம். பால்கனியின் இடத்தை சற்றே மாற்றியமைப்பது, அதிகப்படியாக ஜன்னல் வைப்பது, ஆகியவை ஒப்புக் கொள்ளப்படுகின்றன.

முறையாக வீட்டை வழங்கிய பின்னரும் ஃப்ளாட்டைக் கட்டிக் கொடுத்த நிறுவனத்திற்குச் சில பொறுப்புகள் உண்டு.

உங்கள் அடுக்குமாடிக் குடியிருப்பில்

உள்ள எல்லா உரிமையாளர்களும் (வீட்டைக் கட்டி முடித்து ஒப்படைத்ததும்) ஒரு சங்கத்தை நிறுவ வேண்டும். இந்த சங்கத்திடம், கட்டுனர் சில வரைபடங்களை ஒப்படைக்க வேண்டும். அந்த வரைபடத்தில் கட்டடத்தின் அமைப்புமுறை, மின்சாரக் கம்பிகளின் அமைப்புமுறை, குடிநீர்க்குழாய் மற்றும் சாக்கடைகளின் அமைப்புமுறை ஆகியவை காணப்படும்.

முடிக்கப்பட்ட கட்டுமானம் எல்லா விவரங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட பிளானின்படி உள்ளது என்பதை உறுதி கூறும் நிறைவுச் சான்றிதழை (Completion Certificate) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திலிருந்து பெற்று, இந்த சங்கத்துக்கு அளிக்க வேண்டும்.

கட்டட வரைபடங்கள் இல்லையென்றால், வருங்காலத்தில் உங்கள் வீடு மற்றும் குடியிருப்பைப் பராமரிப்பது கஷ்டம். அதேபோல் மேற்கூறிய நிறைவுச் சான்றிதழ் உங்களிடம் இருந்தால், பிற்காலத்தில் கட்டடம் எந்தக் காரணத்திற்காகவும் இடிக்கப்படக் கூடிய ஆபத்து இருக்காது.



வீட்டின் மிக அழகான பொருள் குழந்தைகள்!

பத்திரங்கள் பதிவு செய்வதைக் குறித்த சில பரவலான சந்தேகங்கள்.

- **வீட்டு விற்பனைப் பத்திரத்தையோ**



படம்: யோகா

அல்லது வீட்டை விற்பதற்கான ஒப்பந்தத்தையோ நாமே எழுதிக் கொள்ள முடியுமா? அப்படி எழுதப்பட்ட ஒப்பந்தப் பத்திரங்கள் சட்டப்படி செல்லுமா?

ஒரு நிலத்தையோ வீட்டையோ விற்பவர் அவராக எழுதும் பத்திரம் சட்டப்படி செல்லுபடியாகும். லைசன்ஸ் பெற்ற பத்திர எழுத்தாளர்களின் உதவியுடன் இவற்றை வடிவமைத்தால், பல விஷயங்களில் தெளிவு கிடைக்கும், அவ்வளவு தான்.

- **சட்ட ஞானம் இல்லாத ஒருவர் ஒரு பத்திரத்தை எழுதவேண்டுமென்றால் அதற்கு உதவும் வகையில் ஏதாவது வழிகாட்டி நூல்கள் உள்ளனவா?**

பதிவுக் கையேடு (Registration Hand Book) என்பது கடைகளில் கிடைக்கும். தவிர பரவலான பத்திரங்களின் மாதிரிகள் அதற்கான வலைத் தளத்தில் (http:/regn.tn.nic) கிடைக்கும். அதிலிருந்து டவுன்லோட் செய்து கொள்ளலாம்.


- **தேவைப்படும் தொகைக்கு ஸ்டாம்ப் பேப்**

பர்கள் அடிக்கடி கிடைக்காமல் போகிறதே. என்ன செய்ய?

பத்திரத்தாள்கள் விற்பவர்களில் சிலர் வேண்டுமென்றே இவற்றைப் பதுக்கி, செயற்கையான முறையில் டிமாண்ட் ஏற்படுத்தி, அதிக விலைக்கு விற்கிறார்கள். நிஜமாகவே குறிப்பிட்ட தொகைக்கான ஸ்டாம்ப் பேப்பர் கிடைக்கவில்லையென்றால், நீங்கள் இப்படியும் செய்யலாம்– வெள்ளைத்தாளில் பத்திரத்தை எழுதி அதன் கூடவே பதிவுக் கட்டணத்தை ரொக்கமாகவோ, வரைவோலையாகவோ, கொடுக்கலாம். சார் பதிவாளர் இதற்கான சான்றிதழைப் பத்திரத்திலேயே எழுதி கையெழுத்திட்டு முத்திரை பதிப்பார்.

● **ஐம்பது ரூபாய்க்கான ஸ்டாம்ப் பேப்பர் தேவைப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அதை விற்பவருக்கு எவ்வளவு கமிஷன் தரவேண்டும்? ஏனென்றால் இடத்துக்குத் தகுந்த மாதிரி இதை விதவிதமாக வசூலிக்கிறார்கள்.**

பரவலாக இந்தப் பழக்கம் இருக்கிறது என்றாலும் இது ஒரு சட்டமீறல். புகார்



"ஏன் புதுசாக் கட்டின வீட்டுக்குக் குடியேறாம மாட்டுக் கொட்டகையில குடித்தனம் பண்றீங்க?"

"என்ன செய்ய, கிரகப் பிரவேசத் தன்னிக்கு உள்ளே நுழைஞ்ச பசுமாடு வெளிய வரமாட்டேங்குதே."



கொடுக்கலாம். ஏனென்றால் ஸ்டாம்ப் பேப்பருக்கான கமிஷன் தொகையை அரசே அதன் உரிமம் பெற்ற விற்பனையாளர்களுக்குத் தந்து விடுகிறது. எனவே ஸ்டாம்ப் தொகையை மட்டும் நீங்கள் தந்தால் போதுமானது.

● **வில்லங்கச் சான்றிதழால் என்ன பலன்?**

ஒரு குறிப்பிட்ட சொத்து தொடர்பான (அதாவது விற்பனை, அடமானம், குத்தகை போன்ற) அத்தனை விவரங்களும் வில்லங்கச் சான்றிதழில் இடம் பெறும். கடந்த எவ்வளவு வருடங்களுக்கான இது போன்ற விவரங்கள் தேவையோ, அவ்வளவு காலத்துக்கான வில்லங்கச் சான்றிதழைப் பெறலாம். அதிக வருடங்களுக்கான விவரங்கள் தேவையென்றால், சற்றே அதிகத் தொகை கட்ட வேண்டும். வில்லங்கச் சான்றிதழை வாங்குவதையும், அதில் உள்ள விவரங்களை நன்கு புரிந்து கொள்வதும், பின்னாளில் பல சிக்கல்களைத் தவிர்க்கும்.

● **வில்லங்கச் சான்றிதழ் பெறுவதற்கு ரொம்ப நாள் ஆகிறதே?**

பல ரெகார்ட்டுகளைத் தேடி எடுக்க வேண்டியுள்ளது என்பதாலும், அரசு அலுவலகங்களுக்கே உள்ள மெத்தனம் மற்றும் வேறுவிதமான எதிர்ப்பார்ப்பின் காரண

மாகவும், இப்படி ஆவது உண்டு. ஆனால் முக்கிய நகரங்களில் 'ஸ்டார்' என்ற வசதி உள்ள இடங்களில் (Simplified and Transparent Administration of Registration என்பதன் சுருக்கமே STAR) நீங்கள் உடனடியாக வில்லங்கச் சான்றிதழைப் பெற முடியும். அதுவும் சென்னையில் உள்ள பல சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு வில்லங்கச் சான்றிதழுக்கான விண்ணப்பத்தை, உங்கள் வீட்டிலிருந்தே வலைத்தளத்தின் மூலமாக (http://igregn.tn.nic.in) அனுப்ப முடியும். உங்கள் வீடு தேடி தபாலில் அந்தச் சான்றிதழ் வந்து சேரும்.


• ஒரு வீட்டை விற்பதற்கு பதிலாக வெகுமதியாக அளித்து விட்டால் (அல்லது அப்படியளிப்பதுபோல் நடித்து விட்டு, கணக்கில் வராத விதத்தில் பணம் வாங்கிக் கொண்டால்) ஸ்டாம்ப் மற்றும் பதிவுக் கட்டணத்திலிருந்து தப்பித்து விடலாம் இல்லையா?



"எப்படித்தான் வில்லங்கமே இல்லாத வீடுன்னு சான்றிதழ் தந்தாங்களோ!"

பதிவுக் கட்டணம் மற்றும் ஸ்டாம்ப் பத்திரக் கட்டணம் ஆகியவை, ஒரு சொத்து எவ்வளவு தொகைக்கு விற்கப் படுகிறது என்பதைப் பொருத்தது அல்ல

வீட்டுமொழி!



ஒரு வீடு தரையின் மீது நிற்கவில்லை. பெண்ணின் மீதே நிற்கிறது.

(பழங்காலத்தில் அப்படியிருந்ததுண்டு). மார்க்கெட் மதிப்பீடு எவ்வளவு என்பது ஒவ்வொரு பகுதிக்கும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் எவ்வளவுதான் குறைவான தொகைக்கு நிலத்தையோ வீட்டையோ வாங்கினாலும், இந்தத் தொகையைப் பொறுத்துதான் ஸ்டாம்ப் மற்றும் பதிவுக் கட்டணங்கள் கணக்கிடப்படும். இப்போதைக்கு ஒரு சொத்து விற்கப்பட்டாலும் சரி, வெகுமதியாக அளிக்கப்பட்டாலும் சரி அதன் நிர்ணயிக்கப்பட்ட மார்க்கெட் மதிப்பீட்டில் 12 அல்லது 13 சதவிகிதம் ஸ்டாம்ப் கட்டணமாகவும், ஒரு சதவிகிதம் பதிவுத் தொகையாகவும் கட்டியாக வேண்டும்.

விற்பனைக்கான ஒப்பந்தம் என்றால், அதை இருபது ரூபாய் மதிப்புள்ள ஸ்டாம்ப் பேப்பரில் எழுத வேண்டும். பதிவுத் தொகையாக அட்வான்ஸ் தொகையில் ஒரு சதவீதம் வசூலிக்கப்படும்.

● **நான் தமிழ் நாட்டைச் சேர்ந்தவன். ஆனால் அமெரிக்காவில் வேலை செய்கிறேன். தமிழகத்தில் நிலம் வாங்கி அதை என் பெயரில் ரெஜிஸ்டர் செய்ய ஆசை. நானே நேரடியாக வந்து சார் பதிவாளர் அலுவலகத்தில் கையெழுத்துப் போட்டால்தான் இப்படி வாங்க முடியுமா?**

பொதுவாக ஒரு சொத்தை வாங்குபவரும் விற்பவரும் நேரடியாக சார் பதிவாளர் அலுவலகத்துக்கு வந்து பத்திரங்

களில் கையெழுத்திடுவதுதான் வழக்கம். ஆனால் இவர்கள் நேரடியாகத்தான் வரவேண்டும் என்பதில்லை. தனக்கு நம்பிக்கையான ஒருவருக்கு பவர் ஆஃப் அட்டார்னி கொடுத்தால், அவர் கையெழுத்திட்டாலும் போதுமானது.

● பொதுவாக பவர் ஆஃப் அட்டார்னி என்பது எவ்வளவு தொகைக்கான ஸ்டாம்ப் பேப்பரில் எழுதப்பட்டிருக்க வேண்டும்?

நூறு ரூபாய்.

உன் சமையலறையில்... நான்...

"கேஸ் அடுப்பு வைக்க சமையல் மேடை, பாத்திரம் பண்டம் வைக்க இரண்டு ஷெல்ஃப்... ஆப்பக் கூடை மாட்ட ஒரு ஆணி, கிரைண்டரோ, மிக்ஸியோ போட ஒரு ப்ளக் பாயிண்ட்... இது போதாதா... நாம்ப சமைக்கிற லட்சணத்துக்கு?" என்று சமையலறை பிளானை மேஸ்திரியிடமே விட்டு விடும் காலமெல்லாம் கொலம்பியா ஏறிப் போயாச்சு!

பளபளக்கும் பங்களாவோ, டீலக்ஸ்



ஃபிளாட்டோ, தவணை முறை வீடோ, பாரபட்சமே இல்லாமல் ஏழைக்கு ஏற்ற எள்ளுருண்டையாக பெஸ்ட் டிரஸ்ட் சிக்கனையே, ஸாரி கிச்சனையே பெற விரும்புகிறார்கள். அதற்கான பிளான் போட்டு, கைத்திறனாலும் வசீகரமான பில் தொகையாலும் அசத்தும் கிச்சன் கிங்குகளுக்கு சென்னையில் ஏக கிராக்கி.

'மாடுலர் கிச்சன்ஸ்', ஸ்லீக் சொல்யூஷன்ஸ்', 'ஃப்ரெண்ட்லி கிச்சன்' போன்ற சமையலறை குறித்த சமாசாரங்கள் கிடைக்கும் கடைகளை, பெண்கள் சலிக்காமல் துருவித் துருவி ஆராய்கிறார்கள்.

'கம்ப்ளீட் கிச்சன்' என்றால் என்ன என்று 'கான்சப்ட்ஸ் இன்டீரியர் டிசைனர் மோகன் ஜங்காவிடம் கேட்டபோது....



• மோகன் ஜங்கா

ஸிவிங் இன் ஸ்டைல்' என்ற ஒரு விஷயம் மக்களிடையே பரவி விட்டதன் அடையாளம்தான், இதுபோன்ற அலங்கார ஆர்வங்கள். முன்பெல்லாம் தெருவையே அடைத்து மூன்று கட்டு வீடு கட்டுவார்கள். ஆனால் இப்போது எண்ணூறு சதுர அடிக்குள் குடும்பமே புழங்க வேண்டியிருக்கிறது. அந்தச் சிறிய பரப்பளவை அங்குலம் அங்குலமாகப் பயனுள்ளதாகவும், சௌகரியமாகவும், லேட்டஸ்டாகவும் அலங்கரிக்க ஆசைப்படுவதில் தப்பேயில்லை'' என்றார்.

நவீன சமையலறையின் அடிப்படை இலக்கணம் என்ன?

• சௌகரியமாக நடமாடக்கூடிய

அளவுக்கு சற்றே பெரிதான பரப்பளவு.

- தூய்மையான காற்றும், சூரிய ஒளியும் இயற்கையாக புகுவதற்கான ஜன்னல் அமைப்புகள்.
- வாகான சமையல் மேடை. இடப்புறம் சிங்க். வலப்புறம் ஷெல்ஃபுகள்.
- தரமான மின் இணைப்புகள். வாட்டர் புரூஃப் பிளைவுட், மர வேலைப்பாடுகள்.
- எக்ஸாஸ்ட் ஃபேன், கிரைண்டர், ஃபிரிஜ், மைக்ரோ அவன், மிக்ஸி, டிஷ் வாஷர் என எல்லாமே உள் அடங்கியிருக்கும்படியான ஸ்பேஸ் மேனேஜ்மென்ட் டெக்னிக்.

சமையலறை அலங்காரம் என்று வரும் போது கொஞ்சம் மெனக்கெட வேண்டியிருக்கும்.

இதோ சில டிப்ஸ்!

* சமையலறை என்றாலே உங்கள் வோட்டு, பளிச் வெண்மை நிறத்துக்குத்



தான். வெள்ளை வர்ணம் பூசும் போது, இடம் சற்றுப் பெரிதாகத் தெரியும் என்பது டபுள் சௌகரியம்!



● சுவரில் ஒட்டும் டைல்ஸ்களில் வெளிர் நீலம், சாம்பல், வெளிர் மஞ்சள் போன்ற நிறங்கள் அதிக வெளிச்சத்தைப் பிரதிபலிப்பதோடு உயர் ரசனையாகவும் இருக்கும்:

● அழகான சமையலறையை வடிவமைத்து விட்டு, ஒட்டை உடைசல் சாப்பாட்டு மேஜையைப் பிரியாமல் இருந்தால் எப்படி? வட்டமோ, செவ்வகமோ, உயர்தர மரம் அல்லது மெட்டல் டைனிங் டேபிளை ஓரமாகப் போட்டு வைப்பதே மதிப்பு. கூடவே மடிக்கக்கூடிய நாற்காலிகள், தகுந்த குஷனுடன் அவசியம்!

● கப்போர்டுகள் அனைத்தையும், நம்முடைய பார்வையின் நேர் கோணம் படும் உயரத்தில் அமைக்க வேண்டும். லாஃப்டுகளை, கையை உயரத் தூக்கும் உயரத்திலும், கீழ் ஷெல்ஃபுகளைச் சற்றே தாழக் குனியும் மட்டத்திலும் வடிவமைக்க வேண்டும். மாற்றி அமைத்தால் போச்சு!

● மூன்று அல்லது நான்கு கேஸ் பர்னர்களுடன், ட்ரிப்ளரிங் பர்னர், பார்-பி-க்யூ, டீப் ஃப்ரையர் போன்ற சகல வசதிகளும் கொண்ட 'பில்ட் இன் ஹாப்ஸ்' கிடைக்கின்றன. 'பில்ட் இன் அவன்கள்' தனி ரேஞ்ச்!

● ஞாயிற்றுக் கிழமையானால் ப்ளீச்சிங் பவுடர் போட்டு சமையலறை (அ) சிங்கை, கழுவிவிடும் துர்ப்பாக்கிய நிலைமை இனியும் தேவையா? 'டபுள் ப்வுல்',

'ஆண்ட்டி ஸ்க்ராச் சிங்க்' என வித விதமாக ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் சிங்குகள் தயாராகக் கிடைக்கும் போது...

- 'நிறைய சாமான் வைக்கணும். இடம் சின்னதா இருக்கே?'' என்று யோசனை செய்ய வேண்டாம். 'பான்ட்ரி புல்அவுட் யூனிட்', 'மேஜிக் கார்னர் யூனிட்', 'மல்டி பர்பஸ் ரேக்' என அட்ஜெஸ்ட் செய்து விட லாம்!

- எலக்ட்ரிக் புகைக் கூண்டு அமைப்பது உங்கள் விருப்பம் என்றாலும், நிச்சயம் திரைச்சீலைகள் சமையலறையில் தேவை யில்லை. பார்க்க கவர்ச்சியாக இருந் தாலும், பாதுகாப்பு கருதி திரைச் சிலை ஆசைக்கு ஸ்க்ரீன் போட்டுடுங்க.



உன் பக்கத்து வீட்டுக்காரனை
நேசி
ஆனால் நடுவே குறுக்குச்
சுவரும் இருக்கட்டும்.

சுவையாகச் சமைத்து, அன்புடன் பரிமாற ஒரு நள பீம கணவனும் கிடைத்து விட்டால், உம்... நீங்க அதிர்ஷ்டசாலிதான்!

உள்ளே வெளியே...!

சென்னை, ராஜ் பவன் தாண்டி, சைதாப் பேட்டை கோர்ட்டு இருக்கிறது தெரியு மில்லையா...? அதன் பின்னாலிருக்கும் டெம்பிள் அவென்யூவில் நுழைந்தால், யாரையும் எளிதில் வசிகரித்து விடுகிறது அந்தக் கட்டடம்.

ஓலை வேயப்பட்ட கூரை, மூங்கில்

கேட், பூஞ்செடிகள், செம்மண் கட்டிய மாக்கோலம், பச்சைத் தோரணம், சுடர் விட்டு எரியும் அகல் விளக்குகள் என்ற கெட்டப்பில் இருக்கும் அந்த வீட்டைப் பார்த்து 'ஏதோ கோயில்' என்று நினைத்து வெளிப்புறமிருந்து கும்பிடு போட்டு, கன்னத்தில் போட்டுக் கொண்டு நடையைக் கட்டி விடாதீர்கள்.

அது கோயில் அல்ல... வீடு. அதுவும் சாதா வீடு அல்ல... கலை இல்லம்.

• பிம்பா • கலைக் குடிசை..



'பிம்பா... தி ஆர்ட் ஹட்' என்ற மரத் தட்டி அறிவிப்புப் பலகையைப் பார்த்த படியே நுழையத் தயங்குபவர்களையும், "உங்களுக்குக் கலை பிடிக்குமா? உள்ளே வாங்களேன்" என்ற அன்பான, ஸ்லேட் வாசகம் உள்ளே போக வைத்து விடுகின்றது.

மாமரம், ஊஞ்சல், துளசி மாடம் தாண்டினால் அட... அது என்ன? பூக்கள் இல்லாவிட்டாலும் அல்லிக் கொடி செழுமையாகச் சிரிக்கிறது. அல்லியிடம் சொல்லிக் கொண்டே உள்ளே போங்க!


வீட்டு வாசலில் நின்றாகி விட்டது. காலிங் பெல்லைத் தேடி ரொம்ப அவஸ்தைப் படாதீர்கள். ஸ்விட்ச் இருக்க வேண்டிய இடத்தில் ஒரு மாட்டுச் சலங்கை கம்பியில் கட்டப்பட்டு இருப்பது தெரிகிறதா...? அதைப் பிடித்து இழுத்தால்

போச்சு...! வீட்டுக்குள் 'டங்... டங்' என்ற கோயில் மணி சப்தம், ஜலதோஷக் குரலில் ஒலிக்கும்.

அட... கதவுகூட பித்தளைப் பிடியெல்லாம் வைச்சு, அந்தக் கால டைப்பில்... பேஷ்... பேஷ்.. ரசிப்பதற்குள் கதவு திறக்கப்பட்டு, வெளிப்படுகிறார் அந்தப் பெண்மணி. அடவு கட்டி ஆடி விடுவார் போன்ற அழகிய தோற்றம்...

"வாங்க...பிம்பா உங்களை வரவேற்கிறது" என்று புன்னகை பூக்கிறார். அப்போதுதான் கவனிக்கிறோம் அவரது உடையை. பருத்திப் புடைவை, மூக்குத்தி, அரக்கு வளையல், பித்தளைக் கம்மல் என எளிமையாக மிளிர்கிறார்.

"இவர் என்னுடைய கணவர் தீபக்... எம்.பி.ஏ. பட்டதாரி... எங்களிருவருக்கும் இயல்பாக இருந்த கலை ஆர்வம்தான் எங்களை மணவாழ்விலும் இணைத்தது"



''கொரிய வாஸ்துப்படி இதை வளர்த்தாதான் வீட்டுக்கு நல்லதாம்.

என்று அவர் அறிமுகப்படுத்திய இளைஞரும், மனைவிக்கு ஏற்றபடியே காட்டன் குர்தாவில், சின்னக் குடுமியுடன்... கூடத்தில் நுழைகிறோம். பழைமையும் புதுமையும் கலந்த 'பிம்பா'வின் அழகுணர்ச்சி ஒவ்வொரு அங்குலத்திலும்



**சோம்பல் வாசலில் நுழைந்தால்,
செல்வம் பின் வாசலில் போய் விடும்.**

'உள்ளேன் ஐயா' சொன்னது.

நட்டுவாங்கக் கட்டைகளையும், வீணையின் பிருடைகளையும் இணைத்த ஸ்டாண்ட் சுவரில் மாட்டப்பட்டுள்ளது. திரைச் சீலைகளுக்குப் பதிலாக பத்தமடைப் பாய்கள். வீட்டில் புடைக்கப் பயன்படுத்தப்படும், சாதாரண முறங்களைக்கூட விடவில்லை. மூன்று முறங்களை லாகவமாக இணைத்து, தொங்க விட்டிருக்கிறார்கள். அழகிய ஹாங்கிங் ஸ்டாண்ட் தயார். ராட்டினம்கூட கலைப் பொருளாகி, கவனத்தை ஈர்க்கிறது.

"எங்கள் குடும்பமே கலைகளில் ஊறித் திளைக்கும் பின்னணி கொண்டதுதான். அம்மா உமா நாகராஜ் கர்நாடக இசைப் பாடகி, இசையில் மட்டுமல்ல, எம்பிராய்டரி. டெய்லரிங், கை வேலைப்பாடு என பல விஷயங்களில் என்னுடைய குரு அவர்தான். பரத நாட்டியக் கலையின் மீது கொண்ட காதலால், திருமணமே வேண்டாம் என்றுதான் இருந்தேன். ஆனால் தீபக்கைச் சந்தித்ததும், மனம் மாறிவிட்டது. பின்னே...? என்னுடைய கலை ஆர்வத்தை மிகவும் மதிக்கக் கூடியவராக மட்டுமல்லாது, காரியங்கள் யாவிலும் உறுதுணையாக நிற்கும், ஒத்த மனப்பாங்கு உடையவரல்லவா அவர்?"

என்று மலரும் நினைவுகளில் இனிதே மூழ்கினார் தீபிகா.

கலாக்ஷேத்ரா பரதமணியான தீபிகா, வடநாட்டில் மிகப் பிரபலமாம். இவருடைய குருவான லீலா சாம்ஸனுடன், இணைந்து நிறைய நாட்டிய நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார். "என்னுடைய வேலை விஷயமாகத்தான் சென்னையில் செட்டில் ஆனோம். பழைமையான விஷயங்களைப் போற்றும் எங்களுடைய அழகுணர்ச்சியின் காரணமாக, எங்கள் வீட்டையே கலைப் பெட்டகமாக வைத்திருந்ததைப் பார்த்த நண்பர்களும் உறவினர்களும் ஊக்கமளித்ததில், 'பிம்பா' கலைக் குடிசை ஐடியா பிறந்தது" என்றார் தீபக்.

"பழைய மாடலில், புதிய அணுகுமுறையில், நவீன உத்தியுடன், வீட்டு அலங்காரம் செய்து தருகிறோம். கலை உணர்வு ததும்ப வீட்டை அலங்கரிக்க



• தீபிகா • தீபக்

நிறையப் பேருக்கு ஆசையிருந்தாலும், நேரமோ, தக்க ஆட்களோ கிடைக்காமல் திணறுகிறார்கள். அத்தகையவர்களுக்கு நாங்கள் உதவுகிறோம். இடத்தையும், பட்ஜெட்டையும் பொறுத்து, ரசனைக்குரிய வீட்டை அமைத்துத் தருவோம்" என்கிறார்கள் தீபிகா - தீபக்.

"பிம்பா' என்று பெயர் வரக் கார

ணம் என்னன்னு சொல்லுங்கள்'' என்று கேள்வி கேட்காவிட்டால், எப்படி? கேட்டு விட்டோம்.

'வீடு என்பது அதன் உள்ளே வசிப்பவர்களின் உணர்வுகளை அப்படியே பிரதிபலிக்கும் பிம்பம் அல்லவா? அத

''நான் அப்பவே சொன்னேனில்ல ரொம்பப் பெரிய திருஷ்டிப் பூசணிக்காயைக் கட்டாதீங்கன்னு.''



னால்தான் அப்படியொரு பெயர்'' என்ற அழகான பதில் வந்தது.

பருத்தி, சணல், கை தயாரிப்புக் காகிதம், கல், மண், டெர்ரகோட்டா, கண்ணாடி, உலோகம், பிரம்பு என திபிகா தீபக்கின் கற்பனையில் விரிந்த கலைப் பொருட்களை ரசிக்க அரைநாள் லீவு எடுக்க வேணும். சி.எல். இருக்கா?

கலைஞர்களுக்கேற்ற கலைக் குடிசை தான்! பாரம்பரியம் விரும்புவோர், வாழ்க பழகுடன்!

இது பெயிண்ட் சமாசாரம்!

வீட்டின் முழு அழகும் வர்ணம் பூசி, பளிச்சென்று வைத்துக் கொள்வதில்தானிருக்கிறது என்பதில் இரண்டாம் யோசனை ஏதாவது இருக்குமா என்ன? நீங்கள் பிரஷ்ஷைக் கையிலெடுக்கும் முன், சில குறிப்புகள் தந்து விடுகிறோம். அப்புறம், பச்சைக் கலரு ஜிங்குசா, மஞ்சள் கலரு ஜிங்குசா...

ஜிங்குசா!

● எப்போது பெயிண்ட் பூசுவது என்று கேட்டால், கையில் நாலு காசு இருக்கும்போது, என்று பதில் சொல்லாதீர்கள்... மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வீடு முழுமைக்கும் பெயிண்ட் அடிக்க வேண்டும். இதற்காக தனி பட்ஜெட் போட்டு விடுவது நல்லது.

● மழைக் காலத்தில் (அப்படியெல்லாம் ஒரு காலம் உண்டா என்ன?) பெயிண்ட் பூசுவதைத் தவிர்ப்பது நல்லது. ஈரமான சுவரில் பெயிண்ட் அழுத்தமாகப் பிடித்துக் கொள்ளாது என்பதுடன், எளிதில் உலரவும் செய்யாது.

● தரமான வாஷபிள் பெயிண்ட்டுகள் சிறப்பானவை மட்டுமல்ல, சிக்கனமானவையும் கூட. பெயிண்ட் பூசிய சுவரில் அழுக்கோ, கறையோ பட்டு விட்டால், சிறிய வெள்ளைத் துணியில், சோப்பு நீர் தொட்டு மிக மென்மையாகத் துடைத்து விட்டால், மாசு நீங்கி விடும்.



● பெயிண்ட் அடிக்கும் முன்பு, 'பட்டி' பார்த்துப் பூச வேண்டும். சுவரில் தூசு, அழுக்கு, சொர சொரப்பு, விரிசல் என எதுவும் இருக்கக் கூடாது.

தொகுப்பு: **ஜி.எஸ்.எஸ்.**

அனுராதா சேகர்

ஜோக்ஸ்: குல்லூ

அட்டை, படங்கள்: ஸ்ரீஹரி

மங்கையர் மலர்

பயனடைந்தவர்கள் பாராட்டு!

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka. Supplement to the Kalki issue Dated 9.3.2003



"விளம்பரம் வந்தவுடனேயே, போன் கால்களும், கடிதங்களும், ஜாதகங்களும் வரத் தொடங்க, எங்களுக்கு உற்சாகமும் நம்பிக்கையும் ஏற்பட்டது."

"திருமண மலர் பகுதியில் நீங்களும் விளம்பரம் செய்து பயனடையலாமே!"



"எனது தம்பிக்கு மறுமணம் செய்ய நினைத்த போது மலைப்பாக இருந்தது, யார் முன் வருவார்கள் என்று.

காரணம், தாரமிழந்த அவனுக்கு மூன்று குழந்தைகள்! ஆங்கில இதழ்களில் கொடுத்த விளம்பரத்தில் அவ்வளவாக பலன் கிடைக்கவில்லை. நண்பர் ஒருவரின் ஆலோசனையின்பேரில், அரை மனதுடன் மங்கையர் மலர் 'திருமண மலர் விளம்பரப் பகுதியில்' விளம்பரம் கொடுத்தேன். இறைவன் அருளாலும் மங்கையர் மலரின் உதவியாலும் தம்பிக்கு நல்ல மனைவியும், அவன் குழந்தைகளுக்கு நல்ல தாயும் கிடைத்தாள். எங்களுக்கு உதவிய 'மங்கையர் மலருக்கு' மனமார்ந்த நன்றி. இதேபோல் அனைவரும் மங்கையர் மலர் மூலம் விளம்பரம் செய்து பயனடைய, இறைவனைப் பிரார்த்திக்கிறேன்."

\- கோஸ். ராமன், டாக்டர் லக்ஷ்மணசாமி ரோடு, கே.கே. நகர், சென்னை - 78

'திருமண மலர்' பகுதியில் விளம்பரம் செய்ய அணுகவும் :

மானேஜர், திருமண மலர் பகுதி, கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை-97 தொலைபேசி : 22345622/23/24 தொலைநகல் : 044-2234 5621

மங்கையர் மலர் இன்டர்நெட் முகவரி : www.mangayarmalarmonthly.com

KALKI DESIGN STUDIO 2/03



இதுவரை கண்டிராத மடிசார் ரகங்கள்.
இப்பொழுது சென்னை சில்க்ஸில்...

அழகுக்கு அழகு சேர்க்கும்
மடிசார் புடவைகள் இப்பொழுது
நூற்றுக்கும் மேற்பட்ட
ரகங்களுடன் புதுவித
டிசைன்களில், இங்கு ஒன்பது
கஜம் புடவைகளுக்கென்றே
பிரத்யேக
தனிப்பிரிவு உள்ளது.
வேறெங்கும்
கிடைக்காத, நவீன
டிசைன்களுடன் கூடிய மடிசார்
புடவைகள் இங்கு மட்டுமே.

தி சென்னை சில்க்ஸ்™

தமிழகத்தின் மாபெரும் ஜவுளி சாம்ராஜ்யம்

• 23, உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை - 17. ✆ : 24310888

பட்டு சேலைகள் | பேன்ஸி சேலைகள் | சர்ட்டிங்ஸ் | சூட்டிங்ஸ் | ரெடிமேட் ஆடைகள்
டிரஸ் மெட்டீரியல்ஸ் | ஹேண்ட்லூம் | ஃபர்னிஷிங்ஸ்

Visit us at: www.thechennaisilks.com

• 74, புது மார்க்கெட் வீதி, திருப்பூர் - 4. ✆ : 2242888 • 558-560, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர் - 1. ✆ : 2391556
• 85-A, R.K.V. ரோடு, ஈரோடு - 1. ✆ : 2213270 Email: thechennaisilks@eth.net

Mudra: TCS: 7033: 03 Tam

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka



யார் நல்லவர்கள்?

நல்ல மனிதர்களுக்கு முதலில் மனம் முதிர்ச்சி அடைந்த பிறகு உடல் முதிர்ச்சி அடையும்.

எங்களது சுவையான இனிப்பு மற்றும் கார வகைகளை வாங்கி நல்லவர்களுக்கு விநியோகம் செய்யவும்.



திருமணம் மற்றும் விசேஷங்களுக்கு அதிரசம், அப்பம், திரட்டுப் பால், சீர் முறுக்கு, சீர் முள்ளுத் தேன்குழல் செய்து தரப்படும்.

இனிப்புகள் : அதிரசம், வெல்லச்சீடை, மனோகரம் உருண்டை, பொறி விளங்காய் உருண்டை, ரவாலாடு மற்றும் பல இனிப்புகள் செய்து தரப்படும்.
காரவகைகள் : சீப்புச் சீடை, ரயில்கட்டிடம், கார்ன் ப்ளக்ஸ் மிக்ஸர், தேன்குழல், முள்ளுத் தேன்குழல் மற்றும் பல கார வகைகள் செய்து தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2-வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை - 600 020.
போன் : 24915662, 24914213